
பொழிவு - 18
குவிப்பு - 08
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஓகஸ்ட் - 2015
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

## வாக்குச் சிதறும் நிலை குறித்து யாழ் ஆயர் கவலை!


### தமிழ்க் கூட்டமைப்புடனான சந்திப்பில் தமிழர் ஒற்றுமையை நிலைநாட்டவும் வலியுறுத்து



தமிழ்த் தேர்தல் மாவட்டங்களில் புதிது புதிதாகக் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளதால், தமிழ் மக்களின் வாக்குகள் சிதைக்கப்படுமோ என்று கவலையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் ஒற்றுமை நிலைநாட்டப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை தொடர்ந்தும் பேணுவதற்கு கடுமையாகப் பணியாற்ற வேண்டும். இவ்வாறு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கூட்டமைப்பினருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம். ஏ. சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட் ஆகியோர் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்புத் தொடர்பில் 'உதயனுக்கு கருத்துத் தெரிவித்த, வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட், பல்வேறு கட்சிகள் தன்னைச் சந்திப்பதாக எம்மிடம் ஆரம்பத்தில் தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியினர் தன்னைச் சந்தித்துப் பேசியதாகவும், அவர்களிடம் எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசுகளிடம் கூறுமாறு தெரிவித்ததாகவும் எங்களுடனான சந்திப்பில் ஆயர் குறிப்பிட்டார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### திருமலையின் புதிய ஆயராக நியமனம்பெற்ற நோயல் இம்மானுவேல் அடிகளார் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்



திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம் செய்யப்பட்ட அருட்பணியாளர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் கடந்த யூலை மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மேலும் 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு புதிய ஆயர் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்கும் திருச்சடங்கு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராகத்திருநிலைப்படுத்தப்பட்டு மறைமாவட்டத்தின் பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பாக மன்னா தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. (புதிய ஆயருடை வாழ்வு, பணி பற்றிய விரிவான கட்டுரையை 7ஆம் பக்கத்தில் காணலாம்.)

### கட்சியை நோக்காது தகுதியை நோக்குங்கள்


#### தேர்தல் குறித்து ஆயர் பேரவை

இம்மாதம் 17ஆம் திகதி இலங்கையில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பவர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சியை மட்டும் நோக்காமல், வேட்பாளர்களின் தகுதியையும் நோக்க வேண்டும் என இலங்கை ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்யமுன்னர் இக்காலத் தலைமுறை மற்றும் வருங்காலத் தலைமுறைகளின் நல்வாழ்வை ஒருமுறை எண்ணிப் பார்த்து, அதற்கிசைந்த வகையில் செயற்பட வேண்டும் என ஆயர்கள் தமது அறிக்கையில் கேட்டுள்ளனர்.

அரசியல் தலைமைப்பொறுப்புக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் கல்விப் பின்னணி, பொது நாகரீகம், நேர்மை, சட்டம், ஒழுங்கிற்கு மதிப்பு போன்றவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டுமென கேட்டுள்ள இலங்கை ஆயர்கள், வாக்களிப்பதற்கான குடிமக்களின் அடிப்படை பொறுப்புணர்வையும் வலியுறுத்தியுள்ளனர். தகுதியான நபர்களையே அரசுப் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை ஆயர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

### மடு அன்னையின் ஆவணித் திருவிழா



மடு அன்னையின் ஆவணித் திருவிழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆவணித் திருவிழா ஆரம்பித்துவைக்கப்படும். ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனையும், 15ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத்திருப்பலியும், அன்னையின் திருச்சுருவப் பவனியும், நிறைவாக திருச்சுருப ஆசீரும் இடம்பெறும்.

இவ்விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப்பரிபாலகர் அருட்பணி. எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மறைமாவட்டக் குருக்கள் மற்றும் ஏனைய மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

### குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்பணி. பெப்பி சோசை அடிகளார்






மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் சந்தியா ஜொய்ஸ் பெப்பி சோசை அடிகளார் இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார்.

வங்காலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்பணி. பெப்பி அவர்கள் தற்போது மன்னார் பேராலயத்தின் பங்குத்தந்தையாகப் பணியாற்றுகின்றார்.

இவர் அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் தனது யூபிலி விழா நன்றித் திருப்பலியை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி காலை 11.00 மணிக்கு ஒப்புக்கின்றார்.

குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காணும் அருட்தந்தை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.
(அடிகளாருடைய வாழ்வு மற்றும் பணிகள் பற்றிய குறிப்புகளை 14ஆம் பக்கத்தில் காணலாம்)

### துறவற வாழ்வில் வைரவிழாக் காணும் அருட்சகோதரி அமலி (தி. கு.)



திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அமலி டபரேரா அவர்கள் தனது துறவற வாழ்வில் 60 வருடங்களை நிறைவுசெய்து வைரவிழாவைக் கொண்டாடினார்.

கடந்த யூலை மாதம் 18ஆம் திகதி தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற யூபிலி விழாத் திருப்பலியின்போது அவர் இறைவனுக்கு நன்றிசெலுத்தினார். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை தலைமையில் யூபிலி விழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?



ஒரு வருடத்திற்கான
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

மனப்பொழிவு

பதிப்பாசிரியர் பகர்வது

## தேர்தல் திருவிழா

மீண்டும் ஒரு பாராளுமன்றத் தேர்தல்! அனல் பறக்கும் அறிக்கைகள், பீரங்கிப் பிரசாரங்கள் எனத் தேர்தல் திருவிழா நாட்டில் களைகட்டியுள்ளது. மக்களின் ஐக்கியத்தையும், வாக்குப் பலத்தையும் உள்நாட்டிற்கும், உலகிற்கும் மீண்டும் வெளிப்படுத்தவேண்டிய தீர்க்கமான தருணத்தில் தமிழ் பேசும் மக்கள் இருக்கின்றனர்.

### வெற்றுக் கோசங்கள் வேண்டாம்

"அரசியல்வாதிகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியானவர்களாகவே இருக்கின்றனர். ஆறு இல்லாத இடத்திலும்கூட பாலம் கட்டித்தருவதாக அவர்கள் உறுதிமொழி அளிப்பார்கள்" என்றார் ரஷ்ய அரசியல்வாதி நிகிற்றா குருசேவ்.

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வாக்கு வேட்டைக்காக அளித்துவரும் நடைமுறைச்சாத்தியமற்ற உறுதிமொழிகள் தொடர்பாகவே குருசேவ் இவ்வாறு கூறியிருந்தார். சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் அவர் சொன்ன இந்த வார்த்தைகள் இன்றும் இலங்கை அரசியல்வாதிகள் பலருக்குப் பொருத்தப்பாடு உடையதாகவே இருக்கின்றது.

எனவே தேர்தல் காலங்களில் அள்ளிவீசப்படும் வாக்குறுதிகள் மட்டில் வாக்காளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். சொல்வதைச் செய்கின்றவர்களாய், செய்வதைச் சொல்கின்றவர்களாய் இருக்கின்ற வேட்பாளர்களை வாக்காளர்கள் இனம்காண வேண்டும். தாம் முன்னர் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாதவர்களை வாக்காளர்களாகிய பொதுமக்கள் நிராகரிக்க வேண்டும்.

### சிந்தித்து செயற்பட வேண்டும்

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைவிட, யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்பதில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும். பணம், பொருள், மது போன்ற அற்ப சொற்ப சலுகைகளுக்காக நமது அரிய ஜனநாயக உரிமையான வாக்குரிமையை நாம் அடகுவைக்கக்கூடாது.

வாக்குக் கேட்டுவரும் கட்சிகளும், தனிநபர்களும், "எமக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்" என்றுதான் கேட்கிறார்கள். இதைத்தான் "சந்தர்ப்பவாத அரசியல்" என்றார்களோ தெரியவில்லை. பாராளுமன்ற உறுப்பினராக வரச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் ஐந்து வருடங்களுக்கு அவர்களை அசைக்க முடியாது.

ஆங்கில நாடகாசிரியர் பேர்னாட்ஷோ அரசியல்வாதிகளைக் குறித்து இப்படிச் சொல்கிறார். "தனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவன்போல நடிப்பவன்தான் அரசியல்வாதி. வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள். அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்"

### திருச்சபையும் சமூக நீதியும்

நீதிக்காகப் போராடுவதும் உலக உருமாற்றத்தில் பங்கேற்பதும் நற்செய்திப் போதனையின் இன்றியமையாப் பகுதியாகும் என்றும், எல்லாவிதமான அடக்கு முறைகளிலிருந்தும் மனிதனுக்கு விடுதலை அளிப்பது திருச்சபையின் பணியாகும் என்றும் 1971ஆம் ஆண்டு ஆயர் மன்றம் உரத்த குரலில் அறிக்கையிட்டுள்ளது. எனவே திருச்சபையும் திருப்பணியாளர்களும் சமூகநீதிக்காகப் பாடுபடவேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கள் இல்லை.

போதகர்கள் மனித மாண்பு, மனித சுதந்திரம், மக்களின் சமூகக் கடமைகளைப் பற்றிய திருச்சபையின் போதனையை விசுவாசிகளுக்கு விளக்க வேண்டும் எனத் திருச்சபைச் சட்டம் கூறுகின்றது (தி.ச. 768, பிரிவு 1). எனவே குருக்கள் தங்கள் மறையுரையில் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைப்பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

### கட்சி அரசியல் வேண்டாமே

அரசியல் என்பது வேறு, கட்சி அரசியல் என்பது வேறு. மக்களிடையே குருக்கள் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆனால் கட்சி அரசியலில் நேரடியாக ஈடுபடக்கூடாது. குருக்கள் கட்சி அரசியலில் செயலார்வத்துடன் பங்கேற்பதையும் அல்லது தொழிற்சங்கங்களை இயக்குவதையும் திருச்சபைச் சட்டம் தடைசெய்கின்றது (தி.ச. 287, பிரிவு 2).

கட்சி அரசியல் மக்களைப் பிளவுபடுத்துகின்றது. மக்களைப் பிளக்கும் சக்தியாக அல்ல, மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாகவே குருக்கள் செயற்படவேண்டும்.


எமது மூதாதையர் ஆதரித்த கட்சி, உறவினர், நண்பர் அங்கம் வகிக்கும் கட்சி என்ற தனிப்பட்ட விருப்புவெறுப்புக்கு அப்பால் நின்று, நமது சமூக, தேசிய் கடமையை மனதிலிருத்தி பொறுப்புடன் வாக்களிப்போம்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,**
**மன்னா பதிப்பாசிரியர்**

## காலத்தின் கணிப்பில் நாம் யார்?

# எம்மோடு நாம் பேச முயல்வோமா?

**– ஓர் குருவின் எண்ண அலைகள் –**



பயணங்கள் பல செய்து, பல பிரதேசம் வாழ்ந்தாலும் 'மன்னார்' என்பதன் முதல் பெருமை, "வேதசாட்சிகளின் இரத்தத்தின் விசுவாச வித்துக்கள் நாம்" என்பதே. இது பிரதேசவாத பெருமை அல்ல. மாறாக எம் விசுவாச ஆன்மீக அழைத்தலின் அடையாளம். இழப்பதும், துறப்பதும், கொடுப்பதும் துறவறத்தின் அடையாளம். அப்பத்தைக் கிறிஸ்துவின் உடலாகவும், இரசத்தைக் கிறிஸ்துவின் இரத்தமாகவும் மாற்றும் குருக்களாகிய நாம் உடைப்பவராக அல்ல, உடைபடும் பலிப்பொருளாக பகிரப்பட எம்மைக் கொடுப்பது எம் குருத்துவ அழைப்பு.

வாழ்க்கை என்ற புத்தகத்தின் எந்தப் பக்கங்களை வாசிக்கின்றோம் என்பதனை இன்றைய காலம் கற்றுத்தரத் தொடங்கிவிட்டது. விழிப்பாயிருக்கவேண்டிய அவசியத்தை இறைவார்த்தை எமக்கு நினைவூட்டும் நிகழ்வுகள் பிறக்கத் தொடங்கிவிட்டன. குருத்துவத்தின் உறுதிப்பாடுகள் மற்றும் கொள்கைகள் இயேசுவையும் அவர் பணிப் போதனைகளையும் மறந்துவிடுமோ? என்கிற கேள்விகள் உலகிலும் இன்று எம் மண்ணிலும் இடம்பெறுகிறதோ என்கிற அச்சம் நமக்கு! பிரிவினைக் கருத்துக்கள் மனித உள்ளங்களைப் பிரிக்க, வேதங்கள் போதிக்கும் வார்த்தைகள் வாதங்களையும், விவாதங்களையும் உச்சரிக்கின்றன. ஆசை துறக்க அழைக்கப்பட்ட இதயங்கள், ஆசையை அரவணைக்கும் பூசல்களின் புகழிடமாக உருவெடுக்கின்றன. ஆன்மீக சவால்களின் ஓட்டத்தில் எம்மோடு நாமும், என்னோடு நானும் பேசி "இயேசுவோடு நானும் - நாமுமாக" உள்ளோமா என்பதனைத் தற்காலத்தில் பார்க்கும் அவசியம் தோன்றியுள்ளது. "ஏன் அப்படி?" என்ற வினா தோன்றினால், "எனக்கு அப்படியா?" என்ற வினாவுக்கு என்னுள் விடைதேடுவோம்.

மாற்கு 10: 41-45 (இறை வார்த்தையை வாசிப்போம்) இயேசு அன்று அழைத்துப் பேசியதுபோல் இன்றும் எம்மை பேச அழைக்கின்றார். என்ன இருக்கக்கூடாது என்கிறார். எது இருக்க வேண்டும் என்கிறார். நான் அபிஷேகம் பெற்றது - ஆசீர் கொடுக்க, நான் அழைக்கப்பட்டது - அனுப்பப்பட. நான் பெற்றுக்கொண்டவை - கொடுக்கப்பட.

கோடுக்கப்படும் - கருப்பொருள்" எம் குருத்துவத்தில் உடைக்கப்பட்டு, "பெற்றுக்கொள்ளும் கருப்பொருள்" அர்த்தமாக எக்காரணத்திற்காகவாவது மாற நினைத்தால் குருத்துவத்தின் மாண்பும், மதிப்பும், பொருளும் மாற்றம் பெறும் ஆபத்துத் தோன்றும். "உங்களுள் அப்படி இருக்ககூடாது" என்ற இயேசுவின் வார்த்தை ஆழமானது. சுய ஆய்வுகள் அற்ற தேவைகளோடு ஆசைகளோடு இயேசுவை அணுகக்கூடாது என்பது யாக்கோபும் - யோவானும் சொல்லும் பாடம். கோபம் அதன் விளைவு என்பது அப்போஸ்தலர்களது அனுபவம் கற்பிக்கும் பாடம். தவறும்போது கற்பிக்க அழைப்பது இயேசு சொல்லும் பாடம். கற்பித்து கற்ற பாடத்துக்காக உயிரைக் கொடுத்தது, ஆசானும் (இயேசுவும்) சீடரும் வாழ்ந்த வாழ்வும், சாவும் கூறும் பாடம்.

நன்மைகளின் அறுவடை இரு வகைகளில் இடம்பெறும். ஒன்று நன்மைகள் விதைக்கப்பட்டு வளர்வது. இரண்டாவது, தீமைகள் தக்க காலத்தில் அறுவடை செய்யப்படல். மனிதரைப் பொறுத்த மட்டில் உங்களில் வெளியில் இருந்து வருவது அல்ல, உங்களிலிருந்து வருவதே அதிகம் தீங்குபடுத்தும் என்பது இயேசு கற்றுக் கொடுத்த உண்மை. "மனங்கள் என்றபடியால் - அருளால் மாற்ற முயல்வோம். அழைப்பு என்றபடியால் எம்மை மாற்ற முயல்வோம்."

நான் இயேசுவின் குருவா? என்பதனை என்னுள் தேடுவேன். காலத்தின் கணிப்பில் நான்... என்னோடு (என்னுள், இயேசுவோடு) பேச முயல்வேன்.....!

**சிந்தனையின் சில துளிகள் இவை:**
அருட்பணி. டேவின் (தி.ச) கண்டி.

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### ஆவணி

01 - புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்
02 - பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா
- மரியமாதா திருவிழா - மாளிகைத்திடல்
05 - தூய அந்தோனியார் திருவிழா - பெரிச்சார்கட்டு (முருங்கன்)
06 - மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவிற்கான கொடியேற்றம்
- நவநாள் ஆரம்பம்.
- குழந்தை இயேசு ஆலயம், ஆலங்குளம்.
10 - தூய லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்
15 - மடுமாதா திருத்தலத் திருவிழா - கடன் திருநாள்
20 - தூய வேளாங்கண்ணி திருவிழா - தம்பனைக்குளம்
22 - தூய பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல்.
- வேதசாட்சிகளின் இராக்கினி திருவிழா - தோட்டவெளி
- அன்னை திரேசா மறைபரப்பு அருட்சகோதரிகளின் விழா
24 - புனித பர்த்தலமேயு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25 - கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
26 - அருளாளர் அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
- தூய பரலோக அன்னை திருவிழா - முள்ளிக்குளம்
- அளவக்கைப் பங்குத்திருவிழா
27 - தூய அந்தோனியார் திருவிழா - பன்னவெட்டுவான்
29 - தூய மடுமாதா திருவிழா - தங்கநகர்
30 - புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
- குழந்தை இயேசு திருவிழா - மடுக்குளம்
31 - புனித சவேரியார் திருவிழா - ஆட்காட்டிவெளி, சுந்தரபுரம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## வரலாற்றுத் துளி

# மருதமடு மாதாவே! மனுக்குலத்தின் தாயாரே!

### நெஞ்சைவிட்டகலாத மதா கீதத்தின் வரலாறு!

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக மடுத்திருப்பதியின் கீதமாகத் தமிழிலும், (சிங்களத்திலும்) பாடப்பட்டுவரும் *"மருதமடு மாதாவே! மனுக்குலத்தின் தாயாரே!"* என்னும் நெஞ்சைவிட்டகலாத மரியன்னையின் கீதத்தை இயற்றி இசை அமைத்த பெருமை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. யோசப் அன்ரு அவர்களையே சாரும்.

1950களின் ஆரம்பத்தில் மருதமடு அன்னையின் திருச்சுருபம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டபோது யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தரிசனத்தின்போது பாடுவதற்காக இப்பாடல் திரு. யோசப் அன்ரு அவர்களால் உருவாக்கப்பட்டுப் பாடப்பட்டது. இப்பாடல் வரிகளும் இசையும் மருதமடு அன்னையின் பக்தர்களை வெகுவாகக் கவர்ந்து எல்லாராலும் விரும்பிப் பாடப்பட்டு வந்ததால் முன்னாள் யாழ்ப்பாண ஆயர் மறைந்த பேரருட்திரு ஜே. எமிலியானுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இப்பாடலை மருதமடுத் திருப்பதியின் முக்கிய கீதமாக அங்கீகரித்தார். இன்று உலகெங்குமுள்ள மடுஅன்னையின் பக்தர்களால் இப்பாடல் உணர்வுபூர்வமாகப் பாடப்பட்டு வருகின்றது.

திரு. யோசப் அன்ரு அவர்கள் யாழ் அடைக்கல அன்னை ஆலய வாத்தியக் கருவி மீட்டுனராகவும், பாடகர் குழாம் பொறுப்பாளராகவும் இருந்தகாலத்தில் "அடைக்கலமே! தாயே...", "ஆதாரம் என்றுனது பாதார விந்தமதை....." ஆகிய பாடல்கள் உட்பட மேலும் பல பாடல்களையும் உருவாக்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும்.

- நன்றி - பாதுகாவலன்

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ரம்ழான் பெருநாளை முன்னிட்டு உலக முஸ்லிம் மக்களுக்கு பல்சமய உரையாடலுக்கான திருஅவைத் தலைவர் செய்தி

**அன்பின் இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே,
உங்கள் அனைவருக்கும் ரம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்!**

உலக கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பாக என்னுடைய சமாதானம் நிறைந்த வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் இட் அல் பிதர் (Id al fitr) வேளையில் தெரிவித்து நிற்கின்றேன். ரம்ழான் மாதத்திலே நீங்கள் மேற்கொள்ளும் சமூக, சமயச் செயற்பாடுகளான நோன்பு, செபம், தானம் வழங்குதல், ஏழைகளுக்கு உதவுதல், குடும்ப அங்கத்தினர்கள், உறவினர்களுக்கு வழங்குதல் போன்றவை உங்களுடைய வாழ்வை இன்னும் மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் உங்களில் சிலரும் ஏனைய மதங்களைச் சார்ந்த சிலரும் இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட முடியாமல் உள்ளத்தில் நிழலாடும் கசப்புணர்வுகளைத் தாங்கி உள்ளனர். பொருட்களை இழந்து, உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இனப்பிரச்சினைகள் காரணமாக உலகெங்கிலும் இடம்பெற்ற போராட்டங்களில் இறந்த மற்றும் சமய, சமூகக் கலாசாரச் சீரழிவுக்குள்ளான, இடம்பெயர்ந்த, விதவையாக்கப்பட்ட, கற்பழிக்கப்பட்ட பெண்கள், உடல் அவையங்களை விற்பனை செய்யும் சூழ்நிலைக்கு உள்ளானவர்கள் போன்றவற்றால் ஏற்பட்ட வடுக்கள்தான் அவை. இவற்றின் மூலம் விளைவிக்கப்பட்ட பாதகமான நிலைமையை நாம் எல்லோரும் அறிவோம்.

இதற்குக் காரணம் சமயங்களின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட பலம், செல்வச் செழிப்பு போன்றவை ஆகும். இந்தப் பார்வையற்ற முரண்பாடுகளின்போது மக்களின் பாதுகாப்புக்கும்,



நீதிக்கும் பொறுப்பானவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். அவர்கள் மட்டுமல்ல ஏனைய கல்விக்கு, குடும்பங்களுக்கு பொறுப்பானவர்கள், சமயத் தலைவர்கள் எல்லோரும் அமைதிக்குச் சாதகமான இடத்தைத் தயார்படுத்த வேண்டும். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

**மன்னா விநியோகஸ்தர்களே!**
உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை
காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!
- மன்னா நிர்வாகம் -

## அருட்தந்தை செல்வராஜா அடிகளார் இறைபதம்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜே. பி. ஈ. செல்வராஜா அடிகளார் கடந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இறைபதமடைந்தார். அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலி ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது. யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நல்லடக்கத் திருப்பலி இடம்பெற்றது. அடிகளாரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

## துயர் பகிர்கின்றோம்!

- மன்னார் மறைமாவட்டக் குருவும் பேசாலைப் பங்குத்தந்தையுமான அருட்பணி. ஏ. செபமாலை அடிகளாரின் அன்புத்தந்தையார் பொன்தீவுகண்டலைச் சேர்ந்த திரு. அலஸ் அந்தோனி சுபபாக்கியம் (வயது 82) அவர்கள் கடந்த யூலை 15ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அருட்பணி. ஏ. செபமாலை அடிகளாரின் அன்புச் சகோதரி பொன்தீவுகண்டலைச் சேர்ந்த திருமதி ஸ்ரெலிக்கா பறுனாந்து (வயது 45) அவர்கள் கடந்த மே மாதம் 27ஆம் திகதி அன்று இறையடி சேர்ந்தார்.

- யாழ் மறைமாவட்டக் குருவும் கிளிநொச்சிப் பங்குத்தந்தையுமான அருட்பணி. S. A. ஜோர்ஜ் அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி சூசை யக்கோவா அவர்கள் கடந்த யூலை 10ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

தமது அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கும் அருட்பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மன்னா தன் அனுதாபங்களையும், செபங்களையும் தெரிவிக்கின்றது.

## அருட்சகோதரி ஒலிவியா ஜோசப் (தி.கு) அவர்களின் பொன்விழா திருப்பலி



திருக்குடும்ப துறவற சபையைச் சேர்ந்த் அருட்சகோதரி ஒலிவியா ஜோசப் அவர்கள் கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி தனது துறவற வாழ்வின் 50 ஆண்டுகள் நிறைவுப் பொன்விழாவைக் கொண்டாடினார்.

அன்றைய தினம் மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் யூபிலி விழா நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் திரு. திருமதி ஜோசப் சின்னத்துரை, தெரேசா அமிர்தம் ஆகியோரின் மகளாகப் பிறந்த இவர், 1965ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்தார். பல்வேறு கன்னியர் இல்லங்களில் பணிசெய்த இவர் 34 வருடங்களாகப் பாலர் பாடசாலைப் பணியை விருப்புடன் மேற்கொண்டு வருகின்றார்.

# மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பாடல் தினத்தையொட்டி வேப்பங்குளம் பங்கில் இடம்பெற்ற 'கலைச் சங்கமம்' நிகழ்வு









மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பாடல் தினத்தையொட்டி கடந்த யூலை மாதம் 12ஆம் திகதி வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள வேப்பங்குளம் பங்கில் கலைச்சங்கமம் என்ற பெயரில் மாபெரும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. வேப்பங்குளம் பங்குச் சமூகமும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. வேப்பங்குளம் பங்குத்தந்தை அருட்பணி. லக்ஸரன் டி சில்வா அடிகளாரும், மன்னார் மறைாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. நேசன் அடிகளாரும், இந்நிகழ்வுக்குத் தலைமைதாங்கினர். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## வவுனியா திருக்குடும்ப கன்னியர்களின் பவள விழா

வவுனியா இறம்பைக்குளம் திருக்குடும்ப கன்னியர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட 75 வருட நிறைவையொட்டிய பவள விழா நிகழ்வுகள் வவுனியா பங்குச் சமூகத்தின் அனுசரணையில் சிறப்பாக இடம்பெற்றது. கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் நன்றித் திருப்பலி இடம்பெற்று அருட்சகோதரிகள் பவனியாக இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இறம்பைக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் மற்றும் பங்கு மேய்ப்புப் பணிச் சபையினர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.


# பிரித்தானிய இளவரசி சார்லொட்டிற்கு திருமுழுக்கு

பிரித்தானிய இளவரசர் வில்லியம் மற்றும் கேம்பிரிட்ஜ் சீமாட்டி கத்தரீன் தம்பதியின் புதல்வியான சார்லொட்டிற்கு இங்கிலாந்துத் திருச்சபையில் திருமுழுக்கு வழங்கும் வைபவம் கடந்த யூலை மாதம் 5ஆம் திகதி ஞாயிறு அன்று சன்ட்றிங்ஹரமிலுள்ள சென் மேரிஸ் தேவாலயத்தில் இடம்பெற்றது. தனது தந்தையின் தாயாரான இளவரசி டயானாவின் பெயரையும் இணைத்து இளவரசி சர்லொட் எலிசபெத் டயானா என்ற பெயர் இவருக்குச் சூட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இளவரசர் வில்லியம் மற்றும் கேம்பிரிட்ஜ் சீமாட்டி ஆகியோர் தமது மகன் இளவரசர் ஜோர்ஜ் சகிதம் 9 வார குழந்தையான சார்லொட்டை தள்ளுவண்டியில் வைத்து தள்ளியவாறு தேவாலயத்திற்கு கால்நடையாக வந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்தது.

மேற்படி ஞானஸ்நான நிகழ்வில் இளவரசி சார்லொட்டின் பூட்டியான எலிஸபெத் மகாராணி உட்பட அரச குடும்ப அங்கத்தினர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டவெளியில் சிறப்பாக இடம்பெற்ற
# மன்னார் மறைசாட்சிகளின் நினைவுவிழா – 2015











மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு ஒவ்வொரு வருடமும் யூலை மூன்றாவது வாரம் வெள்ளிக்கிழமை கொடியேற்றி சனிக்கிழமை மன்னார் மறைசாட்சிகள் நினைவுவிழாவைக் கொண்டாடி வருகின்றது. இவ்வாண்டு வழமைபோல் யூலை 18ந் திகதி தோட்டவெளி பங்குத்தந்தை அருட்பணி. றொக்ஷன் குரூஸ் அடிகளாரின் வழிகாட்டலில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மன்னார் மறைசாட்சிகளின் புனித எலும்புகள் நிறைந்த தோட்டவெளி மண்ணில் அமைந்துள்ள **வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில்** கடந்த 17.07.2015 வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு இச்சமூகக் கொடியாகிய பரிசுத்த ஆவியின் கொடி தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. றொக்ஷன் குரூஸ் அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டு, திருச்செபமாலை ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து திருப்பலி, நற்கருணை ஆராதனை, இறைவார்த்தைப் பகிர்வு ஆகியன தோட்டவெளி பங்குத்தந்தையால் நடத்தப்பட்டன.

மறுநாள் 18.07.2015 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பிரதம விருந்தினராக வருகைதந்த மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை மற்றும் குருக்கள் மாலை அணிவிக்கப்பட்டு, கவிகள் பாடி ஆலயத்திற்கு திரும்பும் வீதியிலிருந்து ஆலயத்திற்கு பவனியாக அழைத்துவரப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து அனைவரும் மெழுகுதிரி ஏந்தி மறைசாட்சிகள் கல்லறையைச் சூழ்ந்துநின்றார்கள். அங்கு மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் ஒளிச்சுடர்கள் ஏற்றப்பட்டு கல்லறை ஆசீர்வதிக்கப்பட்டது. மறைசாட்சிகள் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான செபம் சொல்லப்பட்டது. மேலும் வேதசாட்சிகளின் இராக்கினி துணைவேண்டி "புனிதராம் சேவியரின் தொண்டு" என்ற பாடலும் பாடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து திருப்பலியின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. அவருடன் சேர்ந்து தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. றொக்ஷன் குரூஸ், தோட்டவெளியில் அமைந்துள்ள மன்னார் மறைமாவட்ட ஆன்மீக மையத்தின் இயக்குனர் அருட்பணி. யூட் குரூஸ், கீளியன்குடியிருப்புப் பங்குத்தந்தை அருட்பணி. ரெறன்ஸ் குலாஸ் ஆகியோர் சேர்ந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

மறையுரையில் குருமுதல்வர், கத்தோலிக்க திருச்சபையில் மறைசாட்சியம் பிரதான விடயமாக இருக்கிறது என்றும் கிறிஸ்தவர்கள் கிறீஸ்துவை வாழ்க்கை முறையாகக்கொண்டிருக்க வேண்டும் எனவும் கூறினார்.

மன்னார் மறைசாட்சிகளின் சுருக்க வரலாறு, மறைசாட்சிகளை புனித நிலைக்கு உயர்த்துவதற்கான செபம் மற்றும் திருப்பலிப் பாடல்கள் அடங்கிய புத்தகம் ஆகியன இவ்விழாவில் பங்கெடுத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. திருப்பலி முடிந்ததும் மறைசாட்சியர் சமூகநல அமைப்பின் நிகழ்வுகள் தோட்டவெளி பங்குத்தந்தை அருட்பணி. றொக்ஷன் குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை மன்னார் மறைமாவட்ட பொதுநிலைப் பேரவைத் தலைவரும், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும், சமூகநல அமைப்பின் ஆலோசகர்களில் ஒருவருமான திரு. ஜேக்கப் அவர்கள் வழங்கினார். அதைத் தொடர்ந்து மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களுக்கு வாழ்த்துப்பா பாடி வழங்கப்பட்டது. வரவேற்பு நடனம் இடம்பெற்றது. நிகழ்வுக்குத் தலைமைதாங்கிய தோட்டவெளிப் பங்குத்தந்தை ஆசியுரை வழங்கினார்.

அதன்பின் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கும், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நிகழ்சிக்குத் தலைமை தாங்கிய பங்குத்தந்தைக்கு பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

அதன்பின் அமைப்பின் ஆய்வாளர் திரு. S. அந்தோனிப்பிச்சை அவர்கள் "முத்துக் கடற்கரையில் புனித சவேரியாரின் சமுதாயத் திருமுழுக்கு" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சமூகநல அமைப்பின் செயளாலர் ரெட்னேஸ் (ஓலைத்தொடுவாய்) அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது. அதன்பின் கொடியிறக்கப்பட்டு விருந்தினர் உபசரணை நடந்தது. இவ்விழாவிற்கு அருட்சகோதரிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், வடமாகாண மீன்பிடித்துறை அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர், உபதவிசாளர்கள், பிரதேச சபை செயலாளர் மற்றும் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்.

மேலும் இம்மாவட்டத்தில் இச்சமூக அமைப்பைச் சேர்ந்த 21 கிராமங்களிலிருந்து இறைமக்கள் வருகைதந்து இறைவேண்டுதல் செய்தனர் என்பது குறிப்பிடத்தகுந்த விடயமாகும். இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தலைவர் அமிர்தம் (நெடுங்கண்டல்) தலைமையில் செயற்பட்ட விழாக்குழு செவ்வனே செய்துமுடித்தது.

# மன்னார் மறைசாட்சிகள் - ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்



"நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்ற இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து புனித சவேரியார் முத்துக்கடற்கரைப் பகுதியில் கி. பி. 1542ம் ஆண்டில் வேதபோதகம் செய்து மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றினார்.

இவர் தென் இந்தியாவில் முத்துக்கடற்கரைக்கு வருவதற்கு முன்பே மீனவர்களாக வாழ்ந்துவந்த 20,000 பரதவர்கள் **சமுதாயத் திருமுழுக்கு மூலம்** கிறிஸ்தவர்களாக மனமாற்றம் பெற்றிருந்தார்கள். புனித சவேரியார் இவர்களுக்கு பணிசெய்துகொண்டு இருந்தபோது இக்கடற்கரையில் வாழ்ந்துவந்த மற்றொரு சமூகமாகிய கமண்டலர் (**Kadayar pattankatty**) என்ற சமூக மக்களை மாற்கு 16:16 வசனத்தின்படி "நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப்பெறுபவர் மீட்புப் பெறுபவர்" என்ற இறைவார்த்தையின்படி **சமுதாயத் திருமுழுக்கு மூலம்** கிறிஸ்தவர்களாக மாற்றினார். இவர்கள் இக்கடற்கரையில் 1. கொம்புத்துறை 2. வேதாளை 3. இராமேஸ்வரம் 4. மன்னார்தீவு பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். புனித சவேரியார் 1543ல் இராமேஸ்வரத்தில் இம்மக்களுக்கு திருமுழுக்கு வழங்கினார். அப்பொழுது அவருடைய தாய்நாட்டின் (ஸ்பெயின் தேசத்தின்) புனிதராகிய புனித இயாகப்பருக்கு இராமேஸ்வரம் வேர்காடு என்னுமிடத்தில் ஆலயம் எழுப்பினார். அது இன்றுவரை புகழ்பெற்ற ஆலயமாக, பல்சமய மையமாகத் திகழ்கின்றது.

தொடர்ந்து மன்னார்த் தீவிற்கு திருமுழுக்கு வழங்க முயற்சிசெய்தார். ஆனால் யாழ்ப்பாண அரசன் சங்கிலி ஆட்சி செய்ததால் மன்னார் வந்து சமுதாயத் திருமுழுக்கு வழங்க முடியவில்லை. ஆகவே தக்க சூழல் வரும்வரை காத்திருந்தார். சூழல் சாதகமாக வந்ததும் தன் பெயர்கொண்ட குரு ஒருவரை 1544ல் மன்னாருக்கு அனுப்பி சமுதாயத் திருமுழுக்கு வழங்கச் செய்தார். **மூல ஏடுகளின் தெளிவான ஆதாரங்களின்படி ஒரு சமுதாயத்திற்கு மட்டுமே திருமுழுக்கு வழங்கப்பட்டது.** 1000க்கும் மேற்பட்டோர் திருமுழுக்குப் பெற்றனர். இதற்கு யாழ்ப்பாண சங்கிலி மன்னன் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தான். மக்கள் எதிர்ப்பை நிராகரிக்கவே 5,000 படைகளை மன்னாருக்கு அனுப்பி 600க்கும் மேற்பட்டோரை கொன்றுகுவித்தான். இப்படியாகக் கிறிஸ்துவுக்காக தம்முயிரை ஈர்ந்த மக்களை **"மறைசாட்சிகள்"** என திருச்சபை அழைக்கின்றது. **மன்னார் மறைசாட்சிகளின் தியாகம் இலங்கைத் திருச்சபையின் எழுச்சிக்கு வித்திட்டது என்றால் மிகையாகாது.** இவர்கள் புனிதர் நிலையடைய திருச்சபை முன்னெடுப்புக்களை செய்துவருகின்றது. திருச்சபையோடு சேர்ந்து மன்னார் மறைசாட்சிகள் சமூக நல அமைப்பு பயணிக்கின்றது.

***தகவல் : S. அந்தோனிபிச்சை M.A., M.Phil.***
*மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு*
*ஸ்தாபகர், ஆய்வாளர், ஆலோசகர், தொடர்பாளர்.*

# தலைமன்னார் மேற்கு மக்களின் கவன ஈர்ப்புப் போராட்டம்





தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலய மேய்ப்புப்பணிச்சபை உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகம், இளைஞர் ஒன்றியம், மாதர் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், தலைமன்னார் மேற்குக் குடிமக்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட கவன ஈர்ப்புப் போராட்டமானது கடந்த யூலை மாதம் 5ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணியளவில் புனித லோறன்சியார் ஆலய வளாகத்தில் ஆரம்பமானது.

ஏறக்குறைய 40 வருடங்களாக தலைமன்னார் கிராமத்திற்கும் ஒரு குடும்பத்திற்கும் இடையில் தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரு காணிப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணப்படவேண்டும் என்ற நோக்குடன் இந்தக் கவன ஈர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இதில் 300ற்கு மேற்பட்ட மக்கள் பங்கெடுத்தனர்.

இந்த பிரச்சினைக்குரிய நிலத்தின் பரப்பளவு 35 பேச் ஆகும். திருவாளர் வெலிச்சோர் பீரிஸ் அவர்களினால் 40 ஆண்டுகளுக்கு முன் இந்நிலமானது புனித லோறன்சியார் விளையாட்டுக் கழகத்திற்கு கரப்பந்தாட்டப் பயிற்சிக்காக வழங்கப்பட்டிருந்தது. அவருடைய மரணத்தின்பின் 1993ம் ஆண்டு இந்நிலமானது இவருடைய பிள்ளைகள் மற்றும் மருமகன்களினால் விளையாட்டுக் கழகத்தில்கொண்ட பற்றுக்காரணமாக காணி உறுதிப்பத்திரம் மூலம் புனித லோறன்சியார் ஆலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவருடைய மகன் திரு. அன்ரன் றெஜினோல் பீரிஸ் அவர்கள் மேற்படி கவன ஈர்ப்புப் போராட்டத்தின்பொழுது மக்கள் மத்தியில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வேளையில் பல பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு அன்றைய தினம் தலைமன்னார் மேற்கு பகுதி முழுவதும் மிகுந்த சோகத்துடன் காணப்பட்டதுடன் வீதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டது. பிரதான கடைத்தெரு முற்று முழுவதுமாக மூடப்பட்டிருந்ததுடன் இறைச்சிக்கடை, கள்ளுத் தவறணை ஆகியன மூடப்பட்டும், தனியார் பேரூந்துகள் முற்று முழுதுமாக நிறுத்தப்பட்டு இக்கவன ஈர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது சமூகமளித்த வடமாகாண சபையின் கௌரவ அமைச்சர் டெனிஸ்வரன் மற்றும் அவருடன் வருகைதந்த மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் குணசீலன் ஆகியோர் இங்கு சமூகமளித்து இப்பிரச்சினையின் பின்னால் உள்ள தேவைகள் என்ன என்பதைத் தெளிவாகக் கேட்டறிந்தனர்.

இதன்போது தமது கோரிக்கைளை மக்கள் எடுத்துக்கூறினர். இதில் குறிப்பாக மாதர் அபிவிருத்திச்சங்கம், விளையாட்டுக் கழகம் இளைஞர் ஒன்றியம், ஆலய மேய்ப்புப்பணிச்சபை, ஊர் மக்களிடம் இருந்தும் கருத்துக்கள் பெறப்பட்ட பின்னர் வடமாகாண கௌரவ அமைச்சர் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்து இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான பல ஆலோசனைகளை முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து எமது பங்குத் தந்தை அருட்பணியாளர் ரி. நவரெட்னம் அவர்கள் உரையாற்றினார்.

தொடர்ந்து மாலை 3.40 மணியளவில் வடமாகாண சபை உறுப்பினர் திரு. பிரிமுஸ் சிராய்வா அவர்கள் கவன ஈர்ப்புப் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகைதந்தார். வன்முறைகள் பிரச்சினைக்கு தீர்வு அல்ல என்கின்ற பொருளில் தனது உரையினை நிகழ்த்தினார்.

பின்னர் பங்குத்தந்தை அவர்கள் அகிம்சை ரீதியாக இடம்பெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நன்றி தெரிவித்ததுடன், இனிவரும் காலங்களிலும் நமது செயற்பாடுகள் அனைத்தும் அகிம்சை ரீதியாகவே இடம்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இறுதியாக மக்கள் அனைவரும் குளிர்பானம் அருந்திய பின்னர் சரியாக மாலை 04.30 மணியளவில் பங்குத் தந்தையின் இறுதி ஆசீர் செபத்துடன் மேற்படி கவன ஈர்ப்புப் போராட்டம் நிறைவுற்றது.

தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை அச்சத்திற்கு உள்ளாக்கிக்கொண்டு இருந்த இப்பிரச்னைக்கு இனி ஒரு தீர்வு வரும் என்கின்ற நம்பிக்கையுடன் தலைமன்னார் மேற்கு மக்கள் காத்து இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

## வின்சன் டி போல் சபையினால் வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் - 2015

மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டீ போல் மத்திய சபையினரால் வறிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டது. இந்த வைபவமானது கடந்த யூன் 27ஆம் திகதி மன்னார் குடும்பநல பொதுநிலையினர் வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய பணிமனையில் இயக்குனர் அருட்பணி. S.K. தேவராஜா தலைமையில் நடைபெற்றது. திறப்புவிழா இறைவழிபாட்டுடன் நடைபெற்ற முதல் நிகழ்வு இதுவாகும்.

2012ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக இந்தப் புலமைப்பரிசில் நிதி அவுஸ்திரேலிய புனித வின்சன் டீ போல் சபை மூலம், இலங்கை புனித வின்சன் டீ போல் தேசிய சபை ஊடாக, சகல மறைமாவட்ட பிராந்திய சபை, மத்திய சபைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் 60 மாணவர்களும், இவ்வருடம் 90 மாணவர்களும் இந்தக் கல்வி ஊக்குவிப்பு நிதியினைப் பெற்றுள்ளார்கள்.

இந்நிகழ்விற்கு முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும், கற்கடந்தகுளம் பங்குத்தந்தையுமான அருட்பணி. எஸ். மாக்கஸ் அடிகளார் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார். பங்குத்தந்தையர் சார்பில் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி. சுகுணராஜ் குருஸ் அடிகள் கலந்துகொண்டார்.

பாடசாலைப் பந்திகளின் பொறுப்பாசிரியர்களும், அருட்சகோதரிகளும், மாணவர்களின் பெற்றோரும் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்கள்.

புனித வின்சன் டீ போல் சபையின் மூத்த பணியாளரும், பள்ளிமுனை புனித லூசியா வளர்ந்தோர் பந்தியின் தலைவருமான திரு. எம். ஆனந்தம் றோச், திருமதி. றோச் அவர்களும் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டு அவர்களது திருமண பொன்விழாவையொட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். வைபவ இறுதியில் மத்திய சபையின் மாதாந்த ஒன்றுகூடல் நடைபெற்றது.

"இளைய தலைமுறையினரின் கல்வி மேம்பாட்டிற்கு கைகொடுத்துதவ கருத்துடன் ஒன்றிணைவோம்"

*- தகவல் : செயலாளர், திருமதி. A. ஆபிரகாம் சோசை*

## மன்னார் மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் சமாசங்களின் சம்மேளன அங்குரார்ப்பணம்

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் சமாசங்களின் சம்மேளன அங்குரார்ப்பணக்கூட்டம் கடந்த யூன் மாதம் 05ஆம் திகதி மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு முதியோர் செயலக அமைச்சு உத்தியோகத்தர்களும் நானாட்டான், மன்னார், முசலி, மடு, மாந்தை மேற்கு பிரதேசங்களின் முதியோர் சமாசப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சம்மேளனத்திற்கான நிர்வாகத்தெரிவு நடைபெற்றது. முதியோர் சம்மேளனத்தின் செயலாளராக திரு A. பத்திநாதர் பிகிறாடோ J.P அவர்களும், தலைவராக திரு S. சூசையப்பு லெம்பேட் J.P அவர்களும், பொருளாளராக திரு A. அந்தோனிமுத்து அவர்களும், உப தலைவராக திரு S. மரியதாஸ் பெணான்டோ அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பின்பு அங்கத்தவர்களாக 01. திரு M.C.M றம்சீன், 02. திரு. செபஸ்ரியான் கூஞ்ஞ , 03. திரு S. பாக்கியநாதன் - மடு, 04. திரு. அந்தோனி - மடு, 05. திரு யோக. கபிரியல் - மாந்தை மேற்கு, 06. திரு ம. நீக்கிலான் - மாந்தை மேற்கு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் முப்பரிமாண நூலகக் கண்காட்சி

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் நூலக விழிப்புணர்வு நிறுவகம் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் முப்பரிமாண நூலகக் கண்காட்சி கடந்த யூலை 9ஆம் திகதி காலை மன். அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் ஆரம்பமானது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பிரம்ம ஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் இக்கண்காட்சி ஆரம்பமானது. இதில் பிரதம விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் திரு. கே. எஸ். வசந்தகுமார், சிறப்பு விருந்தினராக மன்னார் உதவி பிரதேச செயலாளர் திருமதி. கனகாம்பிகை சிவசம்பு, கௌரவ விருந்தினராக நூலக விழிப்புணர்வு நிறுவனத்தின் தலைவி அருளானந்தம் சிறி கந்தலட்சுமி, தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கல்வித்திறனை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கண்காட்சியில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் முதல் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் வரை பயனடையக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 9 - 13ஆம் திகதிவரை இக்கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தியானம்



மன்னார் முருங்கன் மறைக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் - இவ்வாண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள - மாணவர்களை ஒருநிலைப்படுத்தும் வகையில் மன்னார் முருங்கன் மறைக்கோட்டக் குருக்கள் ஏற்பாடுசெய்த இறை தியானம் கடந்த யூலை மாதம் 27ஆம் திகதி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெற்றது.

அருட்தந்தை எஸ். மாக்கஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 200 மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## வங்காலையில் தொழிநுட்ப ஆய்வுகூடம் திறப்பு விழா

வங்காலை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தின் தொழிநுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா கடந்த யூன் மாதம் 30ஆம் திகதி கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் சந்தியோகு அவர்களின் தலைமையில் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது. பாண்ட் வாத்திய இசை முழங்க வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராசா அவர்கள் வரவேற்கப்பட்டு அழைத்துவரப்பட்டார்.

இந்நிகழ்வின்போது பாடசாலை முதல்வர் சகலரையும் வரவேற்று உரையாற்றினார். பல்வேறுபட்ட அதிபர்களின் சாதனையின் இலக்கே இந்தத் தொழிநுட்பக் கூடமும், இசுறு கட்டிடமும் ஆகும். இத்திட்டம் அமையப்பெற கரிசனையுடன் பாடுபட்ட முன்னாள் முதல்வர் அருட்சகோதரர் விஜயதாசன், முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. ஆபேல் றெவ்வல் ஆகியோரை அவர் நினைவுகூர்ந்தார். அத்துடன் வடமாகாண கல்வி அமைச்சர், டி லாசால் மாகாண முதல்வர், வங்காலைப் பங்குத்தந்தை, பாடசாலை அரச உறுப்பினர்கள் யாவரையும் பணிவுடன் வரவேற்று தமது உரையை நிறைவுசெய்தார்.

தொடர்ந்து நிகழ்வுகளாக பாடசாலை வரலாறு ஆசிரியர் திரு. யூட் குரூஸ் அவர்களால் முன்வைக்கப்பட்டது. சிறப்புரை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எம்.எம்.சியான் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

தகவல் : தமிழன்பன், வங்காலை

## மடுத்திருத்தல ஆவணித் திருவிழா தொடர்பன கலந்துரையாடல்

மடு அன்னையின் ஆவணித்திருவிழா தொடர்பான முன் ஆயத்தக் கலந்துரையாடல் கடந்த யூலை 21ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். வை. எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஆவணி மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலிக்கான நவநாள் திருப்பலிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை வெஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழாதிருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் மடுத் திருத்தலத்திற்கு வருகைதரவுள்ள நிலையில், பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மடுத்திருத்தலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய முன் ஆயத்தங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக குடிநீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு உட்பட அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசியத் தேவைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை, மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஏ. விக்ரர் சோசை, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நந்தினி ஸ்ரான்லி டிமெல், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், வைத்தியசாலை அதிகாரிகள் உட்பட திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் அரசினர் வைத்தியசாலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகள்

*- ஏ. எம். அல்மேடா, புனித ஆரோக்கிய அன்னை ஆலய நிர்வாக சபை.*



மன்னார் அரசினர் வைத்தியசாலை வளவினுள் நீண்ட காலமாக அமையப்பெற்றுள்ள - புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் என தற்போது அழைக்கப்படுகின்ற - புகழ்மிக்க இந்த ஆலயத்தின் வரலாற்றுச் சுவடுகள் பற்றிய எனது தேடலின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாள 1936ல் மன்னாரில் P.W.D கட்டிடப் பொறியியலாளராக இருந்த திரு. பெர்ணாண்டோ என்பவர், தனது மகன் அருட்தந்தை ஜோய் பெர்ணான்டோ அவர்களின் உதவியோடு "சமாகமம்" என்று சொல்லப்படுகிற சற்பிரசாத ஊர்வலத்தை இந்த ஆலயத்தில் நடாத்தினார். இந்த ஆலய உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர் மேற்குறித்த பொறியியலாளரும் இந்திய அருட்சகோதரிகளும் என்று சொல்லப்படுகிறது. இவருக்கு உதவியாக திரு. சாந்தப்பர் அன்னப்பு லியோன் என்பவரும், யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய கியோமர் ஆண்டகை அவர்களும் ஒத்துழைப்பு நல்கியதாகவும் அறியப்படுகிறது.

இவ்வாலயத்தின் ஆரம்ப விழாவானது யாழ் ஆயர் அவர்களது அழைப்பின்பேரில் இந்திய நாட்டின் தூத்துக்குடியைச் சேர்ந்த ஆயர் அதிவந்தனைக்குரிய பிரான்சிஸ் திபூசியஸ் றோச் அவர்களால் சிறப்பிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாலயத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னை வேளாங்கண்ணியின் திருச்சுரூபமானது இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும், சுரூபக்கூடு மன்னார் சாவற்கட்டு பகுதியைச் சேர்ந்த ஒருவரால் (பெயர் அறியப்படவில்லை) வழங்கப்பட்டதாகவும் அறியமுடிந்தது.

மன்னார் வைத்தியசாலையின் ஆரம்ப காலங்களில் நோயாளர் பராமரிப்புப் பணியை மேற்கொண்டிருந்த 'மதர்மார்' என அழைக்கப்பட்ட இந்திய அருட்கன்னியரே ஆலயத்தைப் பராமரித்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆரம்ப காலங்களில் அன்னை வேளாங்கண்ணி என்ற திருநாமத்தோடு அன்னையவள் இவ்வாலயத்தில் குடிகொண்டருளினாள். அக்காலத்தில் மன்னார்ப்பகுதி மக்களைப் பெரிதும் பாதித்த 'கொலரா' எனப்பட்ட வாந்திபேதி நோயானது, அன்னையின் அருளினாலும், அன்னையராய் இருந்து அரும்பணியாற்றிய மதர்மார்களது சேவையினாலும் மக்கள் தப்பிப்பிழைத்த வரலாற்று நிகழ்வு மன்னார் மக்களது மனதில் பசுமையாய் இன்றும் இருக்கிறது. அரசு காணிகளை சுவீகரித்த காலப்பகுதியில் (1965) இந்த அருட்சகோதரிகள் தமது இந்திய தேசத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். அதன்பின் மன்னார் புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தையரின் பராமரிப்பில் இவ்வாலயம் வந்தது.

அளவிடமுடியாத அற்புதங்களால் நோயாளரது வேண்டுதலுக்கு செவிமடுத்து சுகமளித்தவகையில் படிப்படியாக அன்னை வேளாங்கண்ணி என்கிற அன்னையவள் திருநாமம் ஆரோக்கிய அன்னை என பக்தர்களால் இன்றுவரை அழைக்கப்படுறது. அன்னையின் அருளாசீரால் வளம்பெற்று வாழ்வுகொண்ட மக்கள் தம் மதப்பாகுபாடு மறந்து அன்னையின் பக்தராக ஆகிவருகின்றனர். இந்நிலையில் பிற சமயத்தோர் இந்த ஆலயத்தை அகற்ற எடுத்த பல்வேறுபட்ட முயற்சிகள் இன்றுவரை கைகூடாமற்போனமையும் அற்புதமே. அரசினது காணி சுவீகரிப்பு சட்ட நடவடிக்கையின்போதும், வைத்திசாலை தரமுயர்த்தப்பட்டபோதும், வைத்தியசாலையினது நிர்வாக அமைப்புகள் மாறியபோதும், அன்னையின் ஆலயம் சிறப்புற்று விஸ்தரிக்கப்பட்டதேயன்றி சிதைந்து போகவில்லை. இது விடயத்தில் அவ்வப்போது ஆலோசனைகளையும், ஆதரவையும் நல்கிய மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களையும், அவர்தம் குருக்களையும், இன்றுவரை ஆதரவளித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வைத்தியசாலையின் நிர்வாகிகள், பணியாளர்கள் யாவரையும் நன்றியோடு நினைவுகூர வேண்டியிருக்கிறது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மறையாசிரியர்களுக்கான ஒருமாத வதிவிடப் பயிற்சி நெறி

மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் ஆவணி 2ம் திகதி தொடக்கம் 31ம் திகதிவரை மறையாசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சி நடைபெறவுள்ளது.

மன்னார், தலைமன்னார், தோட்டவெளி, பள்ளிமுனை, அளவக்கை, சிலாவத்துறை, கற்கடந்தகுளம், சிறுக்கண்டல், உயிலங்குளம், நானாட்டான், முருங்கன், அடம்பன் அந்தோனியார்புரம், ஆட்காட்டிவெளி, தேவன்பிட்டி, செட்டிகுளம், இலுப்பைக்குளம், ஓமந்தை, வவுனியா, பம்பைமடு, வேப்பங்குளம், தரணிக்குளம் போன்ற 22 பங்குகளிலிருந்து மொத்தம் 60 பேர் வரையில் இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றுகின்றனர்.

அத்துடன் விசேட வகுப்புக்கள் மறைமாவட்டத்திலுள்ள எல்லா மறையாசிரியர்களும் பயன்பெறும் விதத்தில் ஆவணி 7ம், 8ம், திகதிகளிலும் 12, 13 திகதிகளிலும், 20, 21ம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது. யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த அருட்பணி. மைக்கல் சவுந்தரம், அருட்பணி. செல்வரெட்னம்,அருட்பணி. தயாபரன் ஆகியோர் இந்த விசேட வகுப்புகளில் விரிவுரையாற்றவுள்ளனர்.

இவ்விசேட வகுப்புக்களில் மறைமாவட்டத்திலுள்ள எல்லா மறையாசிரியர்களும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. றெஜினோலட் அன்புடன் அழைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களம்




## 13 எம்.பி. ஆசனங்களுக்கு வடக்கில் 462 பேர் போட்டி

வடக்கு மாகாணத்தில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வுசெய்வதற்காக, 462 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வுசெய்வதற்கு 210 வேட்பாளர்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வுசெய்வதற்கு 252 வேட்பாளர்களுமாக மொத்தம் 462 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 15 அரசியல் கட்சிகளும் 6 சுயேச்சைக் குழுக்களுமாக 21 குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன.

மன்னார் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 18 அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சைக் குழுக்களுமாக 28 குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன.

## வன்னித் தேர்தல் களத்தில் போட்டியிடவுள்ளோர் விபரம்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 777 வாக்காளர்களைக் குறிவைத்து 88 அரசியல் கட்சிகள் மற்றும் 10 சுயேட்சை குழுக்களின் சார்பில் 252 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களின் விபரம் வருமாறு.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**
சிவபாதம் கஜேந்திரகுமார், எஸ். என். ஜீ. நாதன், சிவரதி ராஜ்குமார், வீ. திகாஸ் விக்னேஸ்வரன், இந்திராணி விவேகானந்தன், செ. பாலசுப்பிரமணியம், க.பார்த்தீபன், ப.ஜனன், இ. பிரபாகரன்.

**தமிழரசுக் கட்சி**
செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், றோய் ஜெயக்குமார், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, டாக்டர் சி. சிவமோகன், பெருமாள் பழனியாண்டி, கந்தையா சிவநேசன், சார்ள்ஸ் இருதயநாதன்.

**ஐக்கிய தேசியக்கட்சி**
ரிசாட் பதியுதீன், ரோகண கமகே, வி. ஜெயதிலக, விஜிந்தன், வி. ஜனகன், கருணாதாச, முகமட் சுகியான். அபுல் கரிம், ஜேசுதாசன் செபமாலை மார்க்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**
சிவநாதன் கிஷோர், வே. விசாகப்பெருமாள், ச. சிவகுமார், க. தெய்வேந்திரன், மோ.பிரியா, வீ.கலைச்செல்வன், ஆ. உதயசேகர், ந.சுகுமார், மா.கேதீஸ்வரன்.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**
ஹுனைஸ் பாரூக், பிரேமரத்தின சுமதிபால, அப்துல்காதர் நூன், முகமட் கதர் கதர் மஸ்தான், சமிந்த விராஜ்வாசல, பரராசசிங்கம் உதயராசா, செல்வராசா செல்வகுமாரன், செல்லத்துரை சுரேந்திரன், திலகசேகரம் சுந்தரஜித்.

**முஸ்லிம் காங்கிரஸ்**
முத்தலிபாபா பாரூக், எஸ்.அப்துல் நியாஸ், ஆர். இஸ்மாத், என்.எம்.பாரிஸ், சி.எம்.யசீன், பி.எஸ்.சுபஹி, எஸ்.கமிட் தாகிஸ், எம்.எம்.சஜிடீன், என்.எம்.பாசான்.

**பிரஜைகள் முன்னணி**
இரா.சுப்பிரமணியம், க.துஸ்யந்தன், க.நவரட்ணம், ர.ரவிக்குமார், ந.தங்கராஜா, இ.துஸ்யந்தன் விக்டர், செ.பீரிஸ், த.ஜெயராணி, வீ.சசிக்குமார்.

## பிரசாரப் 'போர்' ஆரம்பம்

### 225 ஆசனங்களுக்கு 6.151 வேட்பாளர்கள் களத்தில்

ஆகஸ்ட் 17இல் இடம்பெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் 22 தேர்தல் மாவட்டங்களிலும் நிறைவடைந்திருக்கும் நிலையில் போட்டிக் களத்தில் குதித்திருக்கும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

1,50,44,490 தகைமை பெற்ற வாக்காளர்களின் வாக்குகளைப் பகிர்ந்துகொள்வதற்கு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் 6, 151 வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளன. 6,151 பேர்கள் மத்தியிலிருந்து 225 பேரைத் தெரிவுசெய்யும் போட்டி கடும் உக்கிரமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் முடிவடைந்த நிலையில் நாடுபூராகவும் அரசியல் கட்சிகள் 312 மனுக்களையும் சயேட்சைக் குழுக்கள் 225 மனுக்களையும் தாக்கல் செய்திருந்தன.

இந்நிலையில் அரசியல் கட்சிகளின் 12 மனுக்களும் சுயேட்சைக் குழுக்களின் 24 மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இதன் பிரகாரம் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 6,151 பேர் போட்டியிடவுள்ளனர்.

# துறவற வாழ்வில் பொன் விழாக்காணும் செபமாலைக் கன்னியர் சபைத் தாயார் மேரி யோண் பப்ரீஸ்ற்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, ஊடக விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்



செபமாலைக் கன்னியா சபையில் 50 ஆண்டுகளைப் பணி வாழ்வில் நிறைவுசெய்து மகிழ்ந்திருக்கும் தாயாா மேரி யோண் பப்ரீஸ்ற் அவாகளை மன்னா பத்திரிகை குடும்பம் மற்றும் மன்னா பத்திரிகை வாசகாகளுடன் இணைந்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

தாயாா மேரி யோண் பப்ரீஸ்ற் அவாகளை பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராகவும் கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றிய காலத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. செபமாலைக் கன்னியரின் வாழ்வும் பணியும் பற்றிய விடயங்களை பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்க பல தடவைகள் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரைப்பற்றி நான் அறிந்தவற்றையும் அனுபவப்பட்டவற்றையும் இக்கட்டுரையில் எழுத விரும்புகிறேன்.

சிரித்த முகம் - சாந்தமான தோற்றம் - அன்பான பேச்சு - அமைதியான அணுகுமுறை - எவரையும் கவரும் பணிவான பண்பு - ஆழ்ந்த இறை பக்தி - அனைவரையும் சமமாக அன்போடு அரவணைக்கும் பாங்கு - சபையையும் சபையின் ஒழுக்க நெறிகளையும் பிரமாணிக்கமாகப் பின்பற்றி அனைவரையும் பின்பற்ற அழைக்கும் தன்மை - சபையே முதன்மையானது என அதற்காக அனைத்தையும் அாப்பணிக்கும் மனநிலை என்பன நிறைந்த தாயாா மேரி யோண் பப்ரீஸ்ற் அவாகளின் வாழ்வும் பணியும் எல்லோருக்கும் ஒரு மேல்வரிச்சட்டமான வாழ்வாக அமைந்திருக்கிறது.

நெடுந்தீவு மண்ணில் மத்தியாஸ் பெனடிக்ற் றோசமுத்து தம்பதிகளின் ஒன்பது பிள்ளைகளில் இரண்டாவது மகளாகப் பிறந்து (1944. 05. 26) மேரி குணமணி என்னும் நாமம் சூட்டப்பட்டவா தான் தாயாா மேரி யோண் பப்ரீஸ்ற். தன் ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு சவேரியாா பாடசாலை, யாழ் கன்னியா மடம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நிறைவுசெய்து இறை அழைப்பைப் பெற்று 1963இல் செபமாலைக் கன்னியா மடத்தில் சோந்தாா.

முதல் வாக்குறுதியை 1965ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டபோது குணமணி என்ற தன் பெயரை மேரி யோண் பப்ரீஸ்ற் என மாற்றிக்கொண்டாா. 1968 - 1969ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவில் கோவா மாநகரில் இறையியல் கல்வி கற்றாா. பின்னா 1970 - 1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கேரளாவில் நவத்துறவு ஆசிரியையாகப் பணிபுரிந்தாா. 1971ஆம் ஆண்டு தனது நித்திய வாக்குத்தத்தத்தை வசாவிளானில் பெற்றுக்கொண்டாா. 1971 - 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் நவகன்னியாகளின் உருவாக்கத்திற்குப் பொறுப்பாகப் பணியாற்றிய பின்னா 1981 முதல் 1985 ஆம் ஆண்டு வரை செபமாலைக் கன்னியா சபையின் உயா தலைவியின் செயலராகப் பணியாற்றினாா.

1986 முதல் 1998 வரை செபமாலைக் கன்னியா சபையின் உயா தலைவியாக மூன்று பணிக்காலங்கள் பணியாற்றினாா. இக்காலப்பகுதியில் 1995ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரை (இன்று புனிதா) உரோமை வத்திக்கானில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டாா. சபையின் உயா தலைவிப் பொறுப்புக்களை முடித்துக்கொண்டு 1999 - 2005 காலப்பகுதியில் அமலிவனம் அச்சுவேலி - குழுத் தலைவியாக பணியாற்றினாா.

2005 - 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் மூன்றாவது தடவையாகவும் சபையின் உயா தலைவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாா. 2011 - 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் துவண கொச்சிக்கடை கன்னியாமடத்தில் பணியாற்றிய பின்னா 2014ஆம் ஆண்டு முதல் மன்னாா் கன்னியா மடத்தில் பணியாற்றி வருகிறாா.

18 ஆண்டுகள் - மூன்று பணிக்காலங்கள் - செபமாலைக் கன்னியா சபையின் உயா தலைவியாக அாப்பணிப்போடு பணியாற்றி, அச்சபையை இன்றைய நிலைக்குக் கொண்டுவர அரும்பணியாற்றியவா தாயாா மேரி யோண் பப்ரீஸ்ற். இவரின் இந்தப் பணிக்காலம் இலங்கை மண்ணில் கொடிய போா நடைபெற்ற காலம். அக்காலப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்கள் - இடப்பெயாவுகள் - போக்குவரத்துத் தடைகள் - பொருளாதாரத் தட்டுப்பாடுகள் என்பவற்றின் மத்தியில் சபையைத் துணிவோடும் தூர நோக்கோடும் இறைவனின் துணையோடு நடத்திச்சென்ற பெருமை இவரையே சாரும்.

வசாவிளான், அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள மடங்களைவிட்டு வெளியேறி அகதிகளாக அலைய வேண்டிய நிலை எற்பட்டபோது, கன்னியாகளையும் அவாகளின் பாதுகாப்பையும், மடங்களையும், அவற்றின் சொத்துக்களையும் பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் ஏராளம். துன்ப துயரங்கள் நிறைந்த காலப்பகுதியில் தங்குவதற்கு இடம் இல்லாமல் அந்தரித்தபோதும் பரந்தனில் ஒரு மடத்தை நிறுவி அங்கும் செபமாலைக் கன்னியா பணி வாழ்வைத் தொடங்க வழிசெய்தாா. ஏற்கனவே இருந்த மடங்களைப் போரின் பின்னா சரிப்படுத்தியும் கட்டியெழுப்பியும் சபையின் பணியினைத் தனக்குப் பின் தொடரும் நிாவாகத்தினா சிறப்பாக மேற்கொள்ள வழிவகுத்தாா.

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக தங்கியிருந்த மடத்தைவிட்டு வெளியேறவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டபோது, எங்கு செல்வோம் எப்படிச் செல்வோம் என்று அங்கலாய்த்து தத்தளித்து நின்றபோது இறைவன் தம் அருட்கரத்தை இவாகள்மீது நீட்டி நிரந்தரமாக யாழ் நகரில் மடம் ஒன்றை அமைக்க அருள்பாலித்தாா.

சபை நிறுவுனரின் சொந்த மண்ணாண பாண்டியன்தாழ்வில் பல அல்லல்கள் மத்தியில் 'தோமஸ் மொணாஸ்றி' என்ற பெயரில் மடம் ஒன்றை நிறுவி, அதையே செபமாலைக் கன்னியா சபையின் தலைமைப்பீடமாக்கி சபை வளர வழிசெய்தாா.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள மடங்கள் அனைத்திற்கும் பயணம் மேற்கொண்டு அவாகளை ஒற்றுமையில் வளாத்து, இறை பராமரிப்பில் உருவாக்கி, சபைக்குத் தேவையான சட்ட திட்டங்களையும் யாப்பினையும் சிறப்புற அமைத்து வழிகாட்டினாா. இன்று செபமாலைக் கன்னியா சபையினா தம் பணியை எந்தத் தங்குதடையுமின்றி ஆற்ற வழிவகுத்த பெருமைக்குரியவா இவரே ஆவாா.

இவரின் வாழ்வையும் பணியையும்பற்றி பேசுவோாகள் எல்லோரும் இவரின் பணிவான குணத்தையும், பண்பான அணுகு முறையையும், அனைவரையும் மதித்து நடக்கின்ற தன்மையையும் பெரிதுபடுத்திக் கூறுகின்றனா.

போா நடைபெற்ற காலங்களில் உயிரைப் பணயம் வைத்து பல பயணங்களை மேற்கொண்டு மடங்களையும் அங்கு பணி புரியும் கன்னியாகளையும் சந்தித்து விசுவாசத்தில் உறுதிப்படுத்தி பணி வாழ்வில் நெறிப்படுத்தினாா என்று கூறுகின்றனா. தூர நோக்கு, ஆழ்ந்த இறை நம்பிக்கை, துணிவான திட்டம் என்பன இவா வாழ்வில் மிளிாந்த நற்குணங்கள் எனத் தெரிவிக்கின்றனா.

மன்னாா மறை மாவட்ட ஆயா இராயப்பு யோசவ் ஆண்டகையின் தாயாரும் இவரின் தாயாரும் சகோதராகள் என்பது பலா அறியாத ஓா உண்மையாகும். தனது 50 ஆண்டுகால பணிநிறைவில் மகிழ்ந்திருக்கும் அவரை வாழ்த்துவோம். இறைவன் அவாமேல் பொழிந்த அளப்பரிய வரங்களுக்காகவும் அதன்வழி செபமாலைக் கன்னியா சபையை வளாத்துவிட்ட இறை பராமரிப்பிற்காகவும் இறைவனுக்கு நன்றிசெலுத்துவோம்.

# மன்னாரில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வுகள்

## திரு. கே. பேரின்பதாசனின் 'சுகந்தம்' கவிதை நூல் வெளியீடு

மன்னார் கல்வித் திணைக்களத்தில் பணிபுரிந்த முன்னாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. பேரின்பதாசன் அவர்களின் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த யூலை மாதம் 12ஆம் திகதி மன்னார் நகரமண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் தமிழ்ச் சங்க வெளியீடாக வந்துள்ள இந்நூலின் வெளியீட்டு நிகழ்வையும் மன்னார் தமிழ்ச் சங்கமே ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் கலந்துகொண்டார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்குமார குருக்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இந்நூலுக்கான நயப்புரையை கலாபூசணம் திரு, ஏ. அந்தோனிமுத்து வழங்கினார்.

## திரு. க. பேர்னாட் அவர்களின் 'இலங்கையில் கல்வி' நூல் வெளியீடு

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி திரு. க. பேர்னாட் அவர்கள் எழுதிய 'இலங்கையில் கல்வி' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் கலந்துகொண்டார். திரு. பி. ஞானராஜ் அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமைதாங்கினார். மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான் நூல் அறிமுக உரையையும், திரு. எம். சிவானந்தன் நூல் நயவுரையையும் வழங்கினர்.

## பி. அமல்ராஜின் 'கருகிய காலத்தின் நாட்குறிப்புகள்' நூல் வெளியீடு

பன்முகப் படைப்பாளி அமல்ராஜ் பிரான்சிஸ் எழுதிய 'கருகிய காலத்தின் நாட்குறிப்புகள்' என்ற நூலின் அறிமுக விழா கடந்த யூலை மாதம் 19ஆம் திகதி ஞாயிறு காலை 10.25 மணிக்கு மன்னா பத்திரிகை அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தந்தி என்ற பத்திரிகையில் 36 வாரங்கள் வெளிவந்த தொடர்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்குமார குருக்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் திரு. கே. எஸ். வசந்தகுமார் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு. தமிழ் நேசன், கலாபூசணம் திரு. அ. அந்தோனிமுத்து, திரு. தே.பி. சிந்தாத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். நூலின் அறிமுக உரையை திரு. மன்னார் அமுதன் அவர்களும் கருத்துரையை திரு. அ. நிசாந்தன் அவர்களும் நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# திருகோணமலை மறை மாவட்டத்தின் 6ஆவது ஆயராக மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
ஊடக விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.

திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராகத் திருகோணமலை மறைமாவட்ட மண்ணின் மைந்தரான மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கடந்த 03, ஜுன் 2015இல் அறிவிக்கப்பட்டார். இவருக்கான ஆயர் பட்டமளிப்பு விழா கடந்த 25, ஜுலை 2015இல் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

*"எல்லோருக்கும் எல்லாமாகிட"* என்ற விருதுவாக்குடன் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளாருக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு திருகோணமலை மறைமாவட்டத்தைச் சிறந்தவிதமாக நிர்வகிக்க இறையாசீர் நிறைவாகக் கிடைக்க தமிழ் மறை மாவட்டங்கள் பெயரால் வாழ்த்துவோம். யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் , மட்டக்களப்பு என்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கையில் இன்று 12 மறைமாவட்டங்கள் உள்ளன.

17, பெப்ரவரி 1845இல் அப்போஸ்தலிக்க ஸ்தானிகாரியப் பிரிவாக யாழ்ப்பாணம் உருவாக்கப்பட்டது. 01, செப்ரெம்பர் 1896இல் மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்டது. யாழ் மறைமாவட்டம் தமிழ் மறைமாவட்டங்கள் அனைத்திற்கும் தாய் மறை மாவட்டமாகத் திகழ்ந்து பல புதிய மறைமாவட்டங்களைப் பெற்றெடுத்துள்ளது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் 25, ஆவணி 1893ஆம் ஆண்டிலும் - அனுராதபுர ஸ்தானிகாரிய பிரிவு 19, டிசெம்பர் 1975ஆம் ஆண்டிலும் (19 மார்ச் 1982 இல் அனுராதபுரம் மறைமாவட்டம் ஆகியது), மன்னார் மறைமாவட்டம் 24, ஜனவரி 1981ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டன.

தன்னிடமிருந்து புதிய தமிழ் மறைமாவட்டங்கள் பிரிந்து செல்கின்றபோது அம்மறை மாவட்டங்களுக்குத் தேவையான ஆயர்களையும் யாழ் மறைமாவட்டமே வழங்கிவந்துள்ளது. இந்த வகையில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம், மன்னார் மறை மாவட்டம் பின்னர் திருகோணமலை மறை மாவட்டம் ஆகிய மறைமாவட்டங்களுக்காக யாழ் மறைமாவட்டத்தைச் சார்ந்த ஆயர்களையும் பின்னர் மண்ணின் மைந்தர்களாக ஆங்காங்கு ஆயர்கள் நியமிக்கப்பட்டமையையும் நோக்குவோம்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக 09 பெப்ரவரி 1967 முதல் 18 டிசம்பர் 1972 வரை மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை பணியாற்றியுள்ளார். 21 நவம்பர் 1968இல் யாழ் மறைமாவட்டத் துணை ஆயராக நியமனம் பெற்ற மேதகு எல். ஆர். அன்ரனி ஆண்டகை 15 பெப்ரவரி 1974 முதல் 17 மார்ச் 1983 வரை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றியுள்ளார். 07 மே 1983 முதல் 03 ஜுலை 2012 வரை மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆயராகப் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டம் 25, ஆவணி 1893இல் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்டது. 23 ஒக்ரோபர் 1967இல் இது திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை (1983 ∸ 2012) பணியாற்றினார்.

03 ஜுலை 2012இல் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டபோது மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான மேதகு யோசவ் பொன்னையா ஆண்டகை ஆயராக நியமிக்கப்பட்டார்.

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராக மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை நியமிக்கப்பட்டார். மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை புதிய ஆயரின் நியமனத்துடன் 03 ஜுன் 2015 தனது பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

24 ஜனவரி 1981இல் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்டபோதும் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். தற்போது மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை தனது 75ஆவது வயதை நிறைவுசெய்தும், சுகவீனமுற்றும் இருக்கின்றநிலையில் புதிய ஆயர் ஒருவருக்கான தேவை உருவாகியுள்ளது. மன்னார் மறைமாவட்டமும் தற்போது தன் மண்ணின் மைந்தர் ஒருவரையே ஆயராக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே. தற்போது திருகோணமலை மறைமாவட்டத்திற்கு முதல் தடவையாக மண்ணின் மைந்தரான மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மெல்லிய நெடிய உருவம் - நிமிர்ந்த நடை ∸ அழகிய வதனம் - இனிமையான புன் சிரிப்பு ∸ அமைதியான பேச்சு ∸ அன்பான அணுகுமுறை ∸ கனிவான உரையாடல் - நேர்த்தியான வழிநடத்தல் என்பன எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற அமைதியின் உருவமாய் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் காட்சிதருகிறார்.



25 டிசம்பர் 1960ஆம் ஆண்டு புனித மரியாள் பேராலய திருகோணமலைப் பங்கில் பிறந்த மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் புனித மரியாள் பாடசாலை திருகோணமலை, புனித மரியாள் பாடசாலை - புத்தளம், புனித சூசையப்பர் கல்லூரி - திருகோணமலை ஆகிய இடங்களில் கல்விகற்றார்.

திருகோணமலை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் (1975 ∸ 1978) சிறிய குருமடக் கல்வியையும், பயிற்சியையும் பெற்ற இவர், மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும் (1978 - 1981), இறையியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும் (1982-1983) பின்னர் திருச்சி இந்திய தூய பவுல் குருமடத்திலும் (1983 - 1986) பெற்றார்.

திருத்தொண்டர் பட்டத்தை 1985ஆம் ஆண்டு பெற்ற இவர், 21 மே 1986இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரின் பணித்தளங்களாக உதவிப் பங்குத்தந்தை - தூய மரியாள் இணைப் பேராலயம் மட்டக்களப்பு (ஆனி 1986 ∸ ஆவணி 1988), பங்குத்தந்தை - இருதயபுரம் மட்டக்களப்பு (ஆவணி 1988 ∸ தை 1989), பங்குத்தந்தை - அக்கரைப்பற்று (தை 1989 ∸ ஆனி1 993), இயக்குனர் - மறைமாவட்ட விவிலிய திருவழிபாட்டு, மறைக்கல்விப் பணி மட்டக்களப்பு (ஆனி 1993 ∸ ஆடி 1999), பங்குத்தந்தை - ஆயித்தியமலை, மட்டக்களப்பு (புரட்டாதி 1995 ∸ ஆடி 1999), உயர் கல்வி - இத்தாலி உரோமை ( புரட்டாதி 1999 - ஆடி 2001) விரிவுரையாளர் - தேசிய குருமடம் கண்டி (வைகாசி 2001 ∸ ஆடி 2011) ∸ ஆயரின் பிரதிநிதி - திருகோணமலை மறைமாவட்டம் (வைகாசி 2011 - இன்றுவரை) ∸ மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் (ஆடி 2012 - இன்றுவரை) என அமைந்திருக்கின்றன.

பி.பி.எச், பி.ரி.எச். என்ற உரோமைப் பட்டங்களையும் ஒழுக்கவியலில் எஸ்.ரி.எல் பட்டத்தையும் உரோமையில் பெற்றுள்ள இவர், பல வெளியீடுகளையும் செய்துள்ளார். 'தாகம்' - என்கின்ற நாளாந்த கிறிஸ்தவ சிந்தனைகள் அடங்கிய காலாண்டு நூலின் 28 வெளியீடுகள் 2010 ∸ 2011 ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்துள்ளன.

*'தவக்காலத்தில் இவர்களோடு'* ∸ என்கின்ற தவக்கால சிந்தனை 2008ஆம் ஆண்டிலும், 'ஒப்புரவின் ஊடாக சமாதானம்' என்கின்ற தவக்காலச் சிந்தனை 2009ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றைவிட இவரின் வழிகாட்டுதலில் கருத்தரங்குகள் - விரிவுரைகள் என்பனவும் நடைபெற்றுள்ளன. மனச்சாட்சி ∸ ஒழுக்கவியல் பற்றிய கருத்தரங்கை கண்டி தேசிய குருமடத்தில் (2004) நிகழ்த்தினார். கொழும்பு அக்குவினாஸ் கல்லூரி ஒழுக்கவியல் விரிவுரையாளராக (2006 முதல் இன்றுவரை) பணியாற்றிவருகிறார். இதேவேளை மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் சங்க கௌரவ பொதுச் செயலாளராக சித்திரை 2012 முதல் இன்றுவரையும் பணியாற்றி வருவதோடு, திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராக மாசி 2015 முதல் இன்றுவரை பணியாற்றிவருகிறார்.

இவற்றைவிட வருடாந்த தியானங்களை திருக்குடும்பக் கன்னியர் சபை, பயிலுனர்கள் நல்லாயன் சபைக் கன்னியர்கள் ஆகியோருக்கு வழங்கியுள்ளதுடன் மாதாந்தத் தியான உரையினை கண்டி தேசிய குருமடத்திற்கும் 2014இல் வழங்கியுள்ளார்.

கண்டி, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட மறையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் - யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு (2014), திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவிகளுக்கான கருத்தரங்கு, மட்டக்களப்பில் திருப்பாடல்கள் பற்றிய சிறப்பு வகுப்புக்கள் (2012) என்பவற்றையும் நிகழ்த்தியுள்ளார்.

இலங்கையின் வடகிழக்குப் பக்கமாக தலைநகர் கொழும்பில் இருந்து 257 கிலோமீற்றர் தூரத்தில் உலகின் மிக அழகிய இயற்கையான துறைமுகத்தைக்கொண்டு ***துறைமுக நகர்*** என அழைக்கப்படும் திருகோணமலை அமைந்துள்ளது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## எல்லைகளைத் தாண்டி
## *BEYOND BORDER*

# மாற்று வலுவுடைய பிள்ளைகளின் கலை நிகழ்வுகள்

கடந்த 19.06.2015 வெள்ளிக்கிழமையன்று சுனோரா நிறுவனமும் உடுவில் ஆர்க் இல்லமும் இணைந்து மாற்றுவலுவுடைய பிள்ளைகள் முழுமையாக பங்கெடுத்த "எல்லைகளைத் தாண்டி" (Beyond Boarder) என்கின்ற ஒரு மேடை நிகழ்வை யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நிகழ்த்தினர்.

முதலில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. முதலில் இடம்பெற்ற நடன நிகழ்வில் இரண்டு நடக்க முடியாத மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் சக்கர நாற்காலியில் மேடையில் தோன்றி நடனமாடிய சிறுமியோடு சக்கரநாற்காலியில் அங்குமிங்கும் சுழன்றடித்து எம்மாலும் முடியும் என்பதை நிரூபித்தனர். இந்நிகழ்வு பார்வையாளர் அனைவரின் மனதையும் நெகிழவைத்தது.

பல தமிழ் சிங்கள மாற்றுவலுவுடைய பிள்ளைகள் இணைந்து கும்மி நடனமொன்றைச் சிறப்பாக வழங்கியிருந்தனர். தங்களுடைய குறைகளை ஒரு பொருட்டாக எண்ணாது மகிழ்வோடு இந்நிகழ்வில் அவர்கள் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

போர்ச்சூழல் தமிழ் சிங்கள மக்களிடையே இருந்த அன்னியோன்னிய உறவை எவ்வாறு சிதைத்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட சிங்கள தமிழ் சிறார்கள் இணைந்து ஒரு நாடகத்தை மேடையேற்றி இருந்தனர். இந்நாடகத்தில் இரண்டு மொழிகளிலும் உரையாடல் இடம்பெற்றாலும் அவர்களின் உடல் மொழி செயற்பாடுகளை மக்கள் ஆர்வத்தோடு ரசித்தது மட்டுமல்ல எவ்வாறு மீண்டும் இனங்களுக்கிடையில் நல்ல புதிய உறவு ஒன்று உருவாகின்றது என்பதைச் சிறப்பாக சித்தரித்தார்கள்.





ஆங்கிலத்திலும், தமிழிலும் வழங்கப்பட்ட நிகழ்ச்சித் தொகுப்பும் இணைப்பாளர் திருவாளர் G. P. பேர்மினஸ் வழங்கிய நன்றியுரையும் சிறப்பாக அமைந்திருந்தது. பார்வையாளர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி கண்களிலே கண்ணீரை வரவழைத்த இந்நிகழ்வு பாராட்டப்படவேண்டியதே.

- தகவல் : இ. அ. அமலரட்ணம்

## புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் 11வது பட்டமளிப்பு விழா - 2015

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புனித யோசேவ்வாஸ் தமிழ் இறையியல் கல்வியகத்தின் பட்டமளிப்பு விழா கடந்த 30.05.2015 அன்று கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் இல்லத்தின் உள்ளக அரங்கில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயரும், புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் பீடாதிபதியுமான கர்தினால் அதிமேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. இம்முறை எட்டு மாணவர்கள் தங்கள் கற்கையினை பூர்த்திசெய்து தங்களின் இளம் கலைமாணிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்கள்.

## முதல் சிங்கள தேசிய கத்தோலிக்க பத்திரிகைக்கு 150 ஆண்டுகள் நிறைவு

1866ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி ஆரம்பமாகிய இலங்கையின் முதல் சிங்கள தேசிய கத்தோலிக்க பத்திரிகையும் இலங்கையின் முதலாவது பத்திரிகையுமான ஞானார்த்த பிரதீப்பய யூன் மாதம் 12ம் திகதி திரு இருதய ஆண்டவரின் திருநாளான்று ஜூபிலி ஆண்டைப் பிரகடனம் செய்ததோடு, அடுத்த வருடம் 150வது ஆண்டுப் பூர்த்தியினைக் கொண்டாட இருக்கின்றது. இலங்கையில் ஆங்கில தேசிய கத்தோலிக்க பத்திரிகையாக தி மெசஞ்சர் என்ற பத்திரிகையும், கொழும்பு மறைமாவட்ட தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகையாக ஞான ஒளி என்ற பத்திரிகையும் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.

## திருச்சிலுவைக் கன்னியர் சபை

சுவிஸ்சலாந்து நாட்டில் பிரான்சியப் புரட்சியின் விளைவாக சமுதாயத்தில் ஏற்பட்ட ஒழுக்கச் சீர்கேடுகளைச் சீர்செய்யும் நோக்குடன் 1844ஆம் ஆண்டு திருச்சிலுவைத் துறவற சபை ஆரம்பிக்கப்பட்டது. அருட்தந்தை தியோடோசியஸ் புளோரன்ரீனி என்பவரால் சுவிஸ்சலாந்தில் மென்சிங்கன் என்ற கிராமத்தில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இவரின் வழிநடத்தலில் அன்னை பெர்ணாடாவைத் தலைவியாகக்கொண்டு கொர்னேலியா, பெலிசியானா ஆகியோரின் மூவர் குழுமம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறாக எமது ஸ்தாபகர் தந்தை தியோடோசியஸ் "காலத்தின் தேவைக்கும் கடவுளின் விருப்பத்திற்கும்" தம்மைக் கையளிக்கும் வகையில் இம்மூன்று சகோதரிகளுக்கும் துறவற பயிற்சி அளித்து கடவுளுடைய உண்மையான அன்பையும், அக்கறையையும் மிக ஆழமாக இவர்களுக்கு உணர்த்தி திருச்சிலுவையைத் தாங்கிய புதிய ஒரு துறவற சபையை உருவாக்கினார்.

1944ஆம் ஆண்டு அருட்சகோதரிகள் இறைவனுக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்து அன்றைய சமூகத் தேவைகளான கல்வி, சமூக ஒழுக்க சீர்திருத்தம் ஆகியவற்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தினார்கள்.

எமது சபையானது, "சிலுவையில் இரட்சணியம்" என்பதை விருதுவாக்காகவும், ஒரு முழுமனித வளர்ச்சிக்கான உருவாக்கல் மூலம் உடல், உள, அறிவியல், ஆன்மீக வாழ்விற்கு நம்பிக்கையூட்டி, சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்வதை தனிவரமாகவும் கொண்டு, ஆண்டவர் இயேசுவின் வார்த்தையில் ஆழமான நம்பிக்கை வைத்து, திருச்சபையின் வளர்ச்சியிலே பங்கெடுத்து வருகின்றது.

அன்னை பேர்ணாடாவின் பணிவாழ்விலே அவர் **"பணிவிடை பெறவன்று பணிவிடை புரியவே வந்தேன்"** என்னும் இறைவாக்கிற்கு இணங்கி, புரட்சியின் வன்முறையால் சுவிஸ்சலாந்து நாடு இருள்சூழ்ந்த வாழ்விற்குள் சிக்குண்டபோது அம்மக்களின் வாழ்வில் ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்தும்முகமாக இளம்பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கல்வியறிவையும், ஒழுக்கநெறியையும் கொடுக்கும் பணியிலே ஈடுபட அன்னை பேர்ணாடா அழைக்கப்பட்டார். சிலுவையின் மகிமைக்குச் சான்றாக விளங்கிய அவரது பணிவாழ்வினால் கவரப்பட்ட பல இளம் உள்ளங்கள் தம் வாழ்வையும் இறைபணிக்கென்று அர்ப்பணித்தார்கள்.

அன்னை பேர்ணாடா 1863 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அன்னை பேர்ணாடா வாழ்ந்தது 41 வருடங்கள் என்றாலும் அவரது சேவை அளப்பரியது. ஏனெனில் அவர் இறைவனடி சேர்ந்தபோது 129 சகோதரிகள் உருவாகி இருந்தார்கள். இறைவனுக்குள் தொடங்கிய அவரது பணியினை பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் இன்றும் எம் அருட்சகோதரிகள் பல இடங்களில் ஆற்றிவருகின்றனர். மென்சிங்கன் சுவிஸ்சலாந்தில் உருவான எமது திருச்சிலுவைத் துறவற சபை தன் கிளைகளை அகலப் பரப்பி ஐரோப்பா, அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, ஆசியா ஆகிய 4 கண்டங்களில் 17 நாடுகளில் பணிபுரிந்து வருகின்றது.

### இலங்கையில் எமது சபையின் ஆரம்பம்

அன்றைய யாழ். ஆயர் மேதகு கியோமர் ஆண்டகையின் வேண்டுகோள்களுக்கிணங்கி இந்தியாவின் அருட்சகோதரிகளான பெனடிக்டா ஸ்டொக்கர் (Benedikta Stocker) ஒத்மார் குருண்டர் (Othmar Grunter) மரிய கரோலா (Maria Carola) ஆகியோர் 1930ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்து, யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை அரச வைத்தியசாலையில் தமது பணியை ஆரம்பித்து இன்று பல மறைமாவட்டங்களில் எமது சேவை பரந்து, மக்களுக்குத் தேவையான உடல், உள ஆன்மீகப் பணிகளைச் சிறப்பாகச் செய்துவருகின்றது.

**இலங்கையில் எமது பணியை நோக்கும்போது எங்கு என்ன தேவை உள்ளதோ, அங்கு தமது பணியை உடனடியாக நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.** அன்னை பேர்ணாடாவின் வழியில் எமது சபையின் 112 சகோதரிகள் இலங்கையில் 21 பணித்தளங்களில் மக்களோடு மக்களாக இணைந்து இறை துணையுடன் பணியாற்றி வருகின்றார்கள்.

Sisters of the Holy Cross
Menzingen

### இலங்கையில் எமது பணிகள்

இலங்கையில் எமது பணிகளாக மருத்துவப் பணி, கல்விப்பணி, சமூகப்பணி, பங்குப்பணி, உருவாக்கல் பணி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எமது சபையின் ஸ்தாபகர் அருட்தந்தை தியோடொசியஸ் மற்றும் அன்னை பேர்ணாடா ஆகியோரின் வழிமுறைகளைப் பின்பற்றி இன்று நாமும் மக்களோடு இணைந்து பணிசெய்கின்றோம். மக்களை அணுகி உடல், உள, அறிவியல் மற்றும் ஆன்மீகத் தேவைகளைக் கண்டறிந்து, அவர்களின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றோம்.

காலத்தின் தேவைக்கு ஏற்ப மன்னார், யாழ்ப்பாணம், பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாகாணங்களில் நாம் நோயாளர்களைப் பராமரிக்கின்றோம். யாழ்ப்பாண தாதியர் பயிற்சியகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், வெலிசறை தனியார் நிறுவனத்திலும் எமது சகோதரிகள் நோயாளர்களைப் பராமரிப்பதற்கான தாதியர்கல்வி அறிவை மாணவர்களுக்கு வழங்குகின்றனர்.

மேலும் அரச பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் கல்வித் திணைக்களங்களிலும் ஆசிரியர்களாக கல்வியினை வழங்குவதோடு முன்பள்ளிப் பாடசாலைகளிலும் எமது சகோதரிகள் பணியாற்றுகின்றனர். கண்டி, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களில் உள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் எமது சேவை வழங்கப்படுகின்றது. வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும், விதவைகளுக்கும் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சிறுதொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டல்களையும் வழங்குகின்றனர்.

மேலும் பெண் பிள்ளைகளுக்குத் தேவையான பாதுகாப்பான விடுதி வசதிகளையும் பெற்றுக்கொடுப்பதனால் அவர்கள் தமது கல்வியைச் சிறந்தமுறையில் மேற்கொண்டு எதிர்கால வாழ்வைச் சரியானமுறையில் அமைத்துக்கொள்ள வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.

இன்றைய 21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலே எமது மக்கள் சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, ஆன்மீக ரீதியாக பாதிக்கப்பட்டு, இறை விசுவாசத்தைத் தொலைத்து வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து நிற்கின்றனர்.

அழிவுகள் மத்தியிலும் வாழ்வை நோக்கிய பயணத்திற்கு நம்பிக்கையூட்டி, மக்களின் இறை விசுவாசத்திற்குப் புத்துயிர் கொடுத்து, இறையாட்சியை இவ்வுலகில் நிலைநாட்டும் பணியில் திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாங்கள் தொடர்ந்தும் இறைதுணையுடன் பயணிக்கின்றோம்.

**திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாங்கள் இறைமகன் கிறிஸ்துவின் வார்த்தைகளால் நம்பிக்கை பெறும் - நம்பிக்கையூட்டும் பெண்கள்!**

## அருட்சகோதரி அமலியின் வாழ்வும் பணியும்

மன்னார் மாவட்டத்தில் உள்ள முத்தரிப்புத்துறைக் கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி. விசேந்தி டபரேரா, மாசில்லா துரம் ஆகியோரின் குடும்பத்தில் 5வது பிள்ளையாக அருட்சகோதரி அமிலி டபரேரா அவர்கள் 1933ம் ஆண்டு மாசி 5ம் திகதி இவ்வுலகில் அவதரித்தார்.

தனது ஆரம்பக் கல்வியை பரம்பரைக் கத்தோலிக்கக் கிராமமாய் விளங்கும் முத்தரிப்புத்துறை றோ.க.த.க பாடசாலையிலும், மேல்நிலைக் கல்வியை இளவாலை கன்னியர் இல்லத்திலும் கற்றுத்தேர்ந்தார். அழைப்பின் குரல் கேட்டார், ஆண்டவர் என உணர்ந்தார். 1949ல் துறவற வாழ்வில் கால்பதித்து இளவாலை கன்னியர் உருவாக்கல் இல்லத்தில் தனது ஆரம்ப உருவாக்கல்கால கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்து, 1955ம் ஆண்டு மார்கழி 18ம் நாள் தனது முதல் அர்ப்பணத்தை மேற்கொண்டு இறைவனுக்குத் தன்னைக் கையளித்தார்.

துறவற அழைப்புடன் ஆசிரிய அழைப்பையும் பெற்றுக்கொண்டார். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பயிற்சிபெற்று தனது ஆசிரியப் பணியை இளவாலை ஊர்காவற்துறை, சில்லாலை, மாதகல், பேசாலை, தலைமன்னார், நானாட்டான், வவுனியா, மன்னார், வங்காலை ஆகிய இடங்களில் மேற்கொண்டார். இக்காலத்தில் இந்தியா திண்டிவனத்தில் கிறிஸ்தவப் பாடநெறி டிப்ளோமா கற்றுக்கொண்டார். கடமைகளில் பொறுப்பும், பிரமாணிக்கமும் எதையும் அந்தக் கணமே சிறப்போடு நேர்த்தியாகச் செய்துமுடிக்கும் பண்புகளுடன் அன்பும், தெளிந்த அறிவும், தெளிவோடு கற்பிக்கும் திறனும் கொண்டவராக கல்விப்பணியிலும் ஆன்மீகப் பணியிலும் பணிவாழ்விலும் மிளிர்ந்தார்.

ஆசிரியராக, குழுத்தலைவியாகப் பல்வேறு இடங்களில் மனித நேயத்தை, விசுவாச வாழ்வை முன்வைத்து தன்னை அர்ப்பணித்தார். சிறப்பாகக் கிளிநொச்சி அகதிகள் பணி, முழங்காவில் அமல அன்னை சிறுவர் இல்லம், அன்பகம் ஆகியவற்றில் தன்னையே கையளித்து மனிதநேயப் பணிபுரிந்தார். இவர் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்ததுடன் பல துன்பங்கள், சவால்களைச் சந்தித்தாலும் இறை மகிமைக்காக இன்றுவரை உறுதியுடன் வாழ்ந்து துறவற அர்ப்பணத்தின் 60வது ஆண்டின் நிறைவில் இறைவனுக்கு நன்றிகூறுகின்றார்.

ஆம், 60வது ஆண்டின், நிறைவு விழா இறைவனது மாபெரும் கொடை. இறைவன் இவருடன் பயணித்தார், இவரைப் பாதுகாத்தார், பலப்படுத்தினார், சுகமளித்தார், தூக்கிவிட்டார், பல மனிதர்களினூடாக உதவிக்கரம் கொடுத்தார். தன் அருளைப் பொழிந்து ஆசீரால் நிரப்பினார். இந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறி அவரைப் புகழ்ந்து பாடுவோம்.

இவர்மூலம் இறைவன் ஆற்றிய அரிய பெரிய செயற்பாடுகள் அனைத்திற்கும் நன்றிகூறுவதுடன் திருக்குடும்ப துறவற சபையில் இவர் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகூறுவோம். இவரை இந்த உலகிற்கும், சபைக்கும் உவந்தளித்த இவருடைய பெற்றோர் உடன் பிறப்புக்கள் உறவுகள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

தொடர்ந்தும் இவரது பணிவாழ்வின் ஓட்டம் மேலும் பலம் பெறவும், தடையின்றி சிறப்பாக முன்னேறிச்செல்ல இறையருளை வேண்டுவோம்.


### மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.



### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


## அமல உற்பவ கன்னி மரியாளின் சமூக மற்றும் கல்விப் பணிகளுக்கான அமைப்பு

### IMSESO (Immaculate Virgin Mary Social and Educational Service Organization)

இம்செசோ (IMSESO) நிறுவனத்தினால் மன்/ முருங்கன் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வணிகப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தமர்வும், மன்/ நானாட்டான் மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தமர்வும் நடாத்தப்பட்டது.

அந்நிகழ்வின் சில படங்களை கீழே காணலாம்.

இம்செசோ எனப்படும் இந்நிறுவனம் அளவக்கையைச் சேர்ந்த திரு. எஸ். கொண்சன்ரைன் என்பவரல் ஸ்தாபிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாக நானாட்டான் பிரதேசத்தில் கல்வி, சமூகப்பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இது இலாப நோக்கமற்ற சேவையை மையப்படுத்திய ஒரு நிறுவனமாகும்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# திருத்தந்தையின் இலத்தின் அமெரிக்க நாடுகளுக்கான பயணம்





## திருத்தந்தையின் திருத்தூதுப் பயண நிறைவு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஈக்குவதோர், பொலிவியா பரகுவாய் ஆகிய மூன்று இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான ஒன்பது நாள் திருத்தூதப் பயணத்தை நிறைவுசெய்து இத்திங்கள் பிற்பகல் 1.30 மணிக்கு A330 ஆல் இத்தாலியா விமானத்தில் உரோம் வந்து சேர்ந்தார். அப்போது இந்திய இலங்கை நேரம் மாலை 5.00 மணியாகும்.

உரோம் சம்ப்பினோ விமான நிலையத்திலிருந்து வத்திக்கானுக்குத் திரும்பிய வழியில், உரோம் மேரி மேஜர் பசிலிக்கா சென்று வெண்மையும் மஞ்சளும் நிறைந்த பெரிய மலர்க்கொத்தை அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்து நன்றி தெரிவித்தார். திருத்தந்தை வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணங்களை மேற்கொள்வதற்கு முன்னரும் அவற்றை நிறைவுசெய்த பின்னரும் மேரி மேஜர் பசிலிக்கா சென்று அன்னை மரியாவுக்கு நன்றி தெரிவிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார். அசுன்சியோன் நகரிலிருந்து உரோமைக்கு வந்த 13 மணி நேரம் கொண்ட நீண்ட நேர இவ்விமானப் பயணத்தில் வழியில் கடந்துவந்த பரகுவாய் பொலிவியா பிரேசில், கேப் வெர்த், மொராக்கோ, இஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளின் தலைவர்களுக்குச் செபமும் வாழ்த்தும் நிறைந்த தந்திச் செய்திகளையும் திருத்தந்தை பிரான்சிஸ் அனுப்பினார்.

இத்தாலிய அரசுத்தலைவர் ஜெர்ஜோ மத்தரெல்லா அவர்கள் அனுப்பிய நன்றிச் செய்தியில் திருத்தந்தையின் நம்பிக்கைச் செய்தி அனைத்து மக்களும் உறுதியான விசுவாசத்தில் வேரூன்ற உதவுவதாக உள்ளது என்று கூறியுள்ளார். இவ்விமானப் பயணத்தில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் பதிலளித்தார்.

இலத்தீன் அமெரிக்காவில் இந்த மூன்று சிறிய மற்றும் ஏழை நாடுகளில் இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து அவர்களை திருத்தந்தை விசுவாசத்தில் ஆழப்படுத்தினார். இந்த நாடுகளுக்கான விஜயத்தின்போது பூர்வீக இன மக்களின் உரிமைகளுக்காகவும் ஏழைகளின் நலன் உயரவும் குரல் திருத்தந்தை பிரான்சிஸ் குரல்கொடுத்திருந்தார்.



*தனது இலத்தீன் அமெரிக்கப் பயணத்தின்போது மக்கள் பாரம்பரியமாக அணியும் தொப்பியை திருத்தந்தை அணிந்து பார்க்கின்றார்.*

## தங்கள் வாழ்வை வீணடிக்கும் இளையோர் நமக்குத் தேவையில்லை !

### பராகுவே விஜயத்தின்போது திருத்தந்தை

எதிர்மறைக் கலாசாரத் தாக்கத்திற்கு எதிராகச்சென்று சுதந்திரமான இதயத்துடன் இயேசுவுக்காக வாழுங்கள். தங்கள் வாழ்வை வீணடிக்கும் இளையோர் நமக்குத் தேவையில்லை. நம்பிக்கையோடு வாழும் இளையோர் நமக்குத் தேவைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் இயேசுவை அறிந்துள்ளனர் மற்றும் சுதந்திரமான இதயத்தைக் கொண்டிருக்கின்றனர் என திருத்தந்தை பிரான்சிஸ் தனது இலத்தீன் அமெரிக்க விஜயத்தின்போது பராகுவே நாட்டு இளைஞர்களைப் பார்த்துக் கூறினார்.

சுதந்திரம் என்பது இறைவன் நமக்கு இலவசமாக வழங்கும் கொடை. ஆனால் அதை எப்படிப் பெறுவது என்பதை அறிந்திருக்க வேண்டும். நாம் விடுதலையடைந்த ஓர் இதயத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

போதைப் பொருளுக்கு அடிமையாதல், சோகம் ஆகியவை நம் சுதந்திரத்தை நம்மிலிருந்து அகற்றிவிடும். நம் இதயத்தை நிறைக்கக்கூடிய உண்மையான மகிழ்ச்சி விதம்விதமாய் ஆடை அணிவதிலோ, புகழ்பெற்ற நிறுவனங்கள் தயாரித்த விலையுயர்ந்த காலணிகளை வைத்திருப்பதிலோ அல்லது புதுப்புது வடிவங்களில் நகைகளால் உடலை அலங்கரிப்பதிலோ இல்லை. மாறாக உண்மையான மகிழ்ச்சி, பிறரை நம் அருகில் ஈர்ப்பதில், அழுவாரோடு அழுவதில், சோர்வடைந்து துன்பத்தில் இருப்பவர்க்கு ஆறுதலாக அருகில் இருப்பதில், பிறர் கண்ணீர் சிந்துவதற்கு நம் தோள்களை அளிப்பதில், அவர்களை அன்போடு அணைத்து முத்தமிடுவதில் உள்ளது. கண்ணீர் சிந்துபவரோடு சேர்ந்து கண்ணீர் சிந்தத்தெரியவில்லையென்றால் பிறரோடு சேர்ந்து எப்படி மகிழ்வது என்றுகூடத் தெரியாமல் இருந்தால் வாழ்வது எப்படி என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். இவ்வாறு கூறிய திருத்தந்தை இதய மாற்றத்திற்காக இளையோருடன் சேர்ந்து செபித்தார்.

## நவ காலனித்துவத்தை நிராகரிக்குமாறு திருத்தந்தை கோரிக்கை

சிக்கன நடவடிக்கைகளை அமுல்படுத்தியிருக்கும் முகவர்களால் மேற்கொள்ளப்படும் புதிய காலனித்துவ மாற்றத்தினை உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் நிராகரிக்கவேண்டுமென அழைப்பு விடுத்திருக்கும் பாப்பரசர் பிரான்சிஸ், உலக பொருளாதார ஒழுங்குகளையும் மாற்றவேண்டுமென அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வசிப்பிடம், நிலம் மற்றும் தொழில் ஆகியவை தொடர்பான சகல உரிமைகளும் அம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் பாப்பரசர் பிரான்சிஸ் தனது இலத்தீன் அமெரிக்கப் பயணத்தின்போது வலியுறுத்தியிருந்தார்.

பாப்பரசராகப் பதவியேற்ற பின்னர் அவர் ஆற்றிய உரைகளில் மிகவும் நீண்ட ஒன்றாக இலத்தீன் அமெரிக்க விஜயத்தின்போது பாப்பரசர் ஆற்றிய உரை அமைந்துள்ளது. மக்களால் மெச்சப்பட்டதுமாக அவரது உரை அமைந்திருந்தது.

அமெரிக்கர்கள் கத்தோலிக்க திருச்சபையினால் நடத்தப்பட்ட விதம் தொடர்பாக மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் பாப்பரசர் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார்.

குறைந்தளவான உற்பத்திப் பொருட்கள், குறைந்த ஊதியத்துடனான பணியாளர்கள் ஆகிய விடயங்களை ஏழை நாடுகளுக்கு தொடர்ந்தும் திணிக்கக்கூடாதெனவும் சுட்டிக்காட்டியிருந்த பாப்பரசர், சுற்றுச் சூழலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களில் இருந்து பூமியைப் பாதுகாக்கவேண்டிய தருணம் இதுவாக இருப்பதாகவும் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலகத்தின் பிரபலமான அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், சர்வதேச அமைப்புகள் கலந்துகொண்டிருந்த கூட்டமொன்றிலேயே பாப்பரசர் இவ்வாறான கருத்துக்களை முன்வைத்திருந்தார். இக்கூட்டத்தில் ஏழை மக்கள், நிலமற்றவர்கள், வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் உள்ளிட்ட தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

# புனிதர்களின் பாதையில்

## புனித கிளாரா

**கன்னி - (கி.பி. 1194 - 1253)**



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஒருமுறை புனித பிரான்சிஸ் அசிசியார் கி.பி 1212 ஆம் ஆண்டின் தவக்கால மறையுரையைப் புனித ஜோர்ஜ் ஆலயத்தில் கொடுத்துக்கொண்டிருந்தார். பிரபு குலத்தில் தோன்றிய கிளாராவுக்கு அப்போது வயது 18. இம்மறையுரை கிளாராவை முற்றிலும் ஆட்கொண்டது. அந்த இடத்திலேயே கிறிஸ்தவ ஏழையைப் பின்பற்ற வேண்டும் என்ற தமது அசைக்கமுடியாத விருப்பத்தை அவர் அசிசியாரிடம் தெரிவித்தார்.


அவரது அறிவுரையின்படி, குருத்து ஞாயிறன்று இரவு நேரத்தில் தமது அரண்மனையைவிட்டு வெளியேறினார். அவர்கூடப் புறப்பட்டவர்கள் அவரின் உறவினர் பியான்காவும் வேறொரு தோழியும் ஆவார். அவர்கள் காட்டுப் பாதை வழியே சென்று போர்சியுங்குலாப் பள்ளத்தாக்கிலிருந்த ஓர் இடத்தை நோக்கிப் போனார்கள். இவர்களை எதிர்கொண்டுபோய் அசிசியாரும் அவரின் தோழர்களும் நள்ளிரவில் தீப்பந்தங்களுடன் வரவேற்றனர். அருகிலிருந்த ஆசீர்வாதப்பர் சபை மடத்தில் போய்ச் சேர்ந்தபின், கிளாரா தமது அழகான தங்கநிறக் கூந்தலை வெட்டி மொட்டையடித்துக்கொண்டார். மென்மையான ஆடைகளைக் களைந்துவிட்டுத் தவ உடைகளை அணிந்துகொண்டனர். மொட்டைத்தலையை ஒரு துணியால் மூடிக்கொண்டார்.

தம் மகளுக்கு ஆடம்பரமாகத் திருமணம் செய்துவைக்கக் கனவுகண்டுகொண்டிருந்த கிளாராவின் தந்தைக்கு இது ஓர் மின் அதிர்ச்சியாகிவிட்டது. மடத்திற்குச்சென்று வலுக்கட்டாயமாக அவரை இழுத்துக்கொண்டுபோக எடுத்த முயற்சி வீணாகிவிட்டது. பீடத்தை இறுகப்பற்றிக்கொண்டு அவர் தமது மொட்டைத் தலையைக் காட்டவே, கிளாராவின் தந்தை ஏமாற்றத்துடன் இல்லம் திரும்பினார். நாளடைவில் கிளாராவின் தங்கை புனித ஆக்னசும், தாய் ஓரிடோலேனாவும் தங்கை பியாட்ரியும் இப்புதிய சபையில் சேர்ந்துகொண்டார்கள். புதிய சபை பல ஐரோப்பிய நாடுகளிலும் மிக விரைவாகப் பரவியது. ஏழைப் பெண்களின் முன்னேற்றம்தான். இந்தச் சபையின் சிறப்பு நோக்கமாக அன்றும் இன்றும் விளங்குகிறது. கிளாராவின் 40 ஆண்டு கடுந்தவ துறவற வாழ்வின்போது திருத்தந்தையர்களும் கர்தினால்களும் ஆயர் பலரும் வழிகாட்டுதல் தேடி இவரிடம் வந்திருக்கின்றனர்.

இந்தச் சபையின் ஒழுங்கு ஏழ்மையைப் பற்றியது. அசிசியாரின் சபை ஒழுங்குகளைப் போன்றது. ஏழ்மையைக் கடுமையாகக் கடைப்பிடிப்பதைச் சிறிது தளர்த்தலாம் என்று அவ்வப்போது திருத்தந்தையர்கள் எடுத்த முயற்சிகளைக் கிளாரா அன்புடன் முறியடித்தார். தொடர் உண்ணா நோன்பு, புலால் இன்மை, தேவை இருந்தாலொழிய மௌனம், காலணிகளின்றி நடந்துசெல்வது, இரவு விழிப்புடன்கூடிய ஜெபம் ஆகிய இவைகளின் வழியே தங்கள் வாழ்வை இவர்கள் இறைவனிடம் அர்ப்பணித்துக்கொண்டு வந்தார்கள். இவ்வளவு தவ முயற்சிகளுக்கு இடையில் இவர்களின் மனமகிழ்ச்சியானது எவரையும் வியக்கவைத்திருக்கிறது.

தமது 59ஆம் வயதில், யோவான் எழுதிய ஆண்டவரின் திருப்பாடுகளின் வரலாற்றை 3 கன்னியர்கள் படித்துக்கொண்டிருந்த வேளையின் ஆகஸ்ட் 12, 1253-ல் இவர் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தையும் அவருடைய உதவியாளர்கள் அனைவரும் இவரது அடக்கச்சடங்கில் பங்குபெற்றினர். இரண்டே ஆண்டுகளுக்குப்பின் இவருக்குப் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவரது உருவப்படத்தில் இவர் திவ்வியநற்கருணைப் பாத்திரத்தைக் கையிலேந்தி இருப்பதைக் காணலாம். 1244இல் ஒரு நள்ளிரவு சரசேனியக் கொள்ளைக்கும்பல் இவர்களின் மடத்திற்குள் நுழைந்து சூறையாடத் திட்டமிட்டபோது திவ்விய நற்கருணைப் பாத்திரத்தை இவர் கையில் ஏந்தி இவர் உருக்கமாக மன்றாடித் தடுத்து நிறுத்திய புதுமையின் அடையாளமாக உருவப்படம் அமைந்துள்ளது. திவ்விய நற்கருணை நாதரிடம் இவருக்கு இருந்த பக்தி தனிச்சிறப்பு வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 44



## போதைப்பொருளை தவிர்ப்பதும் தடுப்பதும் அவசரமானது

### *'அதி விசேசம்' ஆசுப்பத்திரியில்!'*

பப்பு என்ற 'பெருங்குடிமகன்' திடீரென மதுபானசாலை ஒன்றினுள் நுழைந்து புதிரான 'ஓடர்' ஒன்றினைக் கொடுத்தான். "எனக்கு அரைக்கிலோ கோழித் தந்தூறி தாருங்கள்! அதேபோல இங்குள்ள மற்ற ஒவ்வொருவருக்கும் அரைக்கிலோ கோழித் தந்தூறி கொடுக்கவேண்டும். காரணம், நான் சாப்பிடும்போது மற்றவர்களும் என்னைப்போலவே நன்றாகச் சாப்பிடவேண்டும்!" எனக் கூறி நின்றான். பப்புவின் வேண்டுகை புதினமாக இருப்பினும், நிறைவேற்றப்பட்டது.

எல்லாரும் தந்தூறியைச் சாப்பிட்டு முடித்ததின்பின் பப்பு மீண்டும் ஒரு 'ஓடர்' கொடுத்தான்: "எனக்கு அரைப்போத்தல் சாராயம் அதிவிசேசம் தாருங்கள்!" என்றவன், "இங்குள்ள மற்ற ஒவ்வொருவருக்கும் அரைப்போத்தல் சாராயம் அதிவிசேசம் கொடுக்கவேண்டும்! காரணம், நான் குடிக்கும்போது மற்றவர்களும் என்னைப்போல நன்றாகக் குடித்து மகிழவேண்டும்!" என்றான். அதுவும் அவ்வாறே செய்யப்பட்டது. கூடியிருந்த 'பெருங்குடி மக்கள்' அத்தனைபேரும் பப்புவை போற்றிப்புகழ்ந்து ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து 'இவன்தான் மனிதன்!' 'இவன்தான் மனிதன்!' என்று குரல் எழுப்பி கரகோசம் செய்து தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

குடித்து முடிந்து 'கிக்' ஏறியதும் பப்பு மூன்றாம் முறையாகச் சத்தமிட்டான்: "என்னுடைய 'பில்'லை என்னிடம் தாருங்கள்! மற்ற ஒவ்வொருவருடைய பில்லையும் அவரவரிடம் கொடுங்கள்! காரணம், நான் சாப்பிட்டதற்கு நான் பணம் செலுத்துவதுபோல மற்றவர்களும் அவர்கள் சாப்பிட்டதற்கு அவர்களே பணம் செலுத்தவேண்டும்!"என்று சொல்லி முடிப்பதற்குள் கள நிலமை கட்டுங்கடங்காமல் போனது!

வேறென்ன? நடக்கவேண்டியதுதான் நடந்தது ....!

தலை, கைகள், கால்கள் என பெரும்பாலும் உடற்பாகங்கள் முழுவதும் 'பன்டேஜ்' சுற்றப்பட்ட நிலையில், பப்பு, இப்போது, மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU ) அனுமதிக்கப்பட்டுள்ளார்! தன்னைப்போல் மற்றவர்களை இவ்வளவாக அன்புசெய்தும் தனக்கு இப்படியாயிற்றே என்ற அதிர்ச்சியில் உறைந்துள்ளார் பப்பு!

### *12 ஆண்டுகளுக்கு முன்பே!*

மகாஞான ஒடுக்கம்' என்று சொல்லப்படுகின்ற ஆன்மீக விழிப்புணர்வுப் பணியை 2003இல் மன்னார் மறைமாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் ஆற்றியபோது போதைப்பொருளின் பாவனையால் ஏற்பட்ட மிகமோசமான தாக்கத்தினையும் பாதிப்புக்களையும் தனி மனிதர்களிலும், அவர்கள் சார்ந்த குடும்பங்களிலும், கிராமத்திலும் நேரில் கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்.

அதனால், அவற்றால் ஏற்பட்ட - ஏற்படுகின்ற - ஏற்படப்போகும் மிகப்பயங்கரமான விளைவுகளையும், தற்காலத்தில் இவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய்ந்து ஒரு கட்டுரையை இதே மன்னா பத்திரிகையில் எழுத முடிவுசெய்தேன். மிகப்பாரதூரமான சமூகத் தீமையான போதைப்பொருளின் பாவனையிலிருந்து நம் சமூகம் காப்பாற்றப்படவேண்டும் - பாதுகாக்கப்படவேண்டும் என்பதே அக்கட்டுரையை எழுதிப் பிரசுரிக்க இருந்ததற்கான முற்றுமுழுதான நோக்கமாக இருந்தது. அக்கட்டுரையின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால் முக்கிய இடம் கொடுத்து இரு பகுதிகளாக மன்னா பதிப்பாசிரியர் மன்னா பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பியிருந்தார். அந்தவகையில் முதல் பகுதி வந்தது, இரண்டாம் பகுதி வைகைப்புயல் வடிவேலின் சுவையான நகைச்சுவைகளில் ஒன்றான, 'வறும்(வரும்) ஆனா வறாது(வராது)' என்பதுபோல இரண்டாம் பகுதி வந்திருக்கவேண்டும் ஆனால் வராமலே போனது! முதல் பகுதியின்

### *குரல்வளைப் பிடி!*

கடந்துவந்த அவ்வாண்டுகள் சிலவற்றை (2003, 2004) உன்னிப்பாக எண்ணிப் பார்க்கிறேன்! இற்றைக்கு 12 ஆண்டுகளுக்குமுன் ஒருசில கிராமங்களோடும், ஆங்காங்கே ஒருசில இடங்களோடும், சில நபர்களோடும் தொடர்புபட்டிருந்த போதைப்பொருள் பாவனை இப்போது வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளைக் குரல்வளையில் பிடித்ததுபோல பிடித்திருக்கிறது!

மிகவும் பயங்கரமான ஒரு பிடிக்குள் இருந்து மீள்வதுபற்றி இப்போதாவது தனிநபர்களாக, குடும்பங்களாக, கிராமங்களாக, பாடசாலைச் சமூகங்களாக, இளையோர் கழகங்களாக, சமய-சமூகத் தலைவர்களாக 'சீரியஸ்' சாக சிந்தித்துச் செயற்படத் தொடங்கவேண்டும். இவ்விடயத்தில் தனித்த - கூட்டு செயற்பாடு, இனிமேலும் இலகுவாகத் தட்டிக்கழிக்கப்படுமானால் நிலமை கட்டுக்கடங்காததாக மாறிவிடக்கூடிய வாய்ப்பிருக்கிறது. கூட்டு முயற்சியே போதைப்பொருளின் தாக்கத்தினைப் போக்குவதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாக இருக்கிறது. எனவே, வெவ்வேறு மட்டங்களில் போதையை ஒழிப்பதற்கான கூட்டுமுயற்சியில் அனைவரும் அணிதிரள வேண்டும்.




### *"கஞ்சாக் கடத்தலின் கேந்திரம் வடக்கே!"*

'கஞ்சாக் கடத்தலின் கேந்திரம் வடக்கே!' என அபாயகர ஔடதங்கள் அதிகாரசபைத் தலைவர் தெரிவித்ததாக உதயன் நாளேடு 09.06.2015 அன்று தலைப்புச் செய்தி இட்டிருந்ததோடு வடக்கில் யாழ்ப்பாணமே கஞ்சாக் கடத்தலில் பிரதான தளமாக விளங்குகிறது என அவர் மேலும் குறிப்பிட்டதாக தெரிவிக்கிறது அந்நாளிதழ்.

### *போதைப்பொருள் - திட்டமிடப்பட்ட சதி!*

"தமிழர்களை அழிக்க பல்வேறு வழிகளிலும் சதிமுயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று வடமாகாண முதலமைச்சர் ஓய்வுபெற்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்..." என வடமாகாண முதலமைச்சரை மேற்கோள்காட்டி வலம்புரி ஆசிரியர் 08.12.2014 அன்று தமது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"...அதில் முக்கியமானது மாணவர்களிடையே போதைவஸ்துப் பயன்பாடாகும். போருக்குப்பின்பான எங்கள் நிலைமை எப்படி உள்ளதென்று ஒருகணம் ஆராய்ந்தால், எங்கள் பணம் சாராயத்திற்கும், போதைப் பொருளிற்கும், தொலைபேசிக்கும், சோடாவுக்குமாக அழிந்துபோக எங்கள் உழைப்பாளர்களின் ஊதியம் லீசிங் கம்பனிகளுக்காகி விடுகின்றது. பகலிரவாக உழைத்து லீசிங் கட்டி முடிக்கமுடியாமல் உழைத்த பணத்தையும் இழந்து சொத்தையும் பறிகொடுத்த பரிதாபங்கள் தமிழ் மண்ணில் தாராளம். இவை தற்கொலைகளாக, தலைமறைவுகளாக குடும்ப உடைவுகளாக மாற்றமடைந்துள்ளன.." என வலம்புரி ஆசிரியர் அதே ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடுவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் படைத்தரப்பினர் ஊடாக திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை வடக்கில் அதிகரித்தது என்ற குற்றச்சாட்டை வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் சுமத்தியிருந்ததை ஊடகங்கள் கோடிட்டுக் காட்டியிருந்தன. இதனை உதயன் நாளிதழ் 08.06.2015 அன்று மேலும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

### *ஆயுதமாக்கப்படும் போதைப்பொருள்!*

"ஒரு சமூகத்தை எல்லா வழிகளிலும் தாக்கி அழிக்கவேண்டும் என்பதற்கு முக்கிய ஆயுதமாக இந்தப் போதைப்பொருள் பாவனை பரப்பப்படுகிறது. ஒரு சமூகத்தின் பொருளாதாரம், சுகாதாரம், ஆளுமை, கலாசாரம், கல்விநிலை போன்றவற்றை அழிப்பதற்கு இந்த ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது. இத்தாக்கத்திலிருந்து எமது சமூகத்தைக் காப்பாற்றுவதற்கு பலருடைய கூட்டு முயற்சிதான் மிக முக்கியம். ... போதைப்பொருள் பாவனையின் மறைமுகமான விளைவுதான் தற்கொலை முயற்சி. இது பாரிய அளவில் அதிகரித்துச் செல்கிறது..." என போதைப் பொருட்களால் ஏற்பட்டிருக்கும் தற்போதைய பாரிய நெருக்கடியை கோடிட்டுக்காட்டி இருக்கிறார் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் பொது மருத்துவ நிபுணர் எஸ். சிவன்சுதன்.

### *போதைப்பொருள் வைத்திருப்பதும்/ விற்பதும்/ பாவிப்பதும் பெரும் குற்றங்களாகும்*

மேலும், வட புலத்தில் குறிப்பாக யாழ். குடா நாட்டில் போதைப்பொருளால் ஏற்படும் அதிகரித்த சமூகப் பிரச்சினைகளை அவதானித்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் போதைப்பொருட்களை வைத்திருத்தல், அவற்றைப் பாவித்தல், விற்பனை செய்தல் போன்றவை சமூகத்தை மிகவும் பாதிக்கும் பெரும்குற்றங்களாகும் என அவர் போதைப்பொருள் தொடர்பான ஒரு வழக்கு விசாரணையின்போது குறிப்பிட்டதாக 10.06.2015 அன்று நாளிதழ்கள் தெரிவித்திருந்தன.

### *யாழில் நான்கு மணித்தியாலயத்திற்கு ஒரு தற்கொலை!*

"நான்கு மணித்தியாலயத்துக்கு ஒரு தற்கொலை யாழ்ப்பாணத்தில்" என்ற தலைப்பில் வலம்புரி நாளிதழ் 29.06.2015 அன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. இச்செய்தியினை ஏனைய நாளிதழ்களிலும் பார்க்கக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு நான்கு ஐந்து மணித்தியாலயத்திற்கு ஒருவர் வீதம் தற்கொலை செய்பவர்கள் அல்லது தற்கொலை முயற்சி செய்பவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாக பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன்சுதன் சுட்டிக்காட்டி இருக்கிறார். யாழ். மருத்துவர் சங்கத்தால் இலங்கையில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் தொடர்பான கலந்துரையாடலின்போதே மேற்சொன்ன கருத்தைப் பகிர்ந்திருக்கிறார் மருத்துவர்.

### *பெற்றோரின் கண்காணிப்பு இன்மையே காரணம்*

"தமது பிள்ளைகளுக்கு எந்தக் குறையும் இல்லாது அவர்களை வளர்த்து வருகிறோம் என்று பல பெற்றோர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு குறையில்லாது வளர்ப்பதைவிடவும் அவர்களைக் கண்காணிப்பதே மிக மிக முக்கியம். பல பிள்ளைகள் போதைப் பாவனையால் பாதிக்கப்பட்டு வருவதற்கு பெற்றோரின் கண்காணிப்பு இல்லாததே காரணம்..." என உளநல வைத்திய நிபுணர் எஸ். சிவயோகன் தெரிவித்ததாக உதயன் நாளிதழ் 30.06.2015 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

### *உடன் கட்டுப்படுத்தக் கட்டளை*

வடக்கில் போதைப்பொருள் பாவனையை உடனடியாகக் கட்டுப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு கட்டளை பிறப்பித்துள்ளதாக 25.05.2015 அன்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. வித்தியாவின் கொலைச்சம்பவத்தின் பின்னர் ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவ்விஜயத்தின்போது வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் காரணமாக அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை காவல்துறையினர் வடமாகாணசபையுடன் இணைந்து மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்கவும் மதுப்பாவனையை கட்டுப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுனர் அலுவலகத்தில் நடந்த விசேட கலந்துரையாடலில் வடமாகாண ஆளுனர் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார் என 28.06.2015அன்று நாளிதழ்கள் கோடிட்டுக்காட்டியிருந்தன.

### *அண்மைக்கால நான்கு பெரும் பேராபத்துக்கள்*

ஆயுதப்போர் முடிவுக்கு வந்து 06 ஆண்டுகள் கடந்த நிலையில் போர்க்காலத்திற்கூட சந்திக்காத நான்கு பெரும் பேராபத்துக்களை இன்று குறிப்பாக வடபகுதி மக்கள் சந்திக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

01) போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சீரழிவுகள் - இறப்புக்கள்.
02) தற்கொலைகளால் ஏற்படும் பரிதாபகரமான மரணங்கள்.
03) வீதி விபத்துக்காளால் ஏற்படும் அநியாயச் சாவுகள் - அங்கவீனங்கள்.
04) வாள்வெட்டுக்கள் - கோஸ்டி மோதல்களால் ஏற்படும் விபரீதங்கள்.

இவ்வாபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்பட்ட விழிப்புணர்வோடும், விவேகத்தோடும் தனிநபர்களும் - குடும்பங்களும் - கிராமங்களும் செயற்படுவதோடு பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் பணியாற்றுபவர்கள் இவை மட்டில் சமூகப் பொறுப்புணர்வோடு தமது கடமைகளை ஆற்றவேண்டியும் இருக்கிறது. உதாரணமாக போதைப் பொருளை எடுத்துக்கொண்டால் அவை விற்கப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு உரியவர்களுக்கு அறிவித்தல், விசித்திரமான அன்னிய மனிதர்களின் நடமாட்டங்கள் குறித்து மக்கள் விழிப்பாயிருத்தல், பிள்ளைகளைப் பெற்றோர் கண்காணித்தல், போதைப்பொருள்பற்றி பாடசாலைகளில் மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கல் போன்ற பல செயற்திட்டங்களை உடனடியாகவே நடைமுறைப்படுத்த வேண்டும்.

### *போதைக்கு எதிராகத் திரண்ட மாணவர் சமூகம்*

ஆக, இப்போது காணப்படும் அனைத்து சமூக விரோத செயல்களுக்கும் சமூகம் சந்திக்கும் பேராபத்துக்களுக்கும் போதைப் பொருள்களே அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது என்பது கண்கூடு. எனவே இதனை ஒழிக்க அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணத்துடனும், சமூக அக்கறையுடனும் சேர்ந்து உழைக்கவேண்டும். உதாரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ள 05 மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் வீதிகளுக்கு வந்து போதைப்பொருளால் ஏற்படக்கூடிய சமூகத் தீமைகளைத் தடுக்கும் விழிப்புணர்வுச் செயற்பாட்டினை மிகப் பிரமாண்டமான வகையில் 26.06.2015அன்று முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் ஏனைய போதை ஒழிப்பு நடவடிக்கைகளும் குறிப்பிட்ட ஒருசில தினங்களோடு முடிவுக்கு வந்துவிடாமல் வெவ்வேறு மட்டங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது இக்காலத்தின் அவ்சியமும் அவசரமும் ஆனது என்பதை மனங்கொள்வது மிக மிக மிக இன்றியமையாதது (கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் anpuomi1970@gmail.com).

**மன்னா விநியோகஸ்தர்களே!**
உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை
காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!
- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு சிறப்புக் கட்டுரை

# திருச்சபையில் துறவியரின் பங்கும் பணியும் என்ன?

- அருள்பணியாளர் ந. அல்போன்சு, இயக்குனர், முப்பணி நிலையம், திண்டிவனம், தமிழ்நாடு, இந்தியா -

'அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு' என்பது உண்மையில் துறவியரை மையமாகக்கொண்ட ஆண்டாகும். மன்னார் மறைமாவட்டத்தில் இந்த ஆண்டை குடும்பங்களோடு தொடர்புபடுத்தி குடும்பத்தில் அர்ப்பண வாழ்வை வாழ்வது தொடர்பாக திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தக் கட்டுரை துறவியரின் வாழ்வை, பணியைப்பற்றி யதார்த்தபூர்வமாக, இறையியல் ரீதியாக, விமர்சனக் கண்ணோட்டத்தோடு விரிவாக ஆராய்வதோடு ஆக்கபூர்வமான முன்மொழிவுகளையும் முன்வைக்கின்றது.

## முன்னுரை

பொதுநிலையினர் இன்றித் திருச்சபை இல்லை. அவர்களது பங்கேற்பு திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் எந்த அளவுக்கு முழுமையானதாக உள்ளதோ அந்த அளவுக்குத்தான் திருச்சபை உண்மையானது, உயிருள்ளது. இக்கருத்தினை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் மிக அழுத்தமாகவே எடுத்துரைத்துள்ளது: "திருச்சபை ஆட்சியாளருடன் எங்கு உண்மையாகப் பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ, அங்கு திருச்சபை உண்மையாக நிறுவப்படவுமில்லை, முழுமையாக வாழப்படவுமில்லை. மனிதர் நடுவே கிறிஸ்துவின் நிறையடையாளமாகத் துலங்கவுமில்லை எனச் சொல்லலாம்" (திருச்சபையின் நற்செய்திப் பணி, இல. 21), ஏனெனில், உலகை இறை ஆட்சியாக வளர்த்தெடுக்கும் இயேசுவின் பணியை முன்னின்று ஆற்றும் திருச்சபையின் முதல்நிலைப் பணியாளர்கள் பொதுநிலையினரே.

இத்தகைய தெளிவான புரிதல் காரணமாக பொதுநிலையினரின் வளர்ச்சியும், திருச்சபையின் பணிகளில் அவர்களது முழுமையான பங்கேற்பும் இன்றைய திருச்சபையின் தலையாய அக்கறைகளுள் ஒன்று என்பது எல்லாரும் ஏற்கக்கூடிய உண்மை.

இத்தகைய முக்கிய ஒரு அக்கறையில் திருச்சபையின் செயல்திறன்மிக்க அங்கமாகிய துறவியரின் ஈடுபாடு என்ன எனும் கேள்வி எழுகிறது. ஏனெனில் திருச்சபையின் பல்வேறு பணித்துறைகளில் முன்னின்று செயல்படும் முக்கிய முகவர்களாகத் துறவியர் திகழ்கின்றனர். அவர்கள் தொடாத பணித்துறை எதுவும் இல்லை, அவர்கள் தொட்டதால் துலங்காத பணியும் எதுவும் இல்லை. குறிப்பாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் திருச்சபை அவசரமாக ஆற்றவேண்டிய பணி எதுவெனினும் தீவிரத் தன்மையுடன் அதனைச் செய்ய முன்வருபவர்கள் துறவியர்கள். ஆனால் இன்றைய காலத்தின் கட்டாயமாகிய பொதுநிலையினர் உருவாக்கத்திலும் அவர்களுடைய பணி ஈடுபாட்டை ஊக்குவிப்பதிலும் துறவியரின் ஆர்வமும் பங்களிப்பும் பெரிது என நாம் கூறுவதற்கில்லை. ஆனால் அத்துறையில் துறவியர் எத்தகைய பங்களிப்புச் செய்யமுடியும் என நாம் சிந்தித்து செயல்திட்டங்கள் வகுக்க முன்வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்கு உரிய சீரிய ஒரு பரிணாம வளர்ச்சி. அதற்கு உதவும் வகையில் திருச்சபையில் துறவியரின் அழைப்பும் அலுவலும் என்ன என சில தெளிவுகளை இவண் நான் முன்வைக்க முயலுகிறேன்.

## 1. துறவியரும் பொதுநிலையினரும்

துறவறத்தார் இன்று பொதுநிலையினரிடமிருந்து மிகவும் அந்நியப்பட்டு நிற்கின்றனர் என்பது தெள்ளத்தெளிவாகவே தெரிகின்ற மெய்மை. தங்களுடைய உறவுகள், தொடர்புகளில் மட்டுமல்ல, பயிற்சி, வாழும் இடம், வாழ்க்கைமுறை, நடை உடை பாவனை, சபை அமைப்பு என்பவற்றாலும் அவர்கள் பொதுநிலையினரிடமிருந்து மிகவும் விலகியும் வேறுபட்டுமே உள்ளனர். இவற்றில் அவர்கள் அதிகம் ஒத்திருப்பதும் தங்களையே அதிகம் ஒன்றுபடுத்திக்கொள்வதும் அருள்பணியாளர்களுடனேயே அன்றிப் பொதுநிலையினருடன் அல்ல. இந்த அந்நியப்பட்ட நிலையின் மிகமுக்கிய வடிவம் தங்களது நிலை பொதுநிலையினரைவிட அதிக உயர்வானது, புனிதமானது, எனவே தாங்கள் அதிக மாண்பிற்கும், மதிப்பிற்கும், தனி உரிமைகள், சலுகைகளுக்கும் தகுதி உடையவர்கள் என அருள்பணியாளரின் ஆதிக்கப்பாணியில் அவர்கள் சிந்திப்பதும் செயல்படுவதும்தான். மேலும் கத்தோலிக்கக் கல்வி நிறுவனங்களுள் பல துறவியரின் தனி உடைமை என்பவற்றிற்கும் அவர்களே ஏகபோக சொந்தக்காரர்களாக உள்ளனர். இதனால் அவர்கள் இன்று பெரிதும் தனித்து ஒதுங்கி நிற்கும் தனி ஓர் உயர்குலமாக **கிறிஸ்துவப் பார்ப்பனர்கள்போல்** இருக்கின்றார்கள் என்பதே நடைமுறை மெய்மை.

பொதுநிலையினரிடமிருந்து துறவியர் அந்நியப்பட்டிருக்கும் இந்நிலை வரலாற்றின் ஓட்டத்தில் ஏற்பட்ட ஒரு திரிபுநிலையே அன்றி துறவற வாழ்வின் தொடக்கத்திலேயே இருந்த இயல்புநிலை அன்று. ஏனெனில், கிறிஸ்தவ துறவற வாழ்க்கைமுறை தோன்றி வளர்ந்த முதல் நூற்றாண்டுகளில் அது பொதுநிலையினரின் ஓர் இயக்கமாகவே இருந்தது. ஒவ்வொரு துறவறக் குழுமமும் தனது தேவைக்கு ஏற்ப ஓரிரு அருள்பணியாளர்களைக் கொண்டிருந்ததே அன்றி அடிப்படையில் அது பொதுநிலையினரின் குழுமமாகவே இருந்தது. ஆனால் இன்றோ ஆண்களுக்கான துறவற சபைகளுள் பெரும்பாலானவை அருள்பணியாளர்களின் சபைகளாகவே உள்ளன. அவற்றுள் துணைச் சகோதரர்களைக் கொண்டிருந்த சில சபைகள்கூட அவர்களின் எண்ணிக்கை மிகவும் அருகிப்போனதாலோ அல்லது அவர்களை அருள்பணியாளர்கள் ஆக்குவதாலோ முற்றிலும் அருள்பணியாளர்களின் சபைகளாகவே மாறிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு, துறவு வாழ்வு தனது இயல்பான பொதுநிலைத்தன்மையை இழந்த அருள்பணியாளர் மயமாகி நிற்பதன் சில விளைவுகள் வேடிக்கையானவை. அவற்றுள் ஒன்று இவண் நாம் குறிப்பிடத்தக்கது. அது சில துறவறக் குழுமங்கள் பத்து, இருபது, முப்பது, நாற்பது என அருள்பணியாளர்களை மட்டுமே கொண்டவையாக இருப்பதும், அவர்களுள் பெருவாரியானவர்கள் ஞாயிறு திருப்பலியைக்கூட வாராவாரம் தனியே நிறைவேற்றிவிட்டு,




ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதையே தங்களது முழுநேர வேலையாகக் கொண்டு, அருள்பணியாளருக்கு உரிய மக்கள் பணி எதையும் நிறைவேற்றாமல் இருப்பதுமான நிலைதான்.

துறவற வாழ்வு என்பது அதன் வரலாற்றின் தொடக்கக்காலங்களில் மட்டுமல்ல, திருச்சபையின் படிப்பினை, இறையியல் புரிதல் என்பவற்றிலும் **பொதுநிலைத்தன்மை கொண்டதாகவே விளங்குகிறது.** அது பொதுநிலையினர் அழைப்பின் தனி ஒரு வகையே அன்றி அதனின்று இயல்பில் வேறுபட்ட அல்லது அதற்கு மேலான இன்னொரு நிலை அல்ல. இதனை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் தெளிவாகவே எடுத்துரைத்துள்ளது. "திருமுழுக்கு அர்ப்பணத்தில் ஆழமாக வேரூன்றியும் அதை அதிக நிறைவாக வெளிப்படுத்துவதுமான தனி ஒரு அர்ப்பணம்." (துறவற வாழ்வைத் தழுவியமைத்துப் புதுப்பித்தல் இல. 5) என்பதே சங்கம் தந்துள்ள விளக்கம். எனவே எல்லாக் கிறிஸ்தவர்களும் திருமுழுக்கில் பெற்றுள்ள பொது அழைப்பைத் தனி ஒரு வகையில் அதாவது அதனை ஆழமாகவும், நிறைவாகவும், வாழுகின்ற பொதுநிலையினரின் ஒரு வகுப்பினரே அன்றி துறவறத்தார் இன்னொரு நிலையினர் அல்ல. இவ்வடிப்படையில் நோக்கும்போது, துறவற வாழ்வு என்பது எண்ணிக்கையிலும் வாழ்க்கை முறையிலும் அருள்பணியாளர் மயமாகி நிற்கும் இன்றைய நிலை அதன் உண்மை இயல்பின் இழப்பே அன்றி அதன் இயல்பான பரிணாம வளர்ச்சி அல்ல.

துறவற வாழ்வின் தனித்தன்மை என்பது திருமுழுக்கின் அழைப்பையும் அர்ப்பணத்தையும் ஆழமாகவும் நிறைவாகவும் வாழ்வதே எனில், ஏனைய பொதுநிலையினர் அதனை ஆழமாகவும் நிறைவாகவும் வாழ்வதற்கும் துறவியர் வாழ்வதற்கும் என்ன வேறுபாடு எனும் கேள்வி இயல்பாகவே எழுகிறது. அந்த வேறுபாடு துறவற வாழ்விற்கு இயல்பான, இன்றியமையாத, அதன் அமைப்பு சார்ந்த முப்பெரும் கூறுகளில் அடங்கியுள்ளது எனலாம். அந்த முப்பெரும் கூறுகள்:

அ. இயேசுவின் இறை ஆட்சி இலட்சியத்தையும் அதன் விழுமியங்களையும் செயல்படுத்துவதில் உள்ள தீவிர மாற்றுக்கலாச்சாரத்தன்மை.

ஆ. குழுமமாக வாழ்ந்து செயல்படும் தன்மை.

இ. ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் மூன்று உறுதிப்பாடுகள் வழியாக அவற்றை வாழ்ந்து காட்டும் பண்பு என்பன.

இம்மூன்று கூறுகளையும்பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

### அ. தீவிர மாற்றுக்கலாச்சாரத்தன்மை:

இறை ஆட்சியின் அடையாளமும் கருவியுமாக வாழ்வதும் செயல்படுவதுமே திருச்சபையின் இயல்பு. அதுவே ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உரிய அழைப்பும் ஆகும். இயேசுவின் சீடராக வாழவே, அதாவது இறை ஆட்சியின் மனிதர்களாகவும் அதன் தூதுவர்களாகவும் செயல்படவே அவர்கள் திருமுழுக்கு வழியாக அழைக்கப்பட்டு, ஆவியால் திருநிலைப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் வாழுகின்ற சமூகத்தில் உள்ள ஆதிக்க அமைப்புகள் பல வலுவானவை. உடனடியாக மாற்ற இயலாத அளவுக்கு இறுகிப்போனவை. அவற்றால் பயனடையும் மேலாண்மை கொண்ட சக்திகளால் அவை முனைப்போடு கட்டிக்காக்கப்படுபவை. எனவே குடும்ப வாழ்விலும் உலகியல் துறைகளிலும் ஈடுபட்டுள்ள பல பொதுநிலையினரால் அவற்றை எதிர்த்து உடனடியாகவும் தீவிரமாகவும் போராட இயலாத நிலை பரவலாக உள்ளது. அவற்றுடன் ஓரளவாவது சமரசம் செய்துகொண்டு வாழும் நிலையைப் பெரும்பான்மையான பொதுநிலையினரால் தவிர்க்க முடிவதில்லை.

**அத்தகைய தாமதமும் சமரசங்களும் அதிகம் இன்றி, இயேசுவின் இறை ஆட்சி இலட்சியத்தையும் விழுமியங்களையும் தங்கள் தனி, குழும வாழ்வுகளிலும், சமூக ஈடுபாடுகளிலும் வேரோட்டமாகவும், முழுமையாகவும், தீவிரமாகவும் வாழவும் செயல்படுத்தவும் முன்வருகின்றவர்களே துறவியர்.** இயேசு உருவகப்படுத்திக் கூறியுள்ளதுபோல் ஒளியாக, உப்பாக, மலைமேல் நகராக, மாவில் புதைக்கப்பட்ட புளிப்புமாவாக மாற்றுக்கலாச்சாரத் தன்மையுடன் வாழுகின்றவர்களே அவர்கள்.

"நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல" (யோவா 15:19) என இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது சிறப்பாகத் துறவியருக்குப் பொருந்தும். **இந்த உலகுசாராத்தன்மையையே நாம் மாற்றுக்கலாச்சாரத் தன்மை அல்லது உலகுடன் ஒத்துப்போகாத நிலை என்கிறோம்.**

அதாவது சமூகத்தில் பரவலாக உள்ள பொய்மைகள் - போலித்தனங்களின் மறுப்பு, மாயைகள் - மயக்கங்களிலிருந்து விடுப்பு, ஆதிக்கங்கள் - அநீதிகளுக்கு எதிர்ப்பு என்பவற்றின் வழியாக வெளிப்படுவதே இந்த உலகு சாராத்தன்மை. துறவற வாழ்வுக்கு இன்றியமையாத இந்த மாற்றுக் கலாச்சாரத் தன்மையைத்தான் திருச்சபைச் சட்டம் (எண் 607) "உலகிலிருந்து விலகியிருத்தல்", "நிறைவுக்காலத்தின் அடையாளமாக இருத்தல்" எனக் குறிப்பிடுகிறது. ஆம், இன்றைய ஊனமுள்ள சமூகத்தின் தடம் மாறிய முதன்மைகள், முக்கியத்துவங்களைத் தானும் உள்வாங்கிக்கொள்ளாது, அவற்றிற்குச் சவாலாக விளங்கும்போதுதான் துறவற வாழ்வு உண்மையானதாக இருக்க முடியும்.

மனித நேயம் காய்ந்துவிட்ட இன்றைய மானிடத்தால் முன்னிலைப்படுத்தப்படும் நுகர்வுவெறி சார்ந்த ஆர்வங்களையும் அக்கறைகளையும் தனதாக்கிக்கொள்ளாமல், எந்த அளவிற்கு அவற்றைக் கேள்விக்கு உள்ளாக்குகிறதோ அந்த அளவுக்குத்தான் துறவற வாழ்வு அர்த்தம் உள்ளது. மாற்ற முடியாதவை என ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஆதிக்க சமூக அமைப்புகளுக்கும் அநீதிகளுக்கும் மாற்றான வழிமுறைகளும் உறவுப்பாணிகளும் உண்டு எனத் துறவறக் குழுமங்கள் எந்த அளவுக்குத் தம் வாழ்க்கை முறையால் ஓங்கி ஒலித்து சமகாலத்தவர் மனச்சான்றுகளுக்கு அறைகூவல் விடுக்கின்றனவோ அந்த அளவுக்கு அவை உண்மையானவை.

### ஆ. குழுமத்தன்மை:

தனக்கு இன்றியமையாத இறை ஆட்சியின் மாற்றுக்கலாச்சார இயல்பைத் துறவற வாழ்வு ஆற்றல்மிக்க முறையில் வெளிப்படுத்த வேண்டுமெனில் அது குழுமத்தன்மை கொண்டதாகவும் இருப்பது அவசியம். ஏனெனில் இயேசு கொணர்ந்த இறை ஆட்சி என்பது இயல்பாகவே குழுமத்தன்மை கொண்டது. சமூகத்தொடர்பும், உறவும் அற்ற தனிமனிதராக, எவரும் எவ்வாறு வாழமுடியாதோ அவ்வாறே இறை ஆட்சியின் பண்புகளையும் விழுமியங்களையும் வெறும் தனிமனிதராக எவரும் முழுமையாக வாழவோ செயற்படுத்தவோ முடியாது. இதனால்தான் இயேசுவும் தனி ஒரு துறவியாக வாழவில்லை, செயற்படவுமில்லை. மாறாக, தம் சீடர்களுடன் இணைந்து **ஒரு நடமாடும் மாதிரி இறை ஆட்சிக் குழுமமாகவே அவர் வாழ்ந்தார், பணிசெய்தார்** (காண், லூக் 8:13). கிறிஸ்தவ வரலாற்றிலும் முதல் துறவியர் சிலர் காடுகளிலும், பாழ்வெளியிலும், குகைகளிலும், தூண்பாறைகளின் மேலும் தனித்தனியாக வாழ்ந்தார்கள் எனினும் மிக விரைவாகவே துறவற வாழ்வு என்பது குழும வாழ்வே எனும் புரிதலும் நடைமுறையும் பரவலாயின. துறவறக் குழுமங்கள் இறை ஆட்சிக் குழுமங்களாக வாழவேண்டியவை என்பதால் அவற்றின் உறுப்பினர்களுக்கு இடையே நிலவவேண்டியது, இயேசு கற்பித்த உயர்வு தாழ்வு அற்ற சகோதரத்துவ உறவே. ஏனெனில், அவர்கள் இயேசு காட்டியவாறு ஒரே கடவுளைத் தங்கள் அப்பாவாகக் கொண்டு ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகளாக வாழ்பவர்கள் (காண், மத் 23:8-11). அது ஊனைச் சார்ந்த உறவுகளைவிட மேலான, இயேசுவின் இறையாட்சி இலட்சிய ஈடுபாட்டின் அடிப்படையில் தூய ஆவி அருளும் தெய்வீக உறவு. இந்தச் சகோதரத்துவ உறவு காரணமாக அவர்கள் தங்கள் உடைமைகளைப் பகிர்ந்து இறை ஆட்சியின் பகிர்வுப் பொருளாதாரப் பொதுமை அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் (காண், திப 2:42-37; 4:32-37). அவர்கள் நடுவே அதிகாரம் என்பது அன்றைய, இன்றைய உலகிய சமூகத்தில் நிலவுவதைப்போன்ற ஆதிக்கம் அல்ல; மாறாக, அது சகோதர அன்பிலிருந்து எழும் சமூகப் பொறுப்பு. இதனால் அவர்களிடையே அதிகாரிகள் என்போர் பணியாளர்கள், முதன்மையானவர்கள் ஏனையோருக்குத் தொண்டுபுரிபவர்கள். அவர்களுடைய பண்பாடு என்பது நலிந்தோருக்கு முன்னுரிமை அளிக்கும் பரிவுப் பண்பாடே; சமயம் என்பது மனித நேயமாகச் செயல்படுத்தப்படும் இறை அன்பே.

### இ. மூன்று உறுதிப்பாடுகள்:

இத்தகைய வேரோட்டமான, முழுமையும் தீவிரமுமான சீடத்துவத்தைச் சீராகவும் சிறப்பாகவும் வாழ்ந்திட அவர்களுக்கு அவசியமானவையாகவும் அரிய உதவிகளாகவும் இருப்பவை **ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் மூன்று உறுதிப்பாடுகள்.** கிறிஸ்தவத் துறவில் ஏழ்மை என்பது வெறும் இல்லாமை அல்ல; மாறாக இல்லாதவரோடு உள்ளதைப் பகிர்வதால் ஏற்படுகின்ற, ஏழைகளோடு கூட்டொருமை ஏற்படுத்தத் தேவையான எளிய வாழ்வு. கற்பு என்பது திருமணம் செய்யாத வெறும் மணத்துறவு நிலை மட்டும் அல்ல; மாறாகத் தனக்கென தனி ஒரு குடும்பம் ஏற்படுத்துவதை விட்டுவிட்டு, எல்லாருக்கும் உறவு ஆகுதல். சிறப்பாக ஏழை எளியவருக்குச் சகோதரர், சகோதரி ஆகுதல். கீழ்ப்படிதல் என்பது சுயநலச் சார்புகளைவிட்டு, உண்மையான சுதந்திரத்துடன் குழுமத்தின் இறையாட்சியின் தேவைகளை முன்னிறுத்திச் செயல்படுதல்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு சிறப்புக் கட்டுரை

# திருச்சபையில் துறவியரின் பங்கும் பணியும் என்ன?

11ஆம் பக்கத் தொடர்ச்சி

## 2. உலகிய ஈடுபாடே துறவறத்தின் சாரம்

துறவற வாழ்வு பற்றிய மரபுப் புரிதல் துறவு எனும் பரிமாணத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தது. அந்தத் துறவுநிலை என்பது உலகுடன் ஒத்துப்போனது. மாற்றுக்கலாச்சார குழுமமாக வாழ்வது என்பது இல்லாது, உலகைவிட்டு ஒதுங்கி வாழ்வது என்றே அன்று கருதப்பட்டது. உலகிய சமூகத்தில் பரவலாக உள்ள ஆதிக்கங்கள், அநீதிகளுடன் சமரசம் செய்துகொள்ளாது, அவற்றை எதிர்க்கும் வகையில் வேறுபட்டு வாழ்வதற்குப் பதிலாக உலகியல் சமூகத்தில் ஈடுபாடு இன்றி விலகியிருத்தல் என்றே துறவு புரிந்துகொள்ளப்பட்டது.

இதனால் துறவற ஆன்மீகம் என்பது உடல், உலகம், சமூகம் என்பவற்றைத் தீயவை, பாவத்திற்கு இட்டுச்செல்பவை எனக் கருதி, அவற்றை ஒதுக்கி, தன் ஆன்மாவை விண்ணகம் கொண்டுசேர்க்கும் முயற்சியாகவே அமைந்தது. உடலை ஒறுத்தல், உலகைத் துறத்தல், சமூக ஈடுபாடுகளை இயன்ற அளவு தவிர்த்தல் என்பன அன்றைய துறவற வாழ்வின் இன்றியமையாத கூறுகளாகக் கருதி நடைமுறைப்படுத்தப்பட்டன. ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் உறுதிப்பாடுகள்கூட உலகையும், உடலையும், தன்னையும் துறக்கும் நிலைப்பாடுகளாகப் புரிந்துகொள்ளப்பட்டனவே அன்றி, இறை ஆட்சி சார்ந்த தீவிர உலகிய ஈடுபாட்டுக்குத் தேவையானவைகளாக தியாக அர்ப்பணங்களாக அல்ல. மறுமை வாழ்விற்காக இவ்வுலக ஈடுபாடுகளைத் தவிர்த்த அன்றைய துறவற வாழ்வில் முதன்மையும் முழு முக்கியத்துவமும் பெற்றிருந்தவை வழிபாடுகள், பக்திமுயற்சிகள், செபம், தியானம், ஞானவாசகம், தன் ஒடுக்கச் செயல்பாடுகள் என்பவையே.


ஆனால், இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பின்பு மேற்கூறிய மரபுப் புரிதல் மிகப்பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. **துறவு என்பது ஒருவர் தனது ஆன்மாவை மீட்க உலகைத் துறப்பதாக அல்ல, மாறாக உலகை மீட்பதற்காகத் தம்மைத் துறப்பதாகவே பரவலாகப் புரிந்துகொள்ளப்படலாயிற்று.** இத்தகைய பாணிதான் துறவறத்திற்கு முழுமுதல் மாதிரியான இயேசுவிடம் காணக்கிடப்பது. அவர் மண்ணையும், மனிதனையும் உலகிய உறவுகளையும் ஈடுபாடுகளையும் ஒதுக்கி வாழ்ந்தவர் அல்ல. மாறாக, அவர் விண்ணைத் துறந்து மண்ணுக்கு வந்தவர், தம் இறைமையை வெறுமையாக்கி மனித இயல்பை ஏற்றவர், ஏனைய மனிதரை வாழவைக்க தம்மையே பணியாளர் ஆக்கிக்கொண்டவர்.

இயேசுவே கிறிஸ்தவத்தின் முதல் துறவி. அவரை முன்மாதிரியாக வைத்து நோக்கும்போது, அவரது உலகியல் ஈடுபாடு அல்லது சமூக மாற்றச்செயல்பாடு என்பது அவரைப் பின்பற்றும் தீவிர சீடத்துவமாகிய துறவற வாழ்விற்கு இன்றியமையாதது ஆகிறது. ஏனெனில், கடவுள் படைத்த, தம் மகனையே அதனுடைய மீட்புக்காகத் தரும் அளவிற்கு அன்புசெய்த உலகம் இது (காண். யோவா 3:16). இதனால் இந்த மண்ணுலகைச் சார்ந்த எதையும் தமக்கு அந்நியமானது என இயேசு கருதவில்லை. மனிதத்தைச் சார்ந்த எதுபற்றியும் அக்கறை அற்றவராக அவர் வாழவில்லை. அவரது இறை ஆட்சி இலட்சியம் என்பது வையகத்திலிருந்து மனித ஆன்மாக்களை அந்நியப்படுத்தி அவற்றை வானுலகம் கொண்டு சேர்ப்பது அல்ல. மாறாக, அது மனித உள்ளங்களை இறை அனுபவப்படுத்தி, மனித உறவுகளை அன்புமயமாக்கி குடும்பங்களை அருள்நிறைவாக்கி, குழுமங்களை நீதிநெறிப்படுத்தி, மனித வாழ்வுகளை இன்பமயமாக்கி இறை ஆட்சியாக வளர்த்தெடுப்பது. இத்தகைய உலகியல் அக்கறையும் ஈடுபாடும் கிறிஸ்தவத் துறவறத்திற்கும் மையமானவை. இந்த மண்ணுலகின்மீதும் அதில் வாழும் மாந்தர்களின் முழுநலவாழ்வுபற்றியும் அதற்கு இன்றியமையாத நீதிநிறை சகோதரத்துவ சமூக உருவாக்கத்திலும் ஆழ்ந்த கரிசனையும் அதற்கான ஆற்றல்மிகு தொடர் செயல்பாடும் அற்ற துறவு எதுவும் உண்மையானது அல்ல.

கிறிஸ்தவத் துறவறத்தை வேரோட்டமான, முழுமையான, தீவிரமான சீடத்துவ வாழ்வு எனப் புரிந்துகொள்ளும்போது, துறவிகள் என்போர் ஏனையோரைவிட அதிகமாக இந்த உலகை நேசிப்பவர்களாக இருத்தல் அவசியமாகிறது. தங்களை ஆன்மீகவாதிகள் என இனம் காட்டிக்கொண்டு, மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டுப் பிரச்சினைகள் பற்றிய அக்கறையும் அவற்றைச் சீர்செய்து செம்மைப்படுத்துவதற்குரிய செயல்பாடுகள் எதுவும் இன்றி வெறும் சமயச்செயல்பாடுகளிலும் பக்தி முயற்சிகளிலும் மூழ்கிக்கிடப்பவர்களாக இவர்கள் இருக்க முடியாது.

மாறாக, இயேசுவைப்போல் அவர்களும் 'மாந்தர்கள் அனைவரும் நிறைவு பெற (காண், யோவா 10:10) தம்மையே அர்ப்பணித்தவர்கள். அவர் கொண்டிருந்த சுயநலமற்ற தெய்வீக உலகப்பற்றில் துறவிகளும் பங்காளிகளே. இத்தகைய உலகப் பற்று காரணமாக சமூகத்தைச் சீர்குலைக்கும் தீமைகள், அநீதிகளுடன் ஒத்துப்போக அவர்கள் மறுப்பவர்கள், அவற்றைத் தீவிரமாக எதிர்த்துச் செயல்படுபவர்கள், அவரது இறை ஆட்சி இலட்சியத்திற்கு ஏற்ப அதனைப் புத்துலகமாகப் புனைந்தெடுக்க முயல்பவர்கள். இத்தகைய உலகியல் அர்ப்பணமும் ஈடுபாடுமே கிறிஸ்தவத் துறவறத்தின் உண்மையான பொருளும் உயர்நோக்கமும் ஆகும். **இதை உணர்த்தவே அண்மைக்கால பல ஆசிரிய ஏடுகள் துறவை 'அர்ப்பண வாழ்வு' எனக் குறிப்பிடுகின்றன.**

துறவு வாழ்வின் இந்த அர்ப்பணம் இறைத்தந்தைக்குச் செய்யப்படுவதே. ஏனெனில் அவரே நம்மைப் படைத்து, பாதுகாத்து, நாம் நிறைவாக வாழ்ந்திட தம் மகன் இயேசுவையே அளிக்கும் அளவுக்கு நம்மீது அன்புகொண்டவர். எனினும் அது மண்ணுலகையும் மனிதரையும் மறந்த, வெறும் விண்ணை நோக்கிய பக்திப்பரவசமாக இருந்துவிடக்கூடாது. மாறாக, இறைத்தந்தைக்குச் செய்யப்படும் இந்தத் துறவற அர்ப்பணம் மக்கள் நலனுக்காக, குறிப்பாக ஏழை எளியவரின் உயர்வுக்காகச் செயல்படுத்தப்படும்போதுதான் அது உண்மையானது ஆகிறது. ஏனெனில், யேசு நமக்கு அனுபவமாக்கியுள்ள இறைத்தந்தை மக்களின் கடவுள். மனிதரின் வளர்ச்சியில்தான் அவர் புகழ்ச்சி அடைபவர். அவர்களது நிறைவில்தான் அவரும் மாட்சிமை பெறுபவர்.



## 3. இறை ஆட்சி இயக்கத்தின் முன்னணிச் செயல்வீரர்கள்

துறவற வாழ்வுக்கு இன்றியமையாத மாற்றுச் சமூக உருவாக்கத்திற்கான ஈடுபாடு, தீவிரத்தன்மை கொண்டது மட்டும் அல்ல, முன்னோடித்தன்மையும் கொண்டதாகும். அதாவது, இயேசுவின் இறை ஆட்சி இலட்சியத்தையும் விழுமியங்களையும் தங்களது துறவறச் சபைக்குரிய தனிவரத்தின் தடம் நின்று, காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்பச் செயல்படுத்தும் முன்னோடிப் பணியாளர்களே துறவியர். ஒவ்வொரு காலகட்டத்திலும் திருச்சபை எனும் இறை ஆட்சி இயக்கத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, துணிவுடன் முன்முயற்சிகள் எடுத்துச்செயல்படுத்தும் முன்னணி உறுப்பினர்கள் அவர்கள்.

துறவற வாழ்வு என்பது திருச்சபையின் அருங்கொடைத் தன்மையைச் சார்ந்தது. அதாவது அது திருச்சபையின் நிறுவன அமைப்பின் ஓர் அங்கம் அல்ல. மாறாக, அதன் இயக்கத்தன்மையின் சிறப்பான, ஆற்றல்மிக்க ஒரு வெளிப்பாடு. இயேசு தொடங்கியதும், திருச்சபையாக இன்றும் தொடருவதும், முதலும் முக்கியமாக ஓர் இறை ஆட்சி இயக்கமே. அந்த இயக்கத்திற்குத் தொடர்ந்து உயிரூட்டி வளர்க்கவும், அதன் மையக்குறிக்கோளான இறை ஆட்சி இலட்சியத்தையும் விழுமியங்களையும் நோக்கி அதனை வழிநடத்தவும் இயேசு நிறுவிய நெறியாளர்களின் அமைப்பே திருத்தூதர்களின் குழுமம். அதுதான் காலப்போக்கில் திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள் எனும் ஆட்சியமைப்பாக உருவெடுத்தது. இந்த நிர்வாக அமைப்பே திருச்சபை. எனினும் ஆதிக்கச் சிந்தனையும், செயல்முறையும் பிற்காலத்தில் பரவலாக இருந்தபோதிலும், அதன் ஒரே நோக்கம் திருச்சபையின் இறை ஆட்சி இயக்கத்தன்மையைக் காத்து வளர்ப்பதே. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் திருச்சபை பற்றிய கொள்கைத் திரட்டு இதனைத் தெளிவுபடுத்துகிறது. அதில் இறைமக்கள் பற்றிய பகுதி இரண்டாவது பிரிவாக முன்னிலைப்படுத்தப்பட்டு ஆட்சியமைப்புப்பற்றிய படிப்பினை மூன்றாவது பிரிவாகப் பின்தள்ளப்பட்டது இதனை நிலைநாட்டவே.

திருச்சபைக்கு இன்றியமையாத இறை ஆட்சி இயக்கத்தன்மையையும் ஈடுபாடுகளையும் காத்து வளர்ப்பதே திருச்சபை ஆட்சியமைப்பின் ஒரே நோக்கம் என்றாலும், அந்த நோக்கம் மறுக்கப்படும் அல்லது முடக்கப்படும் அளவுக்கு ஆட்சியமைப்பு முன்னிலைப்படுத்தப்படும் ஆபத்து இருப்பது ஒருபுறம். மறுபுறம், அந்த ஆட்சியமைப்பில் உள்ளவர்கள் தங்கள் சுயநலத்தேவைகளைக் கருத்திற்கொண்டு சுவை குன்றிய உப்பாக, சுடர் மங்கிய விளக்காகத் திருச்சபை எனும் இறை ஆட்சி இயக்கத்தை முடமாக்கிவிடலாம். காலத்தின் அறிகுறிகளைக் கண்டுகொள்ளாது. தங்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டவை அல்லது பாதுகாப்பானவை எனும் காரணத்திற்காகக் காலாவதியாகிவிட்ட மரபுகளையும் செய்முறைகளையும் கிறிஸ்துவ சமூகங்கள் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் நிலை ஏற்படலாம். ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் என்போரின் ஏக்கப்பெருமூச்சுக்களுக்குச் செவிகளை மூடிக்கொண்டு ஆதிக்கசக்திகள் சிந்தும் கூழுக்காகத் திருச்சபையின் பிறப்புரிமையையே விலைபேசிவிடலாம்.

நான்காவது நூற்றாண்டில் உரோமைப் பேரரசு கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்ட காலம் முதல் இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகும்வரை கிறிஸ்தவ ஆட்சியாளர்களும் சமூகங்களும் இறையாட்சி இலட்சியத்தையும் விழுமியங்களையும் பல்வேறு அளவுகளில் விட்டுக்கொடுத்துவிட்ட வரலாற்று நிகழ்வுகள் எத்தனையோ உள்ளன. இந்திய, இலங்கைத் திருச்சபைகளும் இத்தகைய போக்குகளிலிருந்து முற்றிலும் விதிவிலக்கானது என நாம் கூறமுடியாது. ஏனெனில், சாதியம், ஆணாதிக்கம், அருள்பணியாளர் ஆதிக்கம் என்பன போன்ற இறை ஆட்சிக்கு எதிரான பல கூறுகளுடன் நமது திருச்சபைகள் இன்றும் சமரசம் செய்துகொண்டுதான் இருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது.

இத்தகைய காலங்கள் அல்லது சூழ்நிலைகளில் திருச்சபை புதுப்பிக்கப்பட வேண்டும். அது மழுங்கடித்துவிட்ட இறையாட்சி உணர்வையும் உறுதிப்பாட்டையும் அதில் தூண்டியெழுப்ப வேண்டும். அது மறந்துவிட்ட விழுமியங்களை அதற்கு நினைவூட்ட வேண்டும். அது காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப முனைந்து செயல்படுத்தத்தவறிவிட்ட முக்கிய பணிகள் முன்னெடுத்துச் செய்யப்படவேண்டும். இதற்காகத் தூய ஆவி திருச்சபைக்குத் தருகின்ற அருங்கொடைகள் அல்லது அதில் எழுப்புகின்ற ஆற்றல்மிக்க இயக்கங்களே அந்தந்தக் காலத்துத் துறவற சபைகள். ஆம், காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப, அதாவது பாதிக்கப்பட்ட மக்கள் சமூகங்களின் முக்கிய தேவைகளை முன்னிறுத்தி, திருச்சபையின் முன்னணிச் செயல்வீரர்களாகப் படைப்பாற்றலுடன் புதுப்புதுப் பணிகளை ஏற்றுச்செயல்படுவதே துறவறத்தாரின் இயல்பும் அழைப்பும்.

ஆம், உலகின் சமூகமோ திருச்சபையோ கண்டுகொள்ளாத சமூகச் சீரழிவுகளை அல்லது மக்கள் பிரச்சினைகளைக் கண்டுகொண்டு அதை உலகின் அல்லது திருச்சபையின் கண்களுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டவேண்டியவர்களே துறவிகள். கிறிஸ்தவ சமூகங்கள் முனைப்புடன் ஈடுபட மறந்துவிட்ட அல்லது தவறிவிட்ட முக்கிய பணிகளை முன்னெடுத்துச்செய்ய முதலில் வரவேண்டியவர்கள் துறவியர். பாதுகாப்பு இன்மையையும் பல இழப்புக்களையும் எதிர்கொண்டு தீவிரத்தன்மையோடு உலகிய சமூகத்தில் தலையீடு செய்வதற்கோ முன்னோடிப் பணிகளைத் தொடங்குவதற்கோ துணிச்சலுடன் திருச்சபையின் தேவைகளுக்கு ஏற்பத் தங்களையே அர்ப்பணிப்பவர்கள் துறவிகள். சுருங்கக்கூறின், நாளை திருச்சபையும் உலகிய சமூகங்களும் நடக்கவேண்டிய பாதையை, பின்பற்றவேண்டிய வாழ்க்கை முறையை, ஈடுபட வேண்டிய முக்கிய பணிகளை துறவிகள் இன்றே நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டியவர்கள், இறைவாக்கினருக்கு உரிய தீர்க்கமான தரிசனத்துடன் திருச்சபை எனும் இயக்கத்தின் முன்னோடிப் பணிகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியவர்களே அவர்கள்.

துறவற வாழ்வின் தோற்றமும் தொடர்ந்த வரலாறும் இதை நமக்கு நன்கு உணர்த்துகின்றன. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த திருச்சபை தன்னை உரோமைப் பேரரசுடன் மிகையாக ஒன்றுபடுத்திக்கொண்டு, அது தந்த பாதுகாப்பு, அதிகாரம் வசதிகள், செல்வம், செல்வாக்கு என்பவற்றை ஏற்றுக்கொண்டு எளிய வாழ்வு, சகோதரத்துவ உறவு, சமத்துவப் பகிர்வு எனும் இறையாட்சி விழுமியங்களை விட்டுக்கொடுக்கத் தொடங்கியது. இதனால் அது தன் புளிக்காரத் தன்மையையும் மாற்று சமூக உருவாக்கப் பணியையும் பெரிதும் மறந்து நின்றது. அந்நிலையில்தான் அன்றைய பேரரசில் ஏழைகளை மறந்துவிட்ட செல்வர்களின் ஆடம்பர சுகவாழ்வையும், ஆதிக்க ஆட்சிமுறையையும் எதிர்க்கும் வகையிலும் திருச்சபைக்கு இறை ஆட்சியின் மைய விழுமியங்களை நினைவூட்டி மாற்றுமுறைகளின் தேவைக்கு அறைகூவல் விடுக்கும் வகையிலும் தோன்றியதே புனித பெனடிக்ட் போன்றோர் முன்னிலைவகித்த மாபெரும் துறவற இயக்கம். அதன் சிறப்புப் பண்புகளாக இருப்பவை எளிய வாழ்வு, பொருளாதாரப் பொதுவுடைமை, சகோதரத்துவ சமஉறவு, உடல் உழைப்பு, செபம், ஏழை எளியோர்க்கு உதவி, ஏழைச்சிறாருக்குக் கல்வி என்பன.

அதுபோலவே வணிக இலாபம் பெருகி, செல்வர் ஏழைகள் எனும் வேறுபாடு சமூகத்தில் வளர்ந்து திருச்சபையின் அதிகாரிகளும் பண்ணையார்கள் பாணியில் சுகவாழ்வு நடத்திய காலத்தில் அதற்கெல்லாம் சவால்விடும் வகையில் எழுந்ததே ஏழைச் சகோதரர்கள் என அழைக்கப்பட்ட புனித அசிசி பிரான்சியின் சபை. தவறான கொள்கைகளை எதிர்த்த மக்களுக்கு நலமான நற்செய்திப் போதனை அளிக்க திருச்சபையில் பணியாளர்கள் தேவைப்பட்டபோது, அந்தத் தேவையை நிறைவுசெய்ய எழுந்ததே புனித தோமினிக்கின் போதகர்களின் சபை. இதுபோலவே திருப்பயணிகளை வரவேற்று உபசரிக்க, அடிமையாக பிடிக்கப்பட்டவருக்குப் பதிலாக தங்களையே கொடுத்து அவர்களை மீட்க, சாலையோர இளைஞர்களுக்கு அடைக்கலம் தந்து அவர்களை நன்நெறிப்படுத்த ..... என்பவைபோல ஒவ்வொரு காலத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு பணிகளை ஆற்றவே புதுப்புதுத் துறவற சபைகள் தோன்றின.

இத்தகைய வீரத்தியாக வரலாற்றின் வரிசையில் அண்மையில் எழுச்சி கண்டதுதான் சாலையோரங்களில் ஆதரவற்றுக் கிடக்கும் நோயாளரையும் முதியோரையும் அழைத்துவந்து அவர்களுக்கு இல்லம் தந்து பராமரிக்க கல்கத்தா நகரில் அன்னை தெரேசா தொடங்கிய 'அன்பின் மறைத்தூதுப் பணியாளர்கள்' எனும் துறவற சபை. மேலும் காலப்போக்கிலே அவசியம் அற்றவை என ஆகிவிட்ட பணிகளை விட்டுவிட்டு, காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப புதிய பணிகளை மேற்கொள்ள முன்வரும் துறவற சபைகளும் உண்டு.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு சிறப்புக் கட்டுரை

# திருச்சபையில் துறவியரின் பங்கும் பணியும் என்ன?

- 12ஆம் பக்கத் தொடர்ச்சி -

## 4. ஓங்கி நிற்கும் சுற்றுச்சுவர்களும் ஒதுங்கிநிற்கும் துறவியரும்

இறை ஆட்சியின் மாற்றுக் கலாச்சாரத்தைத் தீவிரமாகவும் காலத்தின் தேவைகளுக்கு ஏற்பப் புதுப்புது வகைகளிலும், வாழ்ந்து செயல்படுத்தும் திருச்சபையின் முன்னணி செயல்வீரர்களே துறவியர் என்றால், அந்த அழைப்பை இன்று அவர்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றுகின்றார்கள் எனும் கேள்வி எழுகிறது.

சீரிய இந்த அழைப்பிற்கு ஏற்ப மிகச் சிறப்பாக இறைவாக்குத் தன்மையோடு செயல்படும் சில துறவற சபைகளும் பல துறவியரும் இருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத மெய்மை. போக்குவரத்து, மின்சாரம், தூய்மையான குடிநீர் என்பன போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாத பல தொலைதூரத்துச் சிற்றூர்களுக்குச் சென்று அங்குள்ள ஏழைகள், தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் என்போருக்குச் சகோதர சகோதரிகள் எனத் தங்களை உறவாக்கிக்கொண்டு அவர்களுக்குக் கல்வி, மருத்துவம், விழிப்புணர்வு தருவதுபோன்ற தியாகமிகு பணிகளை இன்றும் தேர்வுசெய்துகொண்டிருக்கும் துறவறக் குழுமங்கள் எண்ணற்றவை. அதுபோல தெருவோரச் சிறார்கள், முதியவர்கள் என்போர்க்குக் காப்பகங்கள் அமைத்து அவர்களுக்கு வழிகாட்டி வாழ்வின் ஒளியேற்றும் அரும்பணிகளை நாடுபோற்றும் வகையில் ஆற்றுவதிலும் துறவியர் பலர் முன்னணியில் உள்ளனர். நம் ஊர் மருத்துவ முறைகள், நாட்டுப்புறக் கலைகள் என்பவற்றைக் காத்து வளர்க்கும் அல்லது விடுதலைக் குழுக்களை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள சில துறவியரும் உள்ளனர்.

இருப்பினும் பெரும்பாலான துறவியரும் துறவற சபைகளும் தங்களது இன்றியமையாத, இயல்பு சார்ந்த அழைப்பான இறை ஆட்சியின் மாற்றுச் சமூக உருவாக்கப் பணியில் எந்த அளவிற்கு முனைப்புடன் ஈடுபட்டு முன்முயற்சிகள் எடுத்துச் சிறப்பாகச் செயற்படுத்துகின்றனர் என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது. **தமிழகத்தில் மட்டும் கத்தோலிக்கத் துறவியர் ஐந்து ஆயிரத்திற்கு அதிகம் உள்ளனர்.** தமிழகத்தில் உள்ள கல்விக்கூடங்கள், கல்லூரிகளுள் மிகப்பல அவர்கள் பொறுப்பிலேயே உள்ளன. அவற்றுள் பல மிக வெற்றிகரமாகச் செயல்படுபவை எனும் புகழும் பெற்றவை. இருப்பினும் தமிழகத் திருச்சபை எனும் இயக்கத்தில் இறைவாக்கினர் தன்மையோடு முன்னின்று செயல்படும் முன்னோடிப் பணியாளர்கள் என நாம் அவர்களை கருதிவிட இயலாது. அதுபோலவே தமிழகத்தில் சமூக மாற்றம் நிகழ்வதற்கு ஆற்றல்மிக்க காரணிகளாகவோ கருவிகளாகவோ அவர்கள் விளங்குகின்றனர் என நாம் கூற இயலாது.

அவர்களுள் மிகப்பெரும்பாலானோர் ஈடுபட்டுள்ளது கல்விப்பணியே. தாங்கள் நடத்தும் தொடக்க நடு, உயர், மேல்நிலைக் கல்விக்கூடங்கள் அல்லது கல்லூரிகளில் அவர்கள் தரும் கல்வி சமூக மாற்றம் ஏற்படுத்தும் சக்தியாக விளங்குகிறது என நாம் கூறுவது கடினம். கல்வித்தரத்திலோ, கட்டுப்பாட்டிலோ, நல்லொழுக்க நெறிகளைப் புகட்டுவதிலோ துறவியர் நடத்தும் கல்விக்கூடங்கள் இன்று ஏனைய தனியார் கல்விக் கூடங்களிலிருந்து குறிப்பிடத்தக்கமுறையில் உயர்ந்து ஓங்கி நிற்கின்றன என்றுகூட நாம் கூறுவதற்கில்லை.

பொதுவாகக் கூறுவதெனில், துறவற வாழ்வு இன்று தனது இன்றியமையாத இயல்புப் பண்பாகிய இறைவாக்கினர் தன்மையும், முன்னோடி இயல்பும் மங்கி, இறையாட்சிக்கான தீவிர ஈடுபாடும் தியாக அர்ப்பணமும் குன்றி, ஒரு தேக்கநிலையில் உள்ளது என்றால் அது மிகையாகாது.

இத்தகைய தேக்க நிலைக்கான காரணங்கள் பல. அவற்றுள் சமூகத்திலிருந்து விலகி ஒதுங்கி வாழ்தல், நிறுவனமயமாதல், பணத்திற்கு முதன்மை, சொத்து சேர்த்தல், மிகையான பழமைச் சார்பு என்பன குறிப்பிடத்தக்கவை.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு உலகு தீயது, அது அலகையின் கருவி, பாவத்திற்குத் தூண்டுவது எனும் எண்ணமே பரவலாக இருந்தது. அன்று அத்தகைய உலகைத் துறப்பதே அதாவது மக்கள் குடியிருப்புக்களிலிருந்து தனியே விலகி துறவற இல்லங்களை அமைத்துக்கொண்டு, உலகிய ஈடுபாடுகள் இன்றி ஒதுங்கி வாழ்வதே துறவறம் எனக் கருதப்பட்டது.

மக்கள் குடியிருப்புகள் அருகே துறவற இல்லம் அமைந்திருந்தாலும் அது இவ்வுலகைச் சார்ந்தது அல்ல, இவ்வுலகத் தொடர்பு அதற்கு இல்லை என்பதை அதைச் சுற்றிலும் ஓங்கி உயர்ந்து நின்ற சுற்றுச்சுவர்கள் அடையாளப்படுத்தின, அனைவருக்கும் உணர்த்தின. **ஆனால் அதற்கு மாறாக இன்று இறையாட்சி சார்ந்த உலகிய ஈடுபாடே துறவறத்தின் சாரம் எனப் புரிந்துகொள்ளப்படுகிறது.** எனினும் முன்பைவிட அதிக உயரத்தோடு இன்றும் எழுப்பப்படும் துறவு இல்லத்துச் சுற்றுச்சுவர்கள் பெரும்பாலான துறவறக் குழுமங்கள் போதிய உலகிய ஈடுபாடு இன்றி இருக்கின்றன என்பதையே அறிக்கையிடுகின்றன.

ஆம், சுற்றி வாழும் மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளால் பெரும்பாலான துறவிகளின் வாழ்வோ, பணிகளோ, ஆன்மீகமோ அதிகம் பாதிக்கப்படுவதில்லை. மக்கள் பிரச்சினைகளில் அவர்களது ஈடுபாடு அதிகமில்லை என்பதே இன்றைய மெய்மைநிலை. துறவியரின் பணிகள் பெரிதும் நிறுவனமயமாகி நிற்பதும், அவர்கள் அதிமாக ஈடுபட்டுள்ள கல்வி நிறுவனங்களிலிருந்து பணம் நிறையக் கிடைப்பதும், பழக்கப்பட்டுவிட்ட பாதுகாப்புக்களை இழந்துவிடத் துணிவில்லாத பழமைச்சார்பும் இதற்கு முக்கிய காரணங்கள்.

இன்றைய தமிழகத்திலும் இந்தியாவிலும் பெரும்பாலான துறவியரின் பணி, நிறுவனம் சார்ந்த கல்விப் பணியாகவே உள்ளது. கல்வியறிவு என்பது ஒரு சில மேல்சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருந்த ஒரு காலகட்டத்தில் ஊர்ப்புற ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் துறவியர் தந்த கல்வியானது சமூக மாற்றத்திற்கும் மிகவும் உதவியுள்ளது என்பதை நாம் மறுக்க இயலாது. ஆனால் இன்று அந்நிலை மாறிக்கொண்டிருக்கின்றது. ஆங்கில மொழிவழிக் கல்வி நிறுவனங்களே இன்று துறவியர் பணியில் முன்னுரிமை பெறுகின்றன. இத்தகைய கல்விக்கூடங்கள், மக்கள் மையத்தன்மை என்பதைவிட நிறுவனமையப் போக்கோடுதான் செயல்படுகின்றன. அதாவது மக்கள் நலனைவிட, அதிலும் குறிப்பாக ஏழை மக்களின் நலனைவிட, நிறுவனத்தின் வெற்றி, பெருமை என்பவையே அதன் நிர்வாகத்தின் முதன்மையான அக்கறைகளாக மாறிவிடுகின்றன.

இதனால் இறையாட்சியின் முன்னுரிமையான ஏழைகளுக்கு அவற்றில் இடமில்லை, அவற்றின் நிர்வாகமும் பெரிதும் ஆதிக்கத் தலைமைப் பாணியில்தான் நடைபெறுகின்றது. கூட்டுத்தலைமை, சகோதரத்துவ உறவுகள், நலிந்தோர்மீது தனிப்பட்ட அக்கறை என்பவையெல்லாம் அவற்றிற்குப் பெரிதும் அந்நியமாகிப்போன விழுமியங்களாகவே உள்ளன.

உலகியல் பாணியில் நடத்தப்படும் இத்தகைய நிறுவனங்கள் இயல்பாகவே கல்வி வியாபாரத் தளங்களாக ஆகிவிடுகின்றன. இது ஆங்கில மொழிவழிக் கல்வி நிலையங்களுக்கு அதிகம் பொருந்தும். இவை துறவற சபைகளுக்குப் பணம் சேர்க்கும் வங்கிகளாக மாறியுள்ளன என்பது உலகறிந்த உண்மை. பணம் பெருகும்போது துறவியர் நடத்தும் நிறுவனங்கள் மட்டுமல்ல, அவர்களுடைய இல்லங்களும் மாளிகைகளாக மாறுகின்றன. அங்கு அவர்களது வாழ்வும் உயர், நடுத்தர வர்க்கத்தினர் பாணியில் வசதிகள் மிகுந்ததாக அமைகிறது. வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும்போது அவற்றிற்குப் பழக்கப்பட்டுவிடும் துறவியர் பாமர மக்களிடமிருந்து இயல்பாகவே அந்நியப்படுகின்றனர். அவர்கள் பழகும் பாணிகளிலும் எளிமை, ஏழைகளுடன் கூட்டொருமை என்பன மறக்கப்படும்நிலை உருவாகிறது.

இத்தகைய நிறுவனங்களிலிருந்து மிகப்பெரும் தொகை சபையின் தலைமை இடத்திற்கே செல்கிறது. இதனால் தனித்துறவியர் ஏழைகளாக இருந்தாலும் அவர்களுடைய சபைகள் சில தமிழகத்தில் உள்ள வங்கிகளுடன் போட்டிபோடும் அளவுக்கு பெரும் பணக்கார சபைகளாக விளங்குகின்றன என்பது எளிதில் நாம் கண்டுகொள்ளக்கூடிய மெய்மை. இத்தகைய சபைகள் பல ஏக்கர் கணக்கில் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதும், ஆண்டாண்டுதோறும் புதுப்புது இடங்களில் துறவற இல்லங்களையும் பணம் ஈட்டும் கல்வி நிறுவனங்களையும் தொடங்கும் செயல்பாடும் சுழல்வட்டம்போல தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இவ்வாறு சபையின் தலைமைப் பீடத்தில் பணம் குவிந்திருப்பதால் பதவிப் போட்டிகளும், சாதிச்சண்டைகளும் ஊர் உலகம் சிரிக்கும் அளவிற்கு அரங்கேறுவதும் அண்மையில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

**செல்வமும் சொத்துக்களும் நிறுவனங்களும் அதிகாரமும் வாழ்க்கை வசதிகளும் சமூக அங்கீகாரமும் மதிப்பும் பெருகிவிட்ட நிலையில் அவற்றையும் அவை தரும் பாதுகாப்பு உணர்வையும் விட்டுவிட்டு இறை ஆட்சிகோரும் தீவிர தியாக ஈடுபாடுகளுக்கு இன்றைய பெரும்பாலான துறவியர் தயாராக இல்லை என்பதே நடைமுறை மெய்மை.** இன்றைய சமூகப் பிரச்சினைகளையும் அவசரமான மக்கள் தேவைகளையும் மையப்படுத்தி ஆழமாகச் சிந்திப்பதோ, அவற்றிற்கு ஏற்ப புதிய பணிகளைத் தொடங்கும் முன்முயற்சிகளோ நிறுவனமயமாக்கிவிட்ட சபைகளில் மிக அரிதாகவே காணக்கின்றன. அத்தகைய பணிகளை முன்னெடுத்த சபைகள்கூட இன்று அவற்றிற்கு முதன்மையும் முக்கியத்துவமும் தராது, செயல்திறன் கொண்ட உறுப்பினர்களைப் போதிய எண்ணிக்கையில் அவற்றில் ஈடுபடுத்தாது பெயரளவில் அவற்றை நடத்தும் நிலையே அதிகம் காணக்கிடக்கிறது.

கலாவதியாகிவிட்ட துறவற அமைப்புகளையும் பணிகளையும் வாழ்வுப் பாணிகளையும் கைவிட்டு, காலத்தின் அறிகுறிகளை முன்வைத்துப் புரட்சிகரமாகச் சிந்தித்து புதுமையான பணிகளைச் செய்ய புதிய சபைகளைத் தொடங்கியவர்களே துறவற சபைகளின் நிறுவனங்கள். ஆனால் அத்தகைய சபைகளின் உறுப்பினர்களோ இன்று தங்கள் சபை நிறுவுனர்கள் திரும்பிவந்தால் என்னென்ன மாற்றங்களை வரவேற்பர்? என்னென்ன புதிய பணிகளை முன்னெடுப்பர்? எனச் சிந்திப்பது அரிதாகவே உள்ளது. மாறாக "நிறுவுனரின் அருங்கொடை" எனக் கூறிக்கொண்டு அவர்கள் அரைத்த அதே மாவையே இவர்களும் இன்று அரைத்துக்கொண்டிருக்கும் மிகையான மரபுப்போக்கே பெரிதும் காணக்கிடக்கிறது. இதனால் துறவற வாழ்வு என்பது இன்று பல வகைகளில் தனது அர்த்தத்தையும் சாட்சிய ஆற்றலையும் இழந்து, சுடர் மங்கிய விளக்காக, சுவை குன்றிய உப்பாகவே விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

## இறுதியாக

துறவற வாழ்வில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையைப் போக்கி அதனைப் புதுப்பிக்க, பலமுனை முயற்சிகள் தேவை. அவற்றுள் முக்கியமான ஒன்று துறவியர் பொதுநிலையினரிடமிருந்து அந்நியப்பட்டிருக்கும் நிலை மாறி, அவர்களுடன் சகோதரத்துவ உறவோடும், பிரச்சினைகளில் கூட்டொருமையும் பணிப்பொறுப்புகளில் பகிர்வும் கொண்டும் வாழத் தொடங்குவதுதான். அதாவது தாங்களே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தங்களுக்கு மட்டுமே தேவ அழைத்தல் கிடைத்துள்ளது எனும் உயர்வு மனப்பான்மையைத் துறவியர் கைவிடுவது இன்றியமையாதது. மேலும் இறை ஆட்சிக்கான தீவிர ஈடுபாடு, அதற்குத் தேவையான தனிப்பண்புகள் என்பவை தவிர ஏனைய அனைத்திலும் பொதுநிலையினருடன் தங்களையே ஒன்றுபடுத்திக்கொண்டு, அவர்களுக்குச் சகோதரர்கள், சகோதரிகளாக மாறுவது, அவர்களது இன்ப துன்பங்களில் பங்கேற்பது, அவர்களைவிட்டு விலகி ஒதுங்கி வாழ்வதைத் தவிர்த்து மக்கள் குடியிருப்புகளுக்கு இடையே தங்களது துறவு இல்லங்களை அமைத்து வாழ்வது என்பன அவர்களிடமிருந்து துறவியர் அந்நியப்பட்டிருக்கும் நிலையை மாற்ற உதவும். அதுபோலவே அன்பியங்களிலும் பங்குத்தளங்களில் உள்ள பக்தசபைகள், இயக்கங்களிலும், பல்வேறு பணிகளிலும் துறவியர் ஈடுபட்டு பங்கேற்பதும் இன்றியமையாததே.

பொதுநிலையினருடன் துறவியர் கொண்டிருக்கவேண்டிய கூட்டொருமையின் இன்னொரு பரிமாணம் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள்பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வு தருவது. அவற்றை ஆக்கபூர்வமாகச் சந்திக்கப் பயிற்சிகள் தருவது. சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள அவர்களை ஒருங்கிணைத்துச் செயல்படச்செய்வது, அவர்களுடைய முயற்சிகள் போராட்டங்களில் தாமும் ஒன்றுபடுவது என்பன ஆகும்.

மேலும் தங்களுடைய பணிகளிலும் ஆர்வமுள்ள பொதுநிலையினரைப் பங்காளர்களாக இணைத்துச் செயல்படுவது இன்றியமையாதது. குறிப்பாக, சபையின் தனி அருள்கொடையில் ஈடுபாடுகொள்ள விருப்பமும் தகுதியும் உள்ள அல்லது உடன் உழைக்கின்ற பொதுநிலையினரைச் சபையின் ஒத்துழைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனும் இன்னொரு நிலையினராக சபையின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்வது துறவற சபைகளின் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சிக்கு உதவும். அதுபோல சபைகள் நடத்தும் பல்வேறு கல்வி அல்லது சேவை நிறுவனங்களின் நிர்வாகத்திலும் பொதுநிலையினருக்கு எத்தகைய பங்கு அளிக்க முடியும் என துறவற சபைகள் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. ஏனெனில் துறவற சபையின் பணிகளும் நிறுவனங்களும்கூட அடிப்படையில் இறைமக்களாகிய திருச்சபையின் பணிகளே, நிறுவனங்களே. அவற்றின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இறைமக்கள் அனைவருக்கும் பங்கு உண்டு.

சமயம் சராத சேவை அமைப்புக்கள், கலை இலக்கியப் பண்பாட்டு மையங்கள், விடுதலைக் குழுக்கள், இயக்கங்கள் என்பவற்றிலும் ஏனைய பொதுநிலையினர் போலவும் அவர்களுடன் இணைந்து துறவியர் ஈடுபடுவது இன்று மிகவும் தேவைப்படுகிறது. காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப துறவியர் தங்களுடைய பணிகளை ஆற்ற இத்தகைய குழுக்களும், அமைப்புக்களும், இயக்கங்களும் அவர்களுக்கு பாதைகாட்ட முடியும். மேலும் நற்செய்தி விழுமியமாக்கலால் உலகை ஊடுருவி உருமாற்ற அவை சிறந்த தளங்களாகவும் விளங்குகின்றன. (முற்றும்)

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டியை நிறைவுக்குக் கொண்டுவருகின்றோம்!

கடந்த 143 மாதங்களாக மன்னா பத்திரிகையில் வெளிவந்த மறையறிவுப் போட்டி என்ற இந்தப் பகுதி தனது பன்னிரெண்டாவது அகவையை நிறைவுசெய்கின்றது.

இப்போட்டியில் மிகவும் குறைவான வாசகர்களே பங்கெடுக்கின்ற நிலை காணப்படுகின்றது. நாம் ஏற்கனவே சொல்லிய கருத்துக்களையே மீண்டும் சொல்கின்றோம். வெறும் 25க்கு உட்பட்டோர்தான் இப்போட்டியில் பங்குகொள்கின்றார்கள். அந்தச் சொற்பப் பேருக்காக இப்போட்டியைத் தொடர்ந்தும் நடாத்த வேண்டுமா? இதற்குப் பதிலாக வேறொரு நிகழ்ச்சியைச் சேர்த்துக்கொண்டால் என்ன? என்று நாம் சென்ற மாத மன்னாவில் கேள்வி எழுப்பியிருந்தோம். அதற்கமைய இப்பகுதியை இத்துடன் நாம் நிறைவுக்கு கொண்டுவருகின்றோம்.

### திரு மாட்டின் டயஸ் அவர்களுக்கு நன்றி!

இப்போட்டியை மிகவும் உற்சாகமாகத் தயாரித்து, கடந்த 12 வருடங்களாக உரிய காலத்திற்கு எமக்கு அனுப்பிவந்த பேசாலையைச் சேர்ந்த முன்னாள் அதிபரும், முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரியும் முன்னாள் மன்னார் பிரதேசசபைத் தலைவருமான திரு. ச. மாட்டின் டயஸ் அவர்களுக்கு எமது மன்னா நிர்வாகம், மன்னா வாசகர்கள், மன்னார் மறைமாவட்ட சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றிகளையும் மிகுந்த அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். இவரையும் இவரது அன்புக்குரியவர்களையும் இறைவன்தாமே நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

- மன்னா பதிப்பாசிரியர்

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 142 இற்கான கேள்விகளுக்கு 23 பேர் விடையளித்திருந்தனர்.**

இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

டொ. டர்லின் றொக்சி

சிறுத்தோப்பு, பேசாலை

**பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. ச. டிலைக்சனா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்
2. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை
3. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்
4. இ.அ. ஜான்சி. ஒலிமடு, நானாட்டான்
5. றே. மேரி சன்ஜனா, பொன்தீவுகண்டல், முருங்கன்
6. எம்.தேவி. எமில்நகர், மன்னார்
7. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு
8. அ. டிலோஜனா, சூரிய கட்டைக்காடு, நானாட்டான்
9. ரி. நிசாந்தினி, எழுத்தூர், மன்னார்
10. அ. புளோறன்ஸ் கங்காணி தீவு, நானாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.157

## திருவெளிப்பாடு 1 முதல் 22 முடிய

உங்கள் விடைகளை செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 37 | | 11 | 4 | | 19 | | 06 |
| | 17 | | 36 | | | ❖ | | 16 | |
| | ❖ | | | | 23 | | 21 | | 20 |
| 18 | | | | 22 | 32 | 34 | 13 | | |
| 35 | 15 | | 38 | ❖ | | 14 | | | |
| | | 05 | | | | 10 | | 31 | ❖ |
| 27 | | 26 | 08 | | | | 25 | | 24 |
| ❖ | | | | | 09 | | | ❖ | |
| | 28 | | | 33 | ❖ | | 30 | 07 | |
| 02 | | | 29 | | | 12 | | | 03 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. பசும் ....... எல்லாமே சுட்டெரிக்கப்பட்டது.
2. தூய்மையற்ற பறவைகள் அனைத்தின் புகலிடமாக___ விலங்குகளின் இருப்பிடமாக .......... விட்டாள்.
4. அவர்கள் ............ உடை உடுத்தி, ஆயிரத்து இருநூற்று அறுபது நாளும் ___ எனக்குச் சொல்லப்பட்டது.
5. "எனக்குச் செல்வம் உண்டு .......... உண்டு, ஒரு குறையும் இல்லை" என நீ சொல்லிக்கொள்ளுகிறாய்.
7. நம் கடவுள் ......... முன் அல்லும் பகலும் அவர்கள்மீது ___வெளியே தள்ளப்பட்டான்.
8. அவள் ........... வேதனைகளைக் கண்டு அஞ்சித் தொலைவில் நின்றுகொண்டு,
9. இவர்கள் ............ செய்யப்பட்ட ஆட்டுக்குட்டி வைத்திருக்கும் ___பெயர் எழுதப்படாதோர்
10. அவற்றின் ........... பெண்களின் கூந்தலையும், பற்கள் சிங்கங்களின் பற்களையும் ஒத்திருந்தன.
12. .......... நான் கதவருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன்.
13. அதற்கு தூய ஆவியார் "ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ............ பெறுவார்கள்,"
14. படுகுழியின் வானதூதரே அவற்றுக்கு ...........
15. அதன்மேல் ஏறியிருந்தவரிடம் ஒரு ........... இருந்தது.
18. ........... இறக்கும் தறுவாயில் உள்ளது.
23. தீவுகளெல்லாம் மறைந்துபோயின, ........... களும் காணப்படவில்லை.
27. அப்பெண் செந்நிற கருஞ்சிவப்பு ........... களை, அணிந்திருந்தாள்.
35. கேட்கச் ............ யுடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் சுறுவதைக் கேட்கட்டும்.

### வலமிருந்து இடம்

3. "...........! உலகில் வாழ்வோர்க்கு கேடு வருக! ஐயகோ!" என்று கத்தக் கேட்டேன்.
6. இருபத்து .......... மூப்பர்கள் அரியணையில் வீற்றிருந்தவர்முன் விழுந்து ___ வணங்கினார்கள்.
11. வெற்றி பெறுவோரை என் கடவுளின் கோவிலில் ............ நாட்டுவேன்.
12. ஆட்டுக்குட்டி சென்ற ............ எங்கும் அதைப் பின்தொடர்ந்தவர்கள்.
16. ........... சாம்பிராணிப்புகை இறைமக்களின் வேண்டுதல்களோடு சேர்ந்து ___ எழுப்பிச் சென்றது.
20. நான் என் .............. களுள் இருவரை அனுப்புவேன்.
21. அதனால் அவர்கள் .............. களுக்குப் படைக்கப்பட்டதை உண்டு பரத்தமையில் ஈடுபட்டார்கள்.
22. இறைவாக்கினர்கள், இறைமக்களின் இரத்தக்கறையும் ஏன், மண்ணுலகில் ........... அனைவருடைய ___ காணப்பட்டது.
23. இதோ, விரைவில் வருகிறேன், உனக்குரிய .......... முடியை யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்.
24. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர், அவர்கள்மீது .......... வீசுவார்.
25. ........... எனவும் எகிப்து எனவும் உருவகமாக அழைக்கப்படும்.___ பிணங்கள் கிடக்கும்.
29. ............. பெறுவோரை இரண்டாவது சாவு தீண்டவே தீண்டாது.
31. அரியணையைச்சுற்றி இருபத்து நான்கு அரியணைகள் போடப்பட்டிருந்தன. அவற்றில்___ தலையில் பொன்முடி ............ யிருந்தார்கள்.
33. அது என் ............. தேனைப்போல் இனித்தது.

### மேலிருந்து கீழ்

1. அது படுகுழி வாயிலைத் திறக்கவே, பெரும் சூளையிலிருந்து ............. எழுவதுபோல் அக்குழியிலிருந்து புகை கிளம்பியது.
6. ............ அவர்களுக்கு கடவுளாய் இருப்பேன்.
8. அவருடைய தலைமுடி வெண் கம்பளிபோலும் உறை ............ போலும் வெண்மையாய் இருந்தது.
11. தூய ஆவியாரும் ஆட்டுக்குட்டியின் மணமகளும் சேர்ந்து, "வருக! வருக" என்கிறார்கள்.
15. உமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு, மக்களினம் ஆகிய ___ கடவுளுக்கென்று .......... கொடுத்து மீட்டுக்கொண்டீர்.
19. பின்பு ............ போன்ற ஓர் அளவுகோல் என்னிடம் கொடுக்கப்பட்டது.
26. அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் ஒரு சுருளேட்டைக் கண்டேன், ........... உள்ளும் புறமும் எழுதியிருந்தது.
28. இதன்பின் நான் ஒரு காட்சி கண்டேன். விண்ணகத்தில் ஒரு கதவு திறந்திருந்தது. நான் முதலில்___ "இவ்விடத்துக்கு ............ வா,"
32. அவற்றின் மார்பில் இரும்பாலான மார்புக் ............ அணிந்திருந்ததுபோலத் தோன்றியது.
35. முதலில் நீ செய்துவந்த செயல்களை இப்பொழுதும் .............
36. நகரின் .......... நடுவே பாய்ந்தோடியது.
37. உன் செயல்களையும் ......... உழைப்பையும்___ நான் அறிவேன்.

### கீழிருந்து மேல்

2. ஆகவே மனம் ............ இல்லையேல், நான் விரைவில்___ அவர்களோடு போர் தொடுப்பேன்.
3. ஆண்டவராகிய இயேசுவின் .............. அனைவரோடும் இருப்பதாக!
5. எல்லாம் ............. கடவுளின் கடும் சீற்றம் என்னும் பிழிவுக்குழியில் திராட்சை இரசத்தை அவர் பிழிந்தெடுப்பார்.
12. மனிதர் மண்ணில் தோன்றிய நாள்முதல் இத்துணை பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதே ...............
17. இறந்தோருள் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் ............ வேறொரு நூலும் திறந்துவைக்கப்பட்டது. அது வாழ்வின் ...............
18. இதோ! சோதிப்பதற்காக .............. உன்னைச் சேர்ந்தோருள் சிலரை சிறையில் தள்ளவிருக்கிறது.
23. .............. பொருள்கொண்ட பெயர் ஒன்று அவளது நெற்றியில் எழுதப்பட்டிருந்தது.
28. "........... எடுக்கவும் அதன் முத்திரைகளை உடைத்துப் பிரிக்கவும் தகுதி பெற்றவர் நீரே."
30. மண்ணகத்தின் நான்கு திக்குகளிலும் உள்ள நாடுகளை, அதாவது ............... மாகோகு என்பவற்றை ஏமாற்றவும், ___ அவன் புறப்பட்டுச் செல்வான்.
33. அவர் தம் ............. தூதரை அனுப்பித் தம் பணியாளராகிய யோவானுக்கு அவற்றைத் தெரிவித்தார்.
34. அப்பொழுது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்ற என்னை அந்த வானதூதர் ............ நிலத்துக்குக் கொண்டுசென்றார்.
38. மறைத்து வைக்கப்பட்டுள்ள மன்னாவை வெற்றி பெறுவோருக்கு அளிப்பேன். வெள்ளைக் ........... ஒன்றையும் அவர்களுக்குக் கொடுப்பேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 155

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
இ. ஸ்ரெல்மிதா,
களிமோட்டை, முருங்கன்.

**இரண்டாம் பரிசு:**
ஞா. வினோதர்சி,
முதலைகுத்தி,
உயிலங்குளம்.

**மூன்றாம் பரிசு:**
யே. டெனுஷா,
அருப்பே சிறுமியர் இல்லம்,
பூவரசன்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 155ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. கரோளினி கீர்த்திக்கா, திருகோணமலை.
2. யே. பிபியானா, அருப்பே இல்லம், பூவரசங்குளம்.
3. மேசி செல்வநாயகம், தி. கன்னியர்மடம், பூநகரி.
4. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
5. ரீ. டக்ஷாஜினி, கன்னியர்மட வீதி, தாழ்வுபாடு.
6. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
7. எ. ஜென்சியா, அருப்பே இல்லம், பூவரசங்குளம்.
8. G. அல்பேட், திருகோணமலை.
9. அ. செபஸ்ரியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டான்குளம்.
10. ஞா. ஜெருஷன், முதலைக்குத்தி, உயிலங்குளம்.
11. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
12. அ. இராசநாயகம் சில்வா, பெரிய பண்டிவிரிச்சான்.
13. எம். பிளண்ரீனா, சின்னக்கடை, மன்னார்.
14. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
15. ய. றொகான், தேவன்பிட்டி, மன்னார்.
16. பி. சுஸ்மிதா, நானாட்டான், மன்னார்.
17. ச. சார்மி, தேவன்பிட்டி, மன்னார்.
18. பெ. ரெஜினோல்ட், வவுனியா.
19. சி. வி. யோட்ஸ், மகாறம்பைக்குளம், வவுனியா.
20. டா. யோசேப்பின், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
21. ஜே. கமிலஸ் விதுஷன். பிடாரிகுளம், வவுனியா.
22. யே. அனன்சியா, சாளம்பன், ஆண்டான்குளம்.
23. தே. சகாயமேரி, அருப்பே இல்லம், பூவரசங்குளம்.
24. செ. யேசுதாசன். சாளம்பன், ஆண்டான்குளம்.
25. ஞா. செலஸ்ரீன். முதலைகுத்தி, உயிலங்குளம்.
26. இ. வரவணிக்கா, பிரதான வீதி, மடுக்கோவில்.
27. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
28. திருமதி. ரஜனி, எட்வின், திருகோணமலை.
29. ஜெ. அனோஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
30. ஏ. கனிஸ்ரா, செட்டிகுளம், வவுனியா.
31. ஜெ. ரிஷி, தேவன்பிட்டி, மன்னார்.
32. வே. அலெக்ஸ் றீகன், ஓமந்தை, வவுனியா.
33. ஆர். மீரா, பள்ளிமுனைக் கிழக்கு, மன்னார்.
34. கி. டிலக்ஷனா, அருப்பே சிறுமியர் இல்லம், மன்னார்.
35. அ. ஞானப்பிரகாசம், முதலைக்குத்தி, உயிலங்குளம்.
36. யே. றீற்றம்மா, சாளம்பன், ஆண்டான்குளம்.
37. ஜே. ஆன் நிந்துஷா, பிடாரிகுளம்.
38. சு. அன்ரனி பொபிக்ஷன், சிலாவத்துறை.
39. J. ஜோனிகா, சஞ்சீவனி, மாம்புரி.
40. ஜே. ஆன் லிவ்னி, அரிப்பு, மேற்கு.
41. டொ. டர்லினி றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
42. என். சூரியகலா, நல்லாயன் கன்னியர் மடம்.
43. ரெப்பேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
44. அ. ஒசின் சோபியா, தி. கன்னியர்மடம், மன்னார்.
45. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
46. P. சுவீரா, திருக்கும்ப கன்னியர் மடம், மன்னார்.
47. வி. மேரி றெஜினா, மடுக்கோவில்.
48. ஆ. தபிஷன் குரூஸ், 5ம் வட்டாரம், வங்காலை
49. யூ. நிசாந்தினி, திருநாவற்குளம், வவுனியா.
50. எம். மாலா, எமில்நகர், மன்னார்.

## அருட்பணி பெப்பி அடிகளாரின் வாழ்வும் பணியும் - ஓர் பார்வை

அருட்பணி. பெப்பி அடிகளார் திரு. லூக்காஸ் சந்தியா சோசை தந்தைக்கும் திருமதி மரியான் அருளம்மா லெம்பேட் தாய்க்கும் மகனாக 28.081959ஆம் ஆண்டு வங்காலையில் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வங்காலை புனித ஆனாள் மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றார்.

19.10.1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் காலடி பதித்து, தனது ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் தனது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் நிறைவுசெய்தார்.

08.08.1990ஆம் ஆண்டு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மடுத்திருப்பதியில் உதவிப் பரிபாலகராக (1990 - 1991), பேசாலை உதவிப் பங்குத்தந்தையாக (1991 - 1992), முருங்கன் உதவிப் பங்குத்தந்தையாக (1992 - 1993), நானாட்டான் பங்குத்தந்தையாக (1993 - 1996), செட்டிகுளம் பங்குத்தந்தையாக (1996 - 1999), சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணியக இயக்குனராக (1999 - 2014), வவுனியா பங்குத்தந்தையாக (2004 - 2006), வாழ்வுதய இயக்குனராக (2006 - 2011), மீண்டும் வவுனியா பங்குத்தந்தையாக (2011 - 2013) இவர் பணியாற்றியுள்ளார்.

2013ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பேராலயப் பங்குத்தந்தையாகப் பணியாற்றி வருகின்றார்.

## துறவற வாழ்வில் .....1ஆம் பக்கத் தொடர்

அமலித் தாயார் எனக் குருக்களால் அன்போடு அழைக்கப்படும் இவருடைய வைரவிழா நிகழ்வில் பெருமளவிலான குருக்கள், துறவியர், பொதுநிலையினர் கலந்துகொண்டனர்.

தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. ரி. நவரெட்னம் தலைமையில் இவ்விழாவுக்கான ஆயத்தங்களை தலைமன்னார் பங்குமக்கள் மேற்கொண்டிருந்தனர். திருப்பலி முடிவில் தலைமன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் மதிய விருந்து அளிக்கப்பட்டது.

## வாக்குச் சிதறும் நிலை குறித்து ....

### 1ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், தமிழ் மக்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிலவுவதாக குறிப்பிட்ட ஆயர், புதிது புதிதாகக் களமிறங்கியுள்ள கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்துவிடும் நிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டினார். கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராகச் சிலரால் முன்னெடுக்கப்படும் தவறான பரப்புரைகள் தொடர்பில் ஆயரிடம் சுட்டிக்காட்டப்பட்டபோது அவ்வாறு அதனை முன்னெடுப்பவர்கள் பலமானவர்கள் இல்லை என்று ஆயர் பதிலளித்ததாக ஆனோல்ட் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை விரைவாக அறிவூட்டவேண்டும் என்றும், கூட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்குக் கடுமையாக வேலைசெய்ய வேண்டும் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள ஆட்சிமாற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆயர் வலியுறுத்தினார் என்று ஆனோல்ட் தெரிவித்தார். இதேவேளை, கூட்டமைப்பில் கடந்த காலங்களில் போட்டியிட்டவர்களே மீண்டும் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் இருந்ததையும் ஆயர் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06
05
1942



உதிர்வு
07
08
2014

### திருமதி. ஆ. திரேசா றோச் (யோகம்மா)

(மணல்மோட்டை, மன்னார்)

"மனித இயல்புகொண்ட உடலாய் விதைக்கப்படுவது
ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது"
(1 கொரிந்தியர் 15:44)

எம்மையெல்லாம் உம் உதரத்தில் உருவாக்கி
இவ்வுலகத்தில் உலாவ வைத்த உத்தமியே!
அன்பின் திருவுருவமாக
எம்மை ஆதரித்த அன்புத் தாயே!
இன்முகம் மலர எல்லோரையும் அரவணைக்கும்
உம் பண்பை எத்தனை ஆண்டாயினும்
எப்படி மறப்போம் அம்மா?
என்றும் எம் வாழ்வோடு கலந்த எம் உயிரே
உம் உடல் மறைந்தாலும்
அழிவில்லா ஆன்மாவாக
என்றும் எம் இதயத்தில் வாழ்வீர்கள் அம்மா!

*உம் பிரிவால் துயருறும்:*
*கணவர், பிள்ளைகள், மருமக்கள்.*

## 6ம் ஆண்டு 5 1/2 ஆண்டு நினைவஞ்சலி





ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

*"உயிர்ப்பும் உயிரும் நானே.*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பினும் வாழ்வான்"*

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்

*உம் பிரிவால் துயருறும்:*
*சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.*
*தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. தொம்மை அந்தோனிப்பிள்ளை

திருமதி. அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை

(நாவாந்துறை, யாழ்ப்பாணம்)

மலர்வு : 27 - 10 - 1928
உதிர்வு : 23 - 07 - 2014

மலர்வு : 23 - 09 - 1932
உதிர்வு : 24 - 06 - 2014

*"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்." (உரோமர் 14:8)*

இல்லறத்து வாழ்வினிலே இணைபிரியா அன்றிலென
நல்லறத்தின் மகிமையினை இகத்தினிலே காட்டிவிட்டீர்
வல்லபரன் பாதமலர் இருவரும் சேர்ந்திடவே
நல்லவராம் இறைவனிடம் நாம் இறைஞ்சி நிற்கின்றோம்.

அன்பான குடும்பமதில் அருமைநிறை பிள்ளைகளில்
இன்பமுற இருவரையே இறைபணிக்காய் அர்ப்பணித்து
என்றுமுயர் திரித்துவத்தின் தூயஅருள் அடைந்தவரே
என்றுமிறை பாதமலர் தனிலிணைந்து வாழ்ந்திடுவீர்!

**இவர்கள் பிரிவால் துயருறும் :**
குடும்பத்தவர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## ரம்ழான் பெருநாளை ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்களின் கல்வியில் ஈடுபடுவோர் அவர்களுக்கு மனித மாண்பையும், உயிர், உடலின் மேன்மையையும் அவர்களுக்கு உரித்தான இனம், சமயம், கலாச்சாரம், சமூக நிலைமை, அரசியல் ஈடுபாடு போன்றவை பற்றிய தெளிவை வழங்கி ஒரு உயிரைக் கொல்வது என்பது பாதகமான செயற்பாடு என்று வலியுறுத்தி மதத்தின் பெயரால் இறைவனின் பெயரால் செயற்படுவதை நிறுத்த வேண்டும். இது இறைவனின் இரட்டிப்புத் தண்டனைக்கு உட்படுத்தப்படும் என்பதைப்பற்றிய அறிவை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

கல்வித் திட்டத்தில் மேற்கூறப்பட்ட பாதகமான செயற்பாடுகளுக்கு இடமில்லை. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் தமது சமய சம்பிரதாயப்படி இறைவனை அறிந்து, அவருடன் தொடர்புகொண்டு, உண்மைக்கு சான்றுபகர வேண்டும். இவை எமது வாழ்வின் நடத்தையில் வெளிப்பட வேண்டும்.

திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் 1982ஆம் ஆண்டு மாசி மாதம் 14ஆம் திகதி இஸ்லாமியத் தலைவர்களுக்கு கடுண்ணா நைஜீரியாவில் கூறியதுபோன்று "எமக்குத் தொழுகை செபம், ஒரு செல்வமாக இருக்கின்றது. எனவே எமது தொழுகையும், செபமும் உலக நீதிக்காகவும், சமாதானத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அமைய வேண்டும். எமது வாழ்வில் இருந்து பிரிந்து மதத்தின் பெயரால் மனித உயிர்களைக் கொல்வதில் இருந்து திரும்பி வரவும், அவர்கள் வாழ்வில் மனமாற்றம் ஏற்படவும் நாம் வழிகாட்ட வேண்டும்" எமது கொண்டாட்டம் தற்காலம், எதிர்காலம் பற்றிய எமது எதிர்பார்ப்பை இன்னும் வலுப்படுத்த வேண்டும். எமது எதிர்பார்ப்புக்களும், கனவுகளும் நனவாக வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து ரம்ழான் வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றோம்.

உங்கள் அனைவருக்கும் பெருவிழா வாழ்த்துக்கள்!

- அதிவண. ஜீன் லூயிஸ் கர்தினால் டுரான்,
தலைவர், சமயங்களுக்கிடையிலான திருஅவை, வத்திக்கான்.

## மன்னார் அரசினர் .......

5ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த 2009ம் ஆண்டு காலப்பகுதிமுதல் வன்னிப்பிரதேசத்தில் இடம்பெற்ற உக்கிரமான உள்ளக யுத்தம் காரணமாக பாதிப்புற்று மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்ட மக்களுக்கு அன்னையின் ஆலயமானது ஆறுதலும், அடைக்கலமுமாய் இருந்தது. அதுமாத்திரமன்றி நோயாளர் தொகை அதிகரிப்பு, இடமின்மை, பணியாளர் பற்றாக்குறை இவற்றால் உண்டான இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு, மன்னார் ஆயர் அவர்கள் முதற்தடவையாக இந்த ஆலயத்திற்கான விசேட பணிக்குரு ஒருவரை நியமித்தார். பணியின் தேவைகள் அதிகரித்துச் சென்றவகையில் இவரோடு இணைந்து செயற்படுவதற்கு அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள், விசேடமாக மன்னார்ப்பங்கு பொதுநிலைப்பணியாளர் ஆகியோர் கொண்ட பணிக்குழுக்கள் மதப்பாகுபாடின்றி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதே.

ஆலயத்தை மையப்படுத்தி பலவித மனிதநேயப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தினை அரச உத்தியோகத்தர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்வாலயத்தின் பணிக்குருவோடு இணைந்து பாகுபாடற்ற தம் சேவையினை வழங்கி ஒத்துழைத்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்ததாகவுள்ளதால் புதிதான ஆலயக்கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்படவிருப்பதும், எதிர்வரும் ஆவணி மாதம் 19, 20, 21ம் திகதிகளில் நவநாள் திருப்பலிகளும் 22.08.2015 மாலை 5.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலங்களில் இந்த ஆலயத்தின் நிர்வாகப்பணி பொறுப்புக்களை அமலமரிதியாகிகள் சபைக் குருக்களும், புனித பிரான்சிஸ்கன் சமாதான சபை அருட்சகோதரிகளும் அவர்கள் மாணவர்களும் ஏற்றுள்ளனர். ஆலய நிர்வாகத்தினரோடு இணைந்து தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

திருப்பலிகள் ஞாயிறு வாரத்தில் நோயாளர் வசதிக்காக இந்த ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. ஆரோக்கிய அன்னையின் அருள்வளங்கள் தொடர்ந்தும் அனைவருக்கும் கிடைக்கப்பெறுவதாக.

## திருகோணமலை ....

7ஆம் பக்கத் தொடர்ச்சி

திருகோணமலை மறைமாவட்டமானது 2 ஆயிரத்து 727 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 2012ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 14 ஆயிரத்து 795 கத்தோலிக்கர்கள் இங்கு வாழ்கிறார்கள். தூய கிழக்கு மலை எனப் பொருள்படும் திரு-கோண-மலை என்ற பெயரில் இருந்து திருகோணமலை என்ற பெயர் உருப்பெற்றுள்ளது.

உலகின் மிக அழகிய இயற்கையான துறைமுகத்தைக் கொண்டுள்ளமையால் திருகோணமலை போர்த்துக்கேயர், டச்சுக்காரர் - பிரான்சுக்காரர் - பிரித்தானியர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் 16ஆம் நூற்றாண்டுவரை உட்பட்டிருந்திருக்கிறது. இலங்கையில் பெரிய டச்சுக்காரரின் கோட்டை இங்கு அமைந்துள்ளது. இந்து மக்களுக்கும், பௌத்த மக்களுக்கும் தூய இடமாகக் கருதப்படும் திருகோணமலை பழைய கோவில்களும் - அழகிய கடற்கரையோரங்களும் - குளிர்ந்த வாவிகளும் - நீண்ட விவசாயக் காணிகளும் கொண்டமைந்த ஒரு நகராகும். கன்னியா வெந்நீர் ஊற்று சுற்றுலாப்பயணிகளை சுண்டி இழுக்கும் இடமாக திருகோணமலையை மாற்றியுள்ளது.

## மன்னார் மறைமாவட்ட ....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

முதன்மை விருந்தினராக வவுனியா மறைக்கோட்ட முதல்வரும், செட்டிகுளம் பங்குத்தந்தையுமான அருட்பணி. பெனோ அலக்சாண்டர் சில்வா கலந்துகொண்டார். வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த பல குருக்கள், துறவியர், பொதுநிலையினர் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கண்கவர் நடனங்கள், கருத்துச்செறிவுள்ள நாடகங்கள் மற்றும் இன்னிசை கானங்கள் என இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு அம்சமாக "இன்றைய நவீன சமூகத் தொடர்பு சாதனங்கள் குடும்ப உறவை வளர்க்கின்றனவா? அல்லது சிதைக்கின்றனவா?" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெற்றது. வவுனியா இறம்மைபக்குளம் திருக்குடும்ப விடுதி மாணவிகள் இதில் பங்கேற்றிருந்தனர். இப்பட்டிமன்றத்திற்கு நடுவராக கிளரீசியன் சபையைச் சார்ந்த அருட்பணி. சூசைநாயகம் கலந்துகொண்டார்.

### மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- **மன்னா நிர்வாகம்.**

### தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா




## ௧வது பிறந்தநாள் வாழ்த்து!

### நகுலேஸ்வரன் ஹரிஷா

(22.08.2014 - 22.08.2015)

நகுலேஸ்வரன் கொன்ஸி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஹறிஷா தனது 1வது பிறந்த நாளை மன்னார், கீரியிலுள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, பப்பா, அம்மம்மா, இலண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, மாமா, அப்பப்பா அப்பம்மா, பெரியப்பா, கனடாவில் வசிக்கும் மாமா, அத்தை, பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இறையாசியுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: வி. என். லோறன்ஸ் குடும்பத்தினர்,
எழுத்தூர், மன்னார்.

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(23.08.1965 - 23.08.2015)

### திரு. திருமதி. மாசில்லாமணி, பற்றிமா நவநாயகி

(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

இறைவனில் இணைபிரியா
அன்பு உள்ளங்களே,
இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாகி
உயிரில் கலந்து உறவில் மகிழ்ந்து,
இல்லறத்தின் நற்பயனாய் மக்கள்
நான்கினையும் பேரப்பிள்ளைகள்
ஏழினையும் பாங்குடனே வளர்த்து,
பாசத்தை ஊட்டி அன்பைப் பொழிந்து
வாழ்வளித்த தெய்வங்கள் நீங்கள்!
இந்நாள்வரை இறையாசி பொழிந்து
வாழ்வித்த இறைவனுக்கு நன்றிகள்.
நீவிர் பல்லாண்டு காலம்
நற்சுகத்துடன் இனிதே வாழ
இறையாசீர் வேண்டி மனமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மருமக்கள், மருமகன்மார்,
சகோதரர் சகோதரிகள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(23.08.1965 - 23.08.2015)

### திரு. திருமதி. வெலிச்சோர் குமாரசிங்கம் அருள்சீலி அன்னம்மா (மாந்தை)

இல்வாழ்க்கை என்ற பேரின்பச் சோலையில்
பறவைகள்போல் பறந்து திரிந்து
50 ஆண்டுகளைக் கடந்த எம் பாசமிகு தெய்வங்களே!
எங்கள் உயர்வுக்காய்த் திரியாகக் கருகி
மெழுகாக உருகி ஒளி கொடுத்த தியாகத் தீபங்களே!
எந்நாளும் நீங்கள் நலமுடன் பல்லாண்டு வாழ
இந்நாளில் நாங்கள் இனிதுற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
மகன் (அருட்தந்தை எமில் எழில்றாஜ் அடிகளார் சிறுக்கண்டல் பங்குத்தந்தை), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(21.08.1965 - 21.08.2015)

### திரு. திருமதி. பி. செபமாலை சராம் அருளம்மா

(கன்னாட்டி, முருங்கன்)

இல்லறம் என்னும் நல்லறப் பந்தலில்
ஆண்டுகள் ஐம்பதை இறையருளால்
இனிதே வாழ்ந்திட்ட எம் பாசமிகு பெற்றோரே!
உம் வாழ்வின் தடைக்கற்கள் அனைத்தையும்
ஆயிரம் படிக்கற்கள் ஆயிற்று.
சுமைகள் யாவும் சுகங்களானது.
சோதனைகள் எல்லாம் சாதனைகளானது.
இறை நம்பிக்கையில் இதுவரை காலமும் வாழ்ந்திட்ட
நீங்கள் என்றும் நலமுடன் மகிழ்வுடன் வாழ
வாழ்த்துகின்றோம் உம் உறவுகள் நாம்!

வாழ்த்துக்கள் கூறுவோர்:
அன்புச் சகோதரர்கள், அருமைப் பிள்ளைகள், பாசமிகு மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(27.08.1965 - 27.08.2015)

### திரு. திருமதி. K.F. கிருபைநாயகம் றீற்றா

(பாலைக்குளி, அடம்பன்)

தடைக்கற்களை வாழ்வுப் படிக்கற்கள் ஆக்கினீர்கள்
சவால்களைப் பெரும் சாதனைகள் ஆக்கினீர்கள்.
சிலுவைகளை நாளும் சுகமாகச் சுமந்தீர்கள்
இல்லற வாழ்வில் பொன்விழாவைக் காண்கிறீர்கள்.


இந்நாள் வரையில் உம்மைக் காத்திட்ட இறைவனுக்கு
இருகரம் கூப்பி நாம் நவில்கின்றோம் நன்றிகளை.
இன்னும் பல்லாண்டுகள் இன்புற்று வாழ்ந்திடவே
இறைஞ்சியே இறைவனிடம் இறையாசீர் வேண்டுகிறோம்.
வாழ்க வளமுடன் பல்லாண்டுகள் வாழ்கவென
அக்களிப்புடன் வாழ்த்துகின்றோம் அன்புப் பிள்ளைகள் நாம்!

பாசமுடன் வாழ்த்துவோர் :
அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 - 08 - 1974
உதிர்வு: 18 - 08 - 2014



### அருட்பணி. தேவதாசன் எட்வின் (அ.ம.தி)

(குருத்துவத்தின் மகிமையில் (12.11.2007)
"எளியோர்க்கு நற்செய்தி நவில"

முன்நூற்று அறுபத்தைந்து நாட்கள்
முற்றமதில் உமைக் காணாமல்
முழுமையாய் ஓடி மறைந்ததையா.
முழுமதியே எமைவிட்டு நீர் பிரிந்து
முப்பொழுதும் உம்மை எண்ணா நேரமில்லை.
எம்பொழுது உமைக் காண்போம் என ஏங்கி
செப்புதற்கு எமக்கிங்கு வார்த்தை இல்லை.
செய்த பணி போற்றுகின்றார் பங்கு மக்கள்
அப்பனே அலறியே அழுகின்றோம்.
ஆசீரை எமக்கு நீர் பொழிந்திடுவீர்.
"இறை உறவில் நீர் என்றும் துயில் கொள்வீராக"

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07 - 01 - 1993
உதிர்வு: 24 - 08 - 2014



### செல்வன். எ. எட்மதாஸ்

(நானாட்டான்)

வாழும் வயதினிலே சதிகாரர் உன்னை
எமனுக்கு இரையாக்கி விட்டனரே!
நீமடிந்து முன்னூற்றி அறுபத்தைந்து பொழுது விடிந்தாலும் ஒருபொழுதும் உன் நினைவு இல்லாமல் விடிந்ததில்லை.
காலமெல்லாம் எம்மோடு வாழ்வாய்
என்றுதானையா நினைத்தோம்.
இடைநடுவில் எம்மைக் கதிகலங்க வைத்ததேனோ!
உம் வதனம் கொஞ்சும் மொழிப்பேச்சு
இனி நாம் எங்கு காண்போம்?
உம் ஆன்மா இறைவனின் சந்நிதியில் மகிழ்ந்திருக்க
நாம் அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08 - 08 - 1974
உதிர்வு: 10 - 08 - 2014



### திருமதி. பிலோமினா (லில்லி) அன்ரன் யோகநாகம்

(குமானாயங்குளம், அடம்பன்)

எங்களின் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று உருண்டோடிவிட்டது.
ஆனாலும் உங்கள் நினைவுகளால்
நிதம் நிதம் கண்ணீர் விடுவதைத்
தடுக்கமுடியவில்லையே?
நினைவுகளிலும், கனவுகளிலும்
நீங்கள் எம்மோடு இருப்பதாகவே
உணர்கின்றோம்.
"உங்களின் நினைவே எங்களின் கோயில்"

உம் பிரிவால் துயருறும்: கணவன், மகள்.


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org